ரஷ்யாவின்

ரகசிய

ஆயுதம்

21 JUN 52
MADRAS

டசன் காட்டேர்.

V58
N51
108596

ரஷ்யாவின்

ரகசிய ஆயுதம்

ஆசிரியர்:

டைசன் கார்ட்டெர்,

கனடா.

தமிழாக்கம்:

எஸ். சண்முகம்

சிந்துபூந்துறை, : : திருநெல்வேலி.



வெளியீடு:

இலக்கியப் பதிப்பகம்

ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்.

முதற்பதிப்பு: மார்ச் 1951.

கிடைக்குமிடம்:

S. R. சுப்பிரமணிய பிள்ளை,

புக்செல்லர் & பப்ளிஷர்

திருநெல்வேலி ஜங்ஷன்.

விலை ரூபாய் ஒன்று.

Printed at.

Sri Raman Press, Tuticorin.

பொருளடக்கம்.

அறிமுகம். ...

முகவுரை. ...

முன்னுரை. ...

1. நூதனப் புது வாழ்வு. 1
2. சூரியன் மீது சோவியத் வெற்றி. 21
3. ரகசிய ஆயுதம் உருவாகிறது. 32
4. நிலக்கரியின் மீது ஆதிக்கம். 36
5. அணுவும் போரும். 48
6. தீர்க்க தரிசனம். 54
7. விஞ்ஞானம் தோற்றுவித்த ஆஸ்பத்திரி. 61
8 அறியாமையிலிருந்து அறிவியலுக்கு. 76
9. ரஷ்ய ராணுவத்தின் மூலை. 82
10. லட்சோப லட்சம் வீரர். 86
11. நாடு முழுதும் போர்க்கோலம் பூண்ட புதுமை. 97
12. விடுதலை பெற்ற புதிய குடும்பம். 103
13. சோவியத் பெண்களும் திருமணமும். 116
14. விடுதலை பெற்ற குழந்தைகள். 126
15. மத சுதந்திரம். 138
16. நூதனப் புது உலகம். 148
17. மனித சமுதாயத்திற்கு ஏற்ற வாழ்வு. 166

முடிவுரை. ...

ஆசிரியரின் இதர வெளியீடுகள்.

சோவியத் ஜனநாயகம்

வருங்கால உலகம் முதலாளித்துவமா? சோஷலிஸமா?

புது உலகம்.

சோவியத் அரசாங்கம்.

சாக்கோ வான்ஸெட்டி.

மிருக வாழ்க்கை.

மாபெரும் சதி.

அறிமுகம்.

சுமார் முப்பத்திமூன்று ஆண்டுகளுக்கு முன், ரஷ்யா மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருந்தது. அந்நிய முதலாளிகளும் சுதேச நிலப் பிரபுக்களும் ரஷ்ய மக்களைச் சுரண்டி வாழ்ந்தனர். பஞ்சமும் பிணியும் மக்களை வாட்டின. அதற்கு அன்றுள்ள ரஷ்ய நிலைமையையும், குறிப்பாக ரஷ்ய விவசாயிகளின் தாங்கொணாத் துன்பங்களைப் பற்றியும், டால்ஸ்டாய் என்னும் உலகப் புகழ் பெற்ற ரஷ்யப் பெரியார் எழுதிய நூல்களே தக்க சான்று. ஐரோப்பாவிலேயே தற்குறிகள் மிகுந்த நாடு ரஷ்யாதான். அது அறியாமைக்கும் மூடப்பழக்க வழக்கங்களுக்கும் உறைவிடமாக இருந்தது. புதை பொருள்கள் ஏராளமாயிருந்தும் தொழில் வளர்ச்சி இல்லை. ஜாதி, மத, இனப் பூசல்கள் மலிந்திருந்தன. ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட முறைப்படி ஒரு தேசிய இனத்திற்கு எதிராக மற்றொன்றைத் தூண்டி விட்டு, ஜார் அரசாங்கம் எல்லோரையும் அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வைத்திருந்தது. அடக்கு முறை தலைவிரித்தாடியது.

1917-ல், மாபெரும் புரட்சி எழுந்தது. ஜார் ஆட்சி வேரோடு சரிந்து விழுந்தது. ரஷ்ய மக்கள் விடுதலை பெற்றனர். மக்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்ட

மக்கள் சர்க்கார் நிலை பெற்றது. அதன் பின் முப்பத்தி மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்று, சோவியத் ரஷ்யா உலக மக்களின் வியப்பையும் கருத்தையும் ஈர்ண்டும் நாடாக விளங்குகிறது. இதோ நம் நாட்டுப் பெரியார் சிலர் சொல்வதைக் கேளுங்கள்:

"மனித வர்க்கத்தின் முன்னேற்றச் சரித்திரத்தில் கால் நூற்றாண்டு என்பது ஒரு நாடி துடிக்கும் நொடிப் பொழுதென மதிக்கப்படும். இவ்வளவு குறுகிய காலத்தில் நீங்கள் ஆற்றியுள்ள அற்புதங்களையும் சாதித்த மகத்தான செயல்களையும் வியப்புடன் கண்ணுரக் கண்டு வருகிறோம். உங்களுடைய எதிர்கால வாழ்விற்கு நீங்களே கர்த்தா என்று அசையாத நம்பிக்கையுடனும் தளராத உறுதியுடனும் ரத்தம் சிந்திக் கண்ணீர் வடித்து, உன்னதத் தியாகம் செய்தீர்கள். அதன் பயனாக, நொறுங்கி விழுந்த ஏகாதிபத்திய மண்ணிலிருந்து சிறப்பு மிக்க ஜனநாயக உலகை நிருவி விட்டீர்கள். பழுதான வண்டிகளைப் போன்று ஓடிந்து கிடந்த விவசாயிகளைப் பழுது பார்த்துப் பூட்டி சரியான திசையில் ஓட்டி சுதந்திர மண்டலத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டீர்கள்."—சோவியத் யூனியனின் இருபத்தாருவது ஆண்டு விழாவில், இந்தியாவின் சார்பில் சோவியத் மக்களுக்கு கவியரசி சரோஜினி தேவியின் வாழ்த்து.

"ஏகாதிபத்திய வல்லரசுகள் தமது ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளை உறிஞ்சிக் கொழுக்கின்றன. ஆனால், சோவியத் ரஷ்யாவில் நூற்றுக்கணக்கான தேசீய இனங்களின் நலன்கள் தனித் தனியாக அக்கரையோடு கவனிக்கப்படுவதை நான் நேரில் கண்டேன். நேற்றுவரை நாடோடிகளாக, நாகரிகம் இல்லாமல் இருந்த பல ஜாதியி

னர், இன்று சோவியத் அரசாங்கத்தின் சலியாத முயற்சியின் பலனாக, நாகரிகத்தின் விளைவுகளை அனுபவிக்கும் தகுதி பெற்று வருகிறார்கள். இந்த முற்போக்கைத் துரிதமாக்க, ஏராளமான செலவில் அவர்களுக்குக் கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. விதம் விதமான பண்பாடுகளை உடைய இருநூறு தேசிய இனங்கள் இன்று நேசப் பான்மையில் கைகோத்துக்கொண்டு, சமாதானம், சகோதரத்துவம், முற்போக்கு என்னும் லட்சியங்களை நோக்கி விரைவாக முன்னேறிச் செல்கின்றன."—கவி ரவீந்திரநாத் தாகூர்.

"ஜன நாயகமும் சோஷலிஸமும் சோவியத் யூனியனில் காட்சியளிக்கின்றன; அது சர்வாதிகார நாடு என்பது சுத்தப் பொய். மனிதன் உழைப்பை மனிதன் சுரண்டும் முறை அங்கு அறவே ஒழிந்து போயிற்று. முதலாளித்துவ வர்க்கமும் சுரண்டல் கும்பலும் அங்கில்லை. கடந்த முப்பத்திமூன்று ஆண்டுகளில், சமூக.பொருளாதார கலாச்சாரத் துறைகளில் சோவியத் யூனியன் பிரமாண்டமான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. சோஷலிஸ சமுதாய அமைப்புக்கு சமாதானம் அவசியம். எனவே, அது சமாதானத்திற்காக அரும்பாடு படுகிறது".-1950-ல், சோவியத் யூனியனை நேரில் கண்டு திரும்பிய சோஷலிஸ்டு தலைவி அருணா ஆசப் அலி.

சுமார் முப்பத்திமூன்று ஆண்டுகளில், நம் தலைவர்கள் பாராட்டுதற்குரிய வளர்ச்சியுறுதற்கு, ரஷ்யா கையாண்ட ரகசிய ஆயுதம் எது?

அந்த ரகசிய ஆயுதம் எது என்பதை ஆசிரியர் டைசன் கார்ட்டெர் இந்நூலில் விளக்குகிறார். அது ஏன்

ரகசியமாக இருந்து வந்தது? ரஷ்யர்கள் அதை மறைத்து வைக்கவில்லை. ஆனால் உலக முதலாளிகள் சோவியத் ரஷ்யாவைச் சுற்றி இரும்புத் திரையிட்டு நம் கண்களை மறைத்ததுதான், அது ரகசியமாக இருக்கக் காரணம்.

டைசன் கார்ட்டெர் கனடா நேசிய ஒலி பரப்பு நிலையத்தில் விஞ்ஞான எழுத்தாளர். அவர் இயந்திர ஆராய்ச்சியிலும் விஞ்ஞானத்திலும் பட்டம் பெற்றவர். அவர் இரண்டாவது உலகப் போர் நடைபெற்றபொழுது, சோவியத் யூனியனுக்குச் சென்று, தான் நேரில் கண்ட காட்சிகளை நம் கண் முன் நிறுத்துகிறார்.

இந்நூலைத் தமிழாக்கியவர் திரு, எஸ். சண்முகம். சோவியத் மக்களது வாழ்க்கையின் பல துறைகளைப் பற்றியும் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில், எளிய தமிழ் நடையில், "சோவியத் அரசாங்கம்", "சோவியத் ஜன நாயகம்", "புது உலகம்", "மாபெரும் சதி" என்ற நூல்களை மொழி பெயர்த்திருக்கிற அதே முறையில், "ரஷ்யாவின் ரகசிய ஆயுதம்" என்ற இந்நூலையும் அதன் வேகமும் நயமும் குன்றுமல் தமிழாக்கியுள்ளார்கள். சோவியத் ரஷ்யாவைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்புகிற ஒவ்வொரு தமிழனும் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும்.

பாளையங்கோட்டை,
1—3—1951.

கு. சினிவாசன்.

முகவுரை.

"செஞ்சேனையைப் போல் எதிரிக்கு உதை கொடுத்து, அளவிலா கஷ்ட நஷ்டங்களைச் சமாளித்துத் தலை நிமிர்ந்து நிற்கும் ஒரு ராணுவத்தை, உலக வரலாற்றில் இதுவரை கண்டதில்லை; இனியும் பல வருஷங்களுக்குக் காணமுடியாது" என்று, 1943 நவம்பர் 9–ல், சர்ச்சில் வியந்து பேசினார்.

உண்மையில் அது ஒரு அற்புதந்தானா? ஆம் தாங்கள் நிர்மாணித்த புது வாழ்வைப் பாதுகாக்க மக்கள் காட்டிய ஒப்புயர்வற்ற வீரம் அளவுகடந்த சகிப்புத் தன்மை; இவைதான் அற்புதத்தின் அடிப்படை.

செஞ்சேனையின் வெற்றிகளுக்கு எதிர்பாராத காரணம் ஒன்றுமில்லை. உலக வரலாற்றிலேயே முதன் முறை மனித உழைப்பினால் உருவாக்கப்பெற்ற ஒப்பற்ற ஒரு அமைப்பின் பலனே அவ்வற்புதம்.

சோவியத் மக்கள் சாதித்த மகத்தான வெற்றிகளின் வரலாற்றை இந்நூல் கூறுகிறது. ஒரு சிலரின் லாபத்திற்காக அல்லாமல் எல்லா மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற விஞ்ஞானம்தான் ரஷ்யாவின் ரகசிய ஆயுதம். சாதாரண மக்களின் திறமையும் அறிவும் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன; எப்படி அபிவிருத்தி செய்யப்பட்டன, என்ற விவரத்தை இந்நூல்

தெளிவாகச் சொல்லுகிறது. இந்நூற்றாண்டில் உலக மக்களின் வாழ்க்கை முழுவதையும் மாற்றும் அளவுக்கும் கற்பனையையும் கடந்து செல்லும் அளவுக்கும் சோவியத் விஞ்ஞானம் முன்னேறியிருக்கிறதென்பதை இது தெளிவு படுத்துகிறது.

இந்நூல் கனடாவில் ஒரு லட்சத்திற்கு மேல் விற்பனையாகியிருக்கிறது. நமது நேச நாடாகிய சோவியத் ரஷ்யாவைப்பற்றி அறிய விரும்பும் ஒவ்வொருவரும் இப் புத்தகத்தைப் படிக்க வேண்டும்.

ஆசிரியர்.

முன்னுரை.

பாசிஸப் படைகளை நிலை தடுமாறச் செய்து, உலகத்தின் கவனத்தைக் கவர்ந்த சோவியத் ரஷ்யாவின் வலிமைக்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று அதன் கொள்கை; மற்றொன்று அதன் விஞ்ஞானம். இவ்விரண்டும் உண்மையில் ஒன்றே. பொருள்கள், சக்திகள் ஆகிய இவ்விரண்டின் உண்மையை ஆராய்வதே விஞ்ஞானத்தின் அடிப்படை. மனிதனின் இயற்கையையும் அவனது செயல்களையும் ஆராய்ந்து அவற்றின் அடிப்படை உண்மையை உணர்த்துவதே கொள்கை.

நாட்டுக்கு நலனளிக்கும் ஓர் உண்மைத் தோழனாக விஞ்ஞானம் சோவியத் யூனியனில் வரவேற்கப்படுகிறது. சோவியத் ஆட்சியாளர் அதனைப் பெரிதும் மதித்து வளர்க்கிறார்கள். சாதாரண மக்கள் அதைப் பாராட்டுகிறார்கள். குழந்தைகள் விஞ்ஞானக் கண்ணோட்டம் பெறப் பயிற்சியளிக்கப்படுகிறார்கள்.

தொழில், ஆராய்ச்சி, வைத்தியம், ஆட்சிமுறை, பாசிஸ எதிர்ப்புப் போர் ஆகிய எல்லாத் துறைகளிலும் விஞ்ஞானம் பயன்படுகிறது. அதுதான் ரஷ்யாவின் ரகசிய ஆயுதம். அதை ரகசியமாக வைத்திருக்க வேண்டுமென்று, சோவியத் யூனியன் விரும்பவில்லை. உலகின் ஆறில் ஒரு பகுதியான சோவியத் ரஷ்யாவில் என்ன நடைபெறுகிறதென்பதை அறிந்துகொள்ள மனமின்றி

கண்களை இறுக மூடிக்கொண்டிருந்ததுதான் அது ரகசிய மாயிருக்கக் காரணம்.

அந்த ரகசியத்தைத்தான் டைசன் கார்ட்டர் இந் நூலில் வெகு அழகாகச் சித்திரித்துக் காட்டுகிறார். ஒரு சிறந்த பத்திரிகை நிருபர் எழுதுவதைப் போல யாருக்கும் புரியும்படி இதனை எழுதியிருப்பது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் மிகப் பலர் இம்முறையை வரவேற்பார்கள்.

ரஷ்யா விஞ்ஞானத்தை எவ்வாறு போற்றுகிறது, விஞ்ஞானத்தின் துணைகொண்டு என்ன செய்திருக்கிறது, என்பவற்றைப்பற்றி இந்நூலில் படிக்கிற நாமும் அவ்வாறு செய்ய முடியும் என்பதை நினைவில் வைக்க வேண்டும். அறிவை விருத்தி செய்து கொண்டு கொள்கைப் பிடிப்போடு ரஷ்யாவைப்போல முன்னேறி ஒரு புதிய மகத்தான சமூகத்தை அமைப்போமானால், அவர்கள் பெற்றிருக்கும் வெற்றிகளை நாமும் அடைய முடியும்.

ஹியூலட் ஜான்சன் கேண்டர் பரிசின்.

1. நூதனப் புது வாழ்வு

சரித்திரம் கண்டறியாத மாபெரும் ராணுவத் தாக்குதலை எதிர்த்துத் தீரமாகப் போராடி, சோவியத் யூனியன் உலகம் பிரமிக்கத் தக்க வெற்றிகளைச் சாதித்தது நாஜி பொய்ப் பிரச்சாரத்தினால் இதுவரை மறைக்கப் பட்டிருந்த சோவியத் வீரர்களின் வீரத்தைப் பற்றியும், சோவியத் மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள நேச நாட்டு மக்கள் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

இன்று ரஷ்யாவைப் பற்றிக் கிடைக்கும் புள்ளி விவரங்கள், படங்கள், கதைகள் ஆகியவை அந்நாட்டைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற மக்களின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யப் போதுமானவையாக இல்லை. எனவே நாமனைவரும் முக்கியமானதொரு கேள்வியைக் கேட்கிறோம்.

சில வருடங்களுக்கு முன் பிற்போக்கான விவசாய நாடாக இருந்த ரஷ்யா சிறந்த வல்லரசாக வளர்ச்சியுறக் காரணமென்ன? இக்கேள்விக்குப் பொதுவாகக் கீழ்க் கண்ட பதில் சொல்லப்படுகிறது.

"சோவியத் வெற்றிக்குக் காரணம், 1917-ல், ரஷ்யாவில் ஒரு பெரும் புரட்சி தோன்றி, முதலாளித்துவ அமைப்பைக் கவிழ்த்து, சோஷலிஸ அமைப்பை நிறுவியதுதான்."

பிற நாடுகளிலுள்ள பொது மக்களுக்கு இவ்விடையினால் யாதொன்றும் விளங்காது

1932-ல், சோவியத் விஞ்ஞானிகளின் நூல்களைப் படிக்கத் தொடங்கினேன். அக்காலத்திலிருந்து என் கவனம் ரஷ்யா மீது திரும்பியது. அது முதல் நான் சோவியத் யூனியனைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். சோவியத் யூனியனில் பிரம்மாண்டமான அபிவிருத்திகள் ஏற்படும் என்று, "நீங்கள் புதுப் புனைவுகளை விரும்பினால்" * என்ற எனது நூலில் 1938-ல் குறிப்பிட்டிருக்கிறேன். பிற நாடுகளைவிட குறிப்பிடத்தகுந்த அபிவிருத்திகள் சோவியத் நாட்டில் மட்டும் ஏற்படுவதற்கான காரணங்களையும் அதில்விளக்கியிருக்கிறேன்.

வருங்காலத்தில் எத்தகைய அபிவிருத்திகள் ஏற்படும் என்று நான் கூறினேனோ அவை இன்று நடைமுறையில் நிறைவேற்றப்படுகின்றன. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஆச்சரியப்படத் தகுந்த அளவிற்கு சோவியத் யூனியன் முன்னேறியிருக்கிறது. அயல்நாடுகளில் தொழில்கல்வி பயின்ற ஒரு சிலருக்குத்தவிர, பிறருக்கு இம்முன்னேற்றங்களைப் பற்றி அதிகமாகத் தெரியாது. அப்படி ஒன்றிரண்டு தெரிந்தவர்களும் தங்களுக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்வதில்லை. பொது மக்கள் மட்டு

* (If you want to invent.)

மல்ல, தொழில் துறையிலுள்ள நிபுணர்களில் பெரும் பான்மையோருக்குக் கூட ரஷ்யாவின் நிலை தெரியாது.

உண்மை இதுதான்:

சோவியத் ரஷ்யாவிடம் ஒரு ரகசிய ஆயுதம் இருக்கிறது. அதன் உதவி கொண்டு, சமூக, அரசியல், பொருளாதார துறைகளில் சாத்தியமில்லை என்று கருதப்பட்ட அமைப்புகளை ரஷ்ய மக்கள் கட்டி முடித்திருக்கிறார்கள். **அந்த ரகசிய ஆயுதம் விஞ்ஞானம்.**

அங்கே விஞ்ஞானம் பேராசிரியர்களுடையதல்ல; எஞ்சினீயர்களுடையதல்ல, *எயின்ஸ்டீன்களுடையதல்ல, சர்வ கலாசாலைகளுடையதல்ல, மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்டதுமல்ல, அது புதுமையானது; மக்கள் அறிந்து கொள்ளக்கூடியது; மக்கள் பயன் படுத்தக்கூடியது ஜீவசக்தியுள்ளது. அது யுத்தகாலத்திலும், சமாதான காலத்திலும் மக்களின் உறுதுணையாய் நிற்பது. நெடுங்காலமாகச் சிறந்த விஞ்ஞான நிபுணர்கள் கனவு கண்டது. அந்த உயரிய ஆயுதம் மனித இதயத்தில் உருவாக்கப்பட்டு, **ஆண், பெண், குழந்தை அனைவருக்கும்** பயன்படுமாறு அளிக்கப்படுவது. அது மனித வர்க்கத்தின் மகத்தான வருங்காலத்திற்கு எதிரியாக நிற்பவர்களை வெட்டி வீழ்த்தும் வலிமை வாய்ந்த ஆயுதம்!

சோவியத் வாழ்க்கையில் விஞ்ஞானம் வழிகாட்டாத துறையே கிடையாது. விளங்காத புதிர் என்றும், விந்தை என்றும், வெறுக்கத்தக்கதென்றும் இவ்வாறு

---

* (எயின்ஸ்டீன் என்பவர் ரிலேட்டிவிட்டி என்ற தத்துவத்தைக் கண்டறிந்த விஞ்ஞானி)

சோவியத் நாட்டைப்பற்றிச் சொல்லப்படுகிற ஒவ்வொரு கூற்றையும், அந்த ரகசிய ஆயுதத்தினுல் ஆராய்ந்தால், ஐயம் நீங்கி தெளிவு தோன்றும். இப்புதிய விஞ்ஞானம் எவ்வாறு பிறந்தது? அது சாதித்ததென்ன? ரஷ்ய மக்களின் அன்றுட வாழ்வில் அது எப்படிப் பயன் படுகிறது? செஞ்சேனையின் வீரச் செயல்களால், அதன் அபார சக்தி எங்ஙனம் உலகிற்கு வெளியாயிற்று? என்ற விவரங்களைத் தெளிவாக்குவதே இச்சிறு நூலின் நோக்கம்.

மனிதன் மிருகங்களினின்றும் பல வகையில் மாறுபட்டவன் என்று விஞ்ஞானம் கூறுகிறது. இயற்கைச் சக்திகளை அவன் தன் நலனுக்காகப் பயன் படுத்துகிறான். உலகிற்குத் தகுந்தாற்போல தன்னை மாற்றிக் கொள்வதற்குப் பதில், தனக்குகந்தாற்போல் உலகை மாற்றுகிறான். உணவு, உடை, சக்தி போன்ற பல வசதிகளைத் தயாரிக்க அவன் இயற்கைப் பொருள்களையும் சக்தியையும் பயன் படுத்துகிறான். சுருங்கச் சொல்லின், மனிதன் தன் விருப்பம்போல் இயற்கையை அடக்கி ஆளும் வல்லமை பெற்றிருக்கிறான்.

ஆனல், இதில் ஒரு குறை இருக்கிறது. விலங்குகளைப்போல காடுகளில் வாழ்ந்து வந்த மனிதன் எவ்வளவு விரைவில் மிருகங்களைவிடச் சிறந்தவன் ஆனன் என்பது நமக்குத் தெரியும். ஆயினும், மனிதன் இயற்கையைத் தனக்கு ஏவல் செய்யப் பயன் படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து, மிருக உள்ளம் படைத்தவர்களும் இருந்து வந்திருக்கிறார்கள். இம்மிலேச்சர்கள் பிறரை அடிமைப் படுத்த முயற்சித்தனர். அவருக்குத் தக்க அடிமை முறையைத் தோற்றுவித்தனர். இதை எதிர்த்து மனிதன் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் போராடினன்.

இறுதியில் அவ்வமைப்பை உடைத்தெறிந்தான். எனினும், மக்களை வறுமையிலும், துன்பத்திலும் ஆழ்த்தி வைப்பதற்காக அக்கொடியவர்கள் பல வழிகளைக் கையாண்டு பார்த்தார்கள். நில அடிமை முறையையும் நிலப் பிரபுத்துவ முறையையும் கைக்கொண்டார்கள். கொடிய மதப் போர்களைக் கிளறி விட்டார்கள். சிந்தனைக்கு அணை போட்டார்கள். புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட நாடுகளிலுள்ள மக்களைக் கொள்ளையடித்து பணம் குவித்தார்கள்.

முடிவாக இக்கொடியவர்கள், ஹிட்லரும் அவனது கூட்டாளிகளும் உலகெங்கும் பரப்ப முயன்ற பாசிஸக் கொள்கையை ஆதரித்தனர்.

இவ்வாறு ஆட்சியாளர் கையாண்ட சாதனங்களில் ஒரு விஷயத்தில் ஒற்றுமை காணப்பட்டது. மக்கள் தங்களுடைய அபார சக்தியை அறிந்து கொள்ளா வண்ணம், அவர்களில் மிகப் பெரும் பான்மையோரை அடிமைப் படுத்தி அறியாமைப் படுகுழியில் ஆழ்த்தினர்கள். ஆனல், மனிதவர்க்கத்தின் நலனுக்காகவும், இன்பத்திற்காகவும் இயற்கைப் பொருள்களையும் சக்திகளையும் பயன் படுத்த வேண்டும் என்று நீண்ட காலமாகவே மக்கள் விரும்பினர்கள். மனித வாழ்வின் விரோதிகளான பசி, குளிர், நோய், துன்பம் ஆகிய கேடுகளைக் குருட்டுத்தனமாய் எதிர்க்காமல், கோடிக்கணக்கான மக்கள் ஒன்று பட்டு, இயற்கையின் மீது வெற்றி காண்பதன் மூலம் பெறலாம். இது கொடியவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதாகும்.

இக்கனவை நனவாக்குவதெப்படி என்று மனிதன் ஆராய்ந்தறிவதற்குள் நூற்றுக் கணக்கான ஆண்டுகள்

கழிந்து விட்டன. கடைசியில் அந்த ரகசியம் கண்டுபிடிக்கப் பட்டது

இயற்கையை மனித சமுதாயத்திற்குப் பணியாற்றச் செய்வதற்கான நூதன ஆயுதம் அது. அப்புதிய ஆயுதத்தின் பெயர் விஞ்ஞானம்.

இம்மந்திரச் சொல்லை முதன் முதலாக மனிதன் உச்சரித்தபொழுது அவ்வரக்கர்கள் நடுங்கினர்! கொடுமை, அச்சம், அறியாமை ஆகிய கேடுகளிலிருந்து விஞ்ஞானம் மனிதனை நிரந்தரமாக விடுவிக்கும் என்பதைக் கண்ட அவர்கள், விஞ்ஞானத்தையே அழித்து விடும்படி கட்டளையிட்டனர். பழங்காலத்தில், அதாவது மனிதனது அறிவு விரிவடைவதற்கு முன்பு, நூற்றுக் கணக்கான ஆண்டுகள் விஞ்ஞானிகள் வேட்டையாடப் பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், கண்டதுண்டமாக்கப் பட்டார்கள். இக்கொடிய செயல்களால் விஞ்ஞானிகளின் எண்ணங்களைத் தடுக்க முடியவில்லை. பெயர்கூடத் தெரியாத நூற்றுக் கணக்கான பாதிரிகளும் வீரர்களும் விஞ்ஞானச் சுடர் அணைந்து போகாமல் பாதுகாத்து வந்தனர். அப்பொழுது அதற்குப் புகலிடம் மடங்கள் தான்.

விஞ்ஞானம் மீண்டும் தலை காட்டியபொழுது, என்ன நடந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்த கதை தான். விஞ்ஞானத்தை அழிக்க முடியாதென்பதைக் கண்ட அவ்வரக்கர்கள் அதைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அதைப் பயன் படுத்தி, "தொழிற் புரட்சி"யைத் தோற்றுவித்தார்கள். வயல்களில் வேலை செய்து வந்த லட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் வேலை பெற்றனர். விஞ்ஞானம் உருவாக்கிய ஆலைகளில் மக்கள் உழைத்தார்கள். ஆனால், விஞ்ஞானம் அவ்வுழைப்பாளிக்

குச் சொந்தமல்ல. அது அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டது. மிருக உள்ளம் படைத்த மனிதர்கள் விஞ்ஞானத்தை உழைப்பாளிகளிடமிருந்து திருடிக்கொண்டார்கள்.

ஆனால், ரஷ்யாவில் விஞ்ஞானம் மக்களுக்கு மறுபடியும் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண் பெண் குழந்தையாலும் அது மக்களின் சன்மைக்குகந்த பேராயுதமாகக் கையாளப்படுகிறது!

"இவ்விஞ்ஞானம் ஒரு ரகசிய ஆயுதமாக இருக்கக் காரணம் என்ன? பிறர் தெரிந்து கொள்ளாதபடி ரஷ்ய மக்கள் அதை மறைத்து வைத்திருக்கிறார்களா?" என்று நீங்கள் கேட்கலாம்.

அதை ஒரு ரகசியமாக வைத்துக்கொள்ள ரஷ்ய மக்கள் விரும்பவில்லை. அதை நமக்குத் தெரிவிக்க அவர்கள் எவ்வளவோ முயற்சித்தார்கள். அப்படியானால் அதை ரகசியமாக வைத்திருந்தது யார்?

முதலாவது உலகப் போர் தோன்றிய காலத்திலிருந்து உலகை அடிமைப் படுத்தும் நோக்கத்தோடு, புதிய விஞ்ஞானம் மக்கள் கைக்கு எட்டாதபடி பாசிஸ வெறியர்கள் தடுத்து வந்தார்கள். சோவியத் யூனியனை அழித்துவிட இருபது ஆண்டுகளாகத் திட்டமிட்டார்கள். ரஷ்யாவின் ரகசிய ஆயுதமான புதிய விஞ்ஞானத்தைப் பற்றி உலக மக்கள் தெரிந்து கொண்டால், அரக்கர்களின் கொடிய ஆட்சி அடியோடு அழிந்துவிடும். போர்களும் மறைந்துவிடும். மனிதன், சுதந்தர உலகின் விடுதலை பெற்ற வீரனைத் தலை நிமிர்ந்து நடப்பான், என்பதை அம் மிலேச்சர்கள் அறிவர்!

சோவியத் விஞ்ஞானத்தை நசுக்க முடியவில்லை. ஏனெனில், அது மனித இதயத்தில் நிலைத்திருக்கும் புனிதமான இரு உணர்ச்சிகளில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. ஒன்று, ஆண் பெண் சிறுவர் ஆகியோர் ஒருவர் மேல் ஒருவர் கொள்ளும் தூய்மையான பேரன்பு! மற்றொன்று, அவர்கள் அனைவருக்கும் மனித வர்க்கத்தின் மீதுள்ள வீரம் செறிந்த அபிமானம்!

அது அன்பையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞானம்! அது எத்தகைய வாழ்க்கையையும், மக்களையும் உருவாக்கி இருக்கிறதென்பதை இனி ஆராய்வோம்.

புது வாழ்வின் உதயம்.

ரஷ்யாவில் 1917-ல், மாபெரும் புரட்சி குமுறியது. அதைத் தொடர்ந்து உள் நாட்டுப் போர் மூண்டது. அதன் பிறகு பிறநாடுகளின் தலையீடு. இறுதியில் செஞ்சேனை வெற்றிக் கொடி நாட்டியது. எனினும், நாடடைந்த சேதம் கணக்கில் அடங்காது. தொழில் துறையில் ரஷ்யா நிலை குலைந்து நின்றது.

முதலாவது உலகப் போருக்கு முன்பு விவசாயம், தொழில், சமூகம் ஆகிய துறைகளில் ஜார் ரஷ்யா மிகவும் பிற்போக்காக இருந்தது. மக்களுக்குக் கல்வியும் விஞ்ஞானமும் இல்லாதிருந்ததே அதற்குக் காரணம். இங்கிலாந்து ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில், விஞ்ஞானம் வளர்ச்சியுற்றிருந்த காலத்தில், ஒரு விஞ்ஞானக் கழகத்தை ரஷ்யாவில் தோற்றுவிக்க பீட்டர் மன்னன் செய்த முயற்சி நிறைவேறவில்லை.

அவருக்குப் பின் அவருடைய மனைவி காதரைன் ராணியின் ஆட்சியில், 1725–ம், வருஷம், ஒரு விஞ்ஞானக் கழகம் அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக அதில் சுமார் அங்கத்தினரே இல்லை. அது மட்டுமல்ல, ரஷ்ய சாம்ராஜ்யம் முழுவதிலும் ஒரு விஞ்ஞானிகூட கிடையாது.

இதைப்போல் நம்பமுடியாத மற்றொரு வரலாறும் உண்டு. பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில்தான் ரஷ்யாவில் முதன் முதலாக சர்வகலாசாலை நிறுவப்பட்டது!

நூறு வருஷங்கள் சென்றன. முதலாவது நிக்கோலஸ் என்ற ஜார் மன்னன் பெரிய "புல்கோவா வானிலை ஆராய்ச்சிக் கூடம்" ஒன்றைக் கட்டி, அதில் அன்னிய நாட்டு விஞ்ஞானிகளை அமர்த்தினார். ரஷ்ய விஞ்ஞானிகளின் பெயர்கள் உலகில் தெரிவதற்கு, மேலும் ஐம்பதாண்டுகள் ஆயின. பௌதிகம் மூலாதாரமான விஞ்ஞானமாயிருந்தும், முதலாவது உலகப்போர் மூண்டவுடன் ஐம்பதுக்கு அதிகமான பௌதிக நிபுணர்களை ஜார் சாம்ராஜ்யம் திரட்ட முடியவில்லை. ஜெர்மனி ஆயிரக் கணக்கான நிபுணர்களை திரட்டியது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு ஆகிய நாடுகளில், நூற்றுக் கணக்கான பௌதிக நிபுணர்கள் இருந்தனர்.

ஜார் காலத்திலிருந்த விஞ்ஞானிகளில் சிலர் போர் மூண்டதும் ரஷ்யாவிலிருந்து வெளியேறினர். பாவ்லோவ், கர்னகோவ், கர்விட்ஸ்ச் ஆகிய பன்னிருவர்தான் அங்கிருந்தனர். புரட்சியின் விளைவாகத் தோன்றிய சோவியத் அமைப்பை அவ்விஞ்ஞானிகள் வெறுத்தார்கள். எனினும், நாம் கேட்ட கதைகளைப்போல் அவர்கள் துன்புறுத்தப் படவில்லை.

புரட்சிக் காலத்தில், இவான் மிச்சுரின் என்ற உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிக்கு அறுபத்திரண்டு வயது. அவர் வாழ்நாள் முழுவதும் உயிர்நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். ஜார் அரசாங்கம் அவரைக் கவனிக்கவில்லை. பிரபுக்களும், அதிகாரிகளும் மக்கள் செல்வில் கோலாகலமாக வாழ்ந்த காலத்தில், மிச்சுரின் விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பணமின்றிப் பரிதவித்தார். முதலாவது உலகப்போர் தொடங்கியதும் மிச்சுரின் மனமுடைந்து எழுதியதாவது:

"ஆண்டுகள் பல கழிந்து விட்டன. என் வலிமை குறைந்து வருகிறது. எவ்வித பிரதிபலனுமின்றி, பொது நலனுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தேன். வயோதிக பருவத்தில் எனக்குப் பாதுகாப்பு இல்லை. என் மனச் சோர்வுக்கு ஆறுதல் எதுவுமில்லை."

மிச்சுரின் அப்பொழுது சாகவில்லை. அவர் 1935-ம் வருஷம் வரை வாழ்ந்திருந்தார். ஜார் ஆட்சியில் மலிந்திருந்த ஊழல்கள் சோவியத் சமுதாயத்தில் மறைந்து போனதை அவர் கண்டார். கரை புரண்டோடிய புரட்சி வெள்ளம் அவர் உள்ளத்தையும் நிரப்பிற்று. தனது காலம் முடிந்து விட்டதாகக் கருதியிருந்த அக்கிழவர் புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். சாவதற்குச் சற்று முன் தனது எண்பதாவது வயதில் அவர் குறிப்பிட்டதாவது:

"என் வாழ்க்கை மாறி விட்டது. ஏன் நாட்டின் வாழ்க்கை முழுதுமே மாறிவிட்டது! கவர்ச்சியும் இன்பமும் கலந்த உன்னத நோக்கம் வாழ்க்கையில் நிறைந்து விட்டது."

வயோதிக விஞ்ஞானிகளில் பலர், தம் வாழ்க்கையில் இந்தகைய மாறுதலைக் கண்டனர். உதாரணமாக,

புகழ்பெற்ற பாவ்லோவ் சோவியத் கொள்கைகளை எதிர்த்தார் ஆண்டுகள் செல்லச் செல்ல, சோவியத் சர்க்கார் அவருடைய ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமும் பேருதவியும் அளித்தது அவருக்குப் புத்துணர்ச்சி தோன்றிற்று. புதிய விஞ்ஞானத்தின் பெருமையை அவர் உலகுக்கு எடுத்துரைத்தார். அப்பொழுது அவருடைய வார்த்தைக்கு எவரும் செவி சாய்க்கவில்லை. அவர் சோவியத் அமைப்பைத் தாக்கி எழுதிய பொழுது, வெளி உலகம் அவரைப் புகழ்ந்தது. அவர் சோவியத் நாட்டைப் பாராட்டிய பொழுது அது அவரை இகழ்ந்தது! உண்மையை வெளியிட்ட பாவ்லோவின் குரலை அடக்க, சோவியத் விரோதிகள் முயன்றார்கள்.

"வயோதிக விஞ்ஞானிகள் இறந்து விட்டபின்பு, ரஷ்யாவில் விஞ்ஞானிகளையே காண முடியாது. சோவியத்துகள் ஒரு விஞ்ஞானியையாவது தோற்றுவிக்குமா என்பதைப் பார்ப்போம்!" என்று அவர்கள் ஏளனம் செய்தனர். ஆனால், அவர்கள் உண்மையில் கண்டதென்ன? அதற்கு இதோ ஓர் உதாரணம்.

2. சூரியன்மீது சோவியத் வெற்றி.

ரஷ்யாவை ஜார் ஆட்சி செய்த காலத்தில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு அருகே கதிரவன் ஒளி வீசுகின்ற ஒரு தோட்டத்தில் பல்லாண்டுகளுக்கு முன் கதை தொடங்குகிறது.

வெண்ணிறத் தாடியுள்ள வயோதிகப் பேராசிரியர் ஒருவர் செய்தித் தாள் படித்துக் கொண்டிருக்கிறார். அப்பொழுது அவர் கண்களில் தீப்பொறி பறக்கிறது. அந்த செய்தித்தாள் மாஸ்கோவில் அச்சிடப்பட்டது. மிகச் செல்வாக்குள்ள மெஸ்செர்ஸ்கி என்ற பிரபுக்கு அப்பத்திரிகை சொந்தம்.

அந்த வயோதிகப் பேராசிரியரின் பெயர் டிமிரிய சேவ். அவர் ஒரு விஞ்ஞானி. அவரை பிரபு வெறுக்கிறார். எனவே, அவரைப் பதவியிலிருந்து விரட்ட, பல முறை பிரபு முயற்சிக்கிறார். ஜார் மன்னனுக்கும், பாதிரிமார்களுக்கும், தன் செய்தித்தாளின் மூலம் மெஸ்செர்ஸ்கி கோரிக்கை விடுக்கிறார்.

ஆனல், அவர் ஓர் அறிவாளியல்ல தன் பத்திரிகையின் தலையங்கத்தில் அவர் எழுதிய இறுதி வாக்கியம்

மாஸ்கோ முழுவதையும் சிரிக்கச் செய்கிறது. "பேராசிரியர் டிமிரியசேவ் சர்க்கார் செலவில் நடத்துகிற ஆராய்ச்சியால் எல்லாம் வல்ல இறைவனின் படைப்புத் தொழிலில் தலையிட்டு, இயற்கையிலிருந்து கடவுளைத் துரத்துகிறார்."

இச்செய்தியை டிமிரியசேவ் படித்தார். "சரி, எனக்கென்ன நஷ்டம்? என் வாழ்நாள் முழுவதும் ரஷ்ய விவசாயிகளுக்காக உழைத்திருக்கிறேன். ஒவ்வொருவருக்கும் வேண்டிய அளவு தானியத்தை வளமுள்ள நிலத்தில் எவ்வாறு விளைவிக்க முடியும் என்பதை நிலச்சுவான்களுக்கு எடுத்துக்காட்ட முயற்சித்தேன். அவர்கள் என் வார்த்தைக்குச் செவி சாய்க்கவில்லை. ரஷ்ய பிரபுக்களின் மண்டைகளில் மருந்துக்குக்கூட மூளை கிடையாது," என்று அவர் முனகினார்.

பல சங்கடங்களைச் சமாளித்து, வாழ்நாள் முழுவதும், விஞ்ஞானத்துக்காக உழைத்த டிமிரியசேவ் சுடச் சுட அதற்குப் பதில் எழுதினார்.

1908–ல், டிமிரியசேவ் எழுதியது இன்றைய நேச நாடுகளுக்கும் பொருந்தும். அவர் குறிப்பிட்டதாவது: "வருங்காலத்தில் நம்பிக்கையுள்ள மனித வர்க்கத்திற்கும் கொடிய பழமையை உடும்புப் பிடிபோல் பற்றிக்கொண்டிருக்கும் மனித வர்க்கத்திற்கும் இடையே நிகழப்போகின்ற உலகப் போராட்டத்தில், ஒளிவிட்டுப் பறக்கப்போகும் சுதந்திரக் கொடியில் கீழ்க்கண்ட வாக்கியம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். விஞ்ஞானமும் ஜனநாயகமும்— இச்சின்னம் வெற்றி பெறும்!"

பரந்த நோக்குள்ள பத்திரிகையொன்று அதைப் பிரசுரித்தது. பிரபுக்கள் சீற்றம் கொண்டனர். ரகசியப் போலீஸ் டிமிரியசேவைக் கைது செய்ய விரும்பியது.

ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. விஞ்ஞான உலகம் அக்கிழவரை நன்கறியும் எனவே, 1905-ம், வருஷ அடக்குமுறையின் எதிர்ப்பைப் போல், சர்வதேச எதிர்ப் புக் கிளம்பிவிடுமோ என்று ஜார் நடுங்கினான்

'சர்வ வல்லமையுள்ள' அரசாங்கம் ஏன் அவ்வாறு நடுங்கியது? அவர் புரட்சிக்காரரா? இல்லை அவர் நாஸ் திகரா? இல்லை. அப்படியானால் அரசாங்கம் ஏன் நடுக்க முற்றது?

மதம் என்ற மாயத்திரையால் மறைக்கப்பட் டிருந்த மூடப்பழக்க வழக்கங்களையும், பிற்போக்குத் தன்மையையும் அகற்றி, விஞ்ஞானப் போக்கில் முன்னே றிச் செல்லும் நாடாக ரஷ்யாவை மாற்ற முயன்றார், என்ற காரணத்திற்காகத்தான்.

மெஸ்செர்ஸ்கி பிரபுவும், அவர் இனத்தைச் சேர்ந்த வர்களும் எத்தகைய இழிவான மனோபாவமுள்ளவர்கள் என்பதை கீழ்வரும் சம்பவம் ஒன்றினால் விளக்குவோம்.

விஞ்ஞானத்தின் துணைகொண்டு விவசாயம் செய் வது, இயற்கையிலிருந்து கடவுளை விரட்டுவதல்ல விவசா யத்தில் நம் அறிவைப் பயன் படுத்துவதாகும், என்ற விஷயத்தை விவசாய நிபுணர் ஒருவர் சில பிரபுக்களின் மண்டைகளில் புகுத்த வெகு பாடுபட்டார்.

அவர் ஓர் உதாரணம் கூறினார்: "மழைக்காகப் பிரார்த்தனை செய்வது காலத்தை வீணுக்குவதாகும். உங்க ளுக்கு வேண்டும்பொழுதெல்லாம் மழை பெய்யச் செய் வது கடவுளின் வேலையல்ல. இயற்கையில் தோன்றுகிற மேகத்தினின்றும் மழை பொழிகிறது. கடவுள் அப்ப டித்தான் மழை பெய்யச் செய்கிறார். குழாயைத் திருப்பு வது போலல்ல."

"வாலிபரே! உமக்குத் தெரியாது. இரு வகை மழை உண்டு. சிறிய தூறல், விஞ்ஞான உதவியால் பெய்கிற மழை, வெள்ளம் பெருக்கெடுத்தோடும் பெருமழை கட்டுள் தருவது," என்று ஒரு பிரபு பதில் சொன்னார். இத்தகைய மூட நம்பிக்கைகளால் பாழான ரஷ்யா உணவின்றித் தவித்தது. உலகிலேயே மிகச் செழிப்பான ரஷ்ய பூமியில், வெள்ளம், பஞ்சம், நோய் ஆகிய கேடுகள் ஒன்றன் பின் ஒன்றுகத் தாண்டவம் ஆடின. நாடு, பஞ்சத்தில் சிக்கித் துன்புறுதிருப்பதற்காக, டிமிரியசேவ் போன்ற அறிஞர்கள் போராடினர். அவர்களுடைய உழைப்பால் புதிய குடியரசு உரம் பெற்றது. இன்றைக்கு, விவசாய முன்னேற்றத்தில் எந்த நாடும் ரஷ்யாவை எட்டிப்பிடிக்க முடியாது, என்ற உண்மையை; விஞ்ஞான உலகம் ஒப்புக்கொள்கிறது. அதன் விஞ்ஞானிகள் உலகப் பிரசித்தி பெற்றவர்கள். அந்நாட்டில் கையாளப்பட்டு வருகிற விவசாய முறைகள் வேறெந்த நாட்டிலும் கையாளப்படவில்லை. சமீபகாலத்தில் அங்கு ஏற்பட்ட அபிவிருத்திகளில் சில நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன.

ரஷ்யாவின் புதிய விவசாய முறை, நிலச்சுவான்தாரி முறையை ஒழித்த விதம், கூட்டுறவுப்பண்ணை முறை இவற்றைப்பற்றி பல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. அவ் விஷயங்களைப்பற்றி இப்பொழுது விவாதிக்க வேண்டியதில்லை. இனி கதையைக் கவனிப்போம்.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் புராதன மக்கள் சூரியனை வணங்கி வந்தார்கள். உயிர் கொடுக்கும் சக்தி உலகில் சூரியன்தான், என்று அவர்கள் நம்பினர். பல நூற்றாண்டுகள் கழிந்தன. சூரியனை வழிபட்ட மக்களும் மறைந்தனர். பிறகு சூரியன்தான் வாழ்க்கையின் மூலகாரணம் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

பூமியில் வாழ்கிற ஒவ்வொரு உயிரும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சூரியனிடமிருந்து சக்தி பெற்று உயிர் வாழ்கின்றன என்பது தெளிவாயிற்று.

சூரியனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பை முதலாவது கண்டுபிடித்தவர் ராபர்ட் மேயர். உஷ்ணப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் இரத்தத்திற்கும் குளிர் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் இரத்தத்திற் கும் வேறுபாடிருப்பதை, அப்புகழ்பெற்ற ஜெர்மன் டாக் டர் ஜாவாவிலிருந்தபொழுது கண்டுபிடித்தார். சுவாசப் பைகளுக்குள் கிரகிக்கப்படுகிற பிராணவாயுவின் உதவி யால் எரியும் உணவு மனித உடலைச் சூடாக வைத்திருக்கி றது.

காற்றிலுள்ள கரியமில வாயு, நீர், நிலத்திலுள்ள உணவு, சூரியனிலிருந்து கிடைக்கும் சக்தி ஆகியவற்றின் சேர்க்கையால் புல் உண்டாகிறது. ஆடு புல்லைத் தின்கி றது. மனிதன் ஆட்டிறைச்சியைத் தின்கிறான். இறைச் சியை வயிறு ஜீரணிக்கிறது. இறைச்சியின் ஒரு பகுதி எரிந்துபோகிறது. மனிதன் கரியமில வாயுவை வெளியே விடுகிறான். புல் உண்டாவதற்கு உதவியாயிருந்த சூரிய உஷ்ணம், மனிதன் உடலில் உஷ்ணமாகவும் கைகளில் சக்தியாகவும் மாறுகிறது.

இது இன்றைக்கு ஒவ்வொரு பள்ளிப் பிள்ளைக்கும் தெரிந்த உண்மை. ஆனால், நூறு வருஷங்களுக்கு முன், டாக்டர் மேயர், வாழ்க்கை முறையின் உண்மையை, இவ் வாறு விளக்கியதற்காக, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். உண்மையை மறுத்துக் கூற வேண் டும் என்று கலிலியோவைப்போல் அவரும் துன்புறுத்தப் பட்டார். இது கடந்த நூற்றாண்டின் மத்தியில் நிகழ்ந்த

தென்பது ஆச்சரியம் விளைவிப்பதாகும். மேயரை சித்திர வதை செய்த கயவர்கள் விஞ்ஞானத்தையும் உண்மையையும் வெறுத்தனர். அவர்கள் மிருக உள்ளம் படைத்த கொடுங்கோலர்களின் கட்டளைகளை நிறைவேற்றினர்.

ஆனல், உண்மையை ஒருபோதும் அழிக்க முடியாது. சிறிது காலத்திற்குப் பின் ஹெல்ம் ஹோல்ட்ஸ் என்ற விஞ்ஞானப் பேரறிஞர் சொன்னதாவது: "சூரிய வெளிச்சத்தை உட்கொண்டு செடி வளர்கிறது. செடியில் சூரிய ஒளி மறைந்து எரியக் கூடிய பொருள்கள் உண்டாகின்றன. ஆனல், செடிக்குள் மறைந்து போன சூரிய கிரணங்களின் சக்தியினல், செடியில் ரசாயனப் பொருள்கள் உண்டாகின்றன, என்று சோதனைகளின் மூலம் நிர்ணயித்துச் சொல்ல இதுவரை முடியவில்லை.

அவர் எழுதிய கடைசி வாக்கியம் விவசாய முன்னேற்றத்துக்கு மிக அவசியமானது. தொன்று தொட்டு வந்த விவசாய முறைகளில் ஒரு புதிய அத்தியாயம் தோன்றக் காரணமாயிருந்தது. ஆனல் அக்காலத்தில் ஹெல்ம் ஹோல்ட்ஸ் கூட அதை எதிர் பார்க்கவில்லை.

சூரிய சக்தியின் உதவியால் செடிகள் தோன்றி வளர்கின்றன, என்று, மெய்ப்பிக்கக் கூடிய சோதனைகளை நடத்துவதில் டிமிரியசேவ் ஐம்பது வருடங்கள் கழித்தார் அவர் இறந்த பிறகுதான், அவர் உழைப்பிலிருந்து ஆச்சரியப்படத் தகுந்த விளைவுகள் தோன்றின.

டிமிரியசேவ் ஆகாயக்கோட்டை கட்டும் விஞ்ஞானியல்ல. துன்பப் படுகுழியில் ஆழ்ந்திருந்த விவசாயிகளைக் கைதூக்கி விட அவர் முயன்றார். மழை, புயல், சூரியன் முதலிய இயற்கைச் சக்திகளை முற்றிலும் நம்பி

யிராமல் பயிர்த் தொழிலை நடத்த அவர் முயற்சித்தார். "கண்காட்சியைப் போல, இயற்கையைப் பார்த்துக் கொண்டிருப்பவன் விஞ்ஞானியல்ல. ஆராய்ச்சியாளன் என்ற முறையில், அவன் இயற்கையைக் கட்டுப்படுத்தி அதை நடத்த வேண்டும். இயற்கையின் போக்கை மனிதனது அறிவுத் திறனுக்கும் விருப்பத்துக்கும் ஏற்ப மாற்ற முயல்வதே அவனுடைய வேலை" என்று அவர் புரட்சிக்கு முன் எழுதினார்.

சோவியத்துகள் தோன்றிய குழப்பமான காலத்தில் டிமிரியசேவ் இறந்து போனார். ஏதோ அரும் பெரும் மாறுதல் நடைபெறுகிறது என்பதை அவர் அறிந்து கொண்டார். மனித வர்க்கம் விஞ்ஞானத்தைக் கைப்பற்றி, அதன் உதவிகொண்டு மனிதனின் நலனுக்காக உலகை ஆட்சி செய்யும் காலம் வந்துவிட்டது என்பதை அவர் கண்டார். மனிதனின் அறிவுக்கும் விருப்பத்திற்கும், இயற்கையைப் பணிய வைக்கும் கட்டத்தை மனித சமுதாயம் அடைந்து விட்டதென்பதை அவர் பார்த்தார்.

இப்பொழுது நம்முடைய கதை விரைவாகச் செல்கிறது. பதினைந்து வருஷங்கள் கழிந்து விட்டன. இடம் சைபீரியா. கதாநாயகன் எபரமோவ். அவர் ஒரு எளிய விவசாயி. பேராசிரியர் டிமிரியசேவ் எழுதிய நூல்கள் அவருக்குக் கிடைத்தன. அவை அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. இயற்கையைக் கண்டு களிக்கும் வெறும் பார்வையாளராக மட்டும் இருந்தால் போதாது இயற்கையை நம் ஆணைகளுக்கு உட்படுத்த வேண்டும், என்று அவர் தன் நண்பர்களிடம் சொன்னார்.

"அதை எப்படிச் செய்வது? ஒரு சோதோஷ்ணை இயந்திரத்தைக் கண்டுபிடிப்பதன் மூலமா?" என அவருடைய நண்பர்கள் கேட்டனர்.

எபரமோவ் விஞ்ஞான நூல்களை மிகுந்த ஆர்வத்துடன் கற்றார். பன்முறை டிமிரியசேவின் சோதனைகளைப் படித்தார். சிறந்ததொரு எண்ணம் அவர் மனத்தில் உருவாகியது.

"செடிகளுக்கு நிலச்சத்தும் நீரும் பூமியிலிருந்து கிடைக்கின்றன, என்பது உண்மையே. எனவே உரமும் நீரும் உபயோகிப்பது நல்லதுதான். ஆனால், நிலச்சத்தும் நீரும் கோதுமைப் பயிருக்கு அவ்வளவு முக்கியமானதென்று நீங்கள் கருதுகிறீர்களா?" என்று அவர் விவசாய நிபுணர்களைக் கேட்டார்.

அவர்கள் ஆச்சரியமடைந்தனர். "தம்பி! வேறெது முக்கியம்? அவையின்றி செடி வளராது," என்றனர் நிபுணர்கள்.

"சூரிய ஒளியும் அவசியமல்லவா?" என்றார் எபரமோவ்.

எல்லோரும் சிரித்தனர். "கோதுமைப் பயிருக்கு வேண்டிய அளவு சூரிய ஒளியைப் பெறுவதற்காக, சூரியனைக் கட்டுப்படுத்தும் சக்தி பெற மனிதனுக்கு லட்சக்கணக்கான வருஷங்கள் ஆகும். அதுவரை அதைப்பற்றிச் சிந்தித்துப் பயன் என்ன?" என்றனர் நிபுணர்கள்.

எபரமோவின் கண்களில் ஒரு புதிய ஒளி வீசியது. டிமிரியசேவின் கருத்துக்கள் அவரது மனத் திரையில் தோன்றின. "கதிரவன் மீது ஆதிக்கம் செலுத்தும் வழி இப்பொழுதே எனக்குத் தெரியும்," என்று அவர் அமைதியாகப் பதில் சொன்னார்.

அவருடைய கருத்து இதுவே: "உணவையும் நீரையும் வாயுவையும் தானியமாக மாற்றச் செடிகள் பயன்

படுத்துகின்ற சக்தியை சூரியன் கொடுப்பதால் சூரிய ஒளியே மற்ற அம்சங்களைவிட முக்கியமானது. ஒரு ஏக்கர் நிலத்தில் விளைகிற தானியத்தின் அளவைப் பெருக்க செடிகள் உட்கொள்கிற சூரிய ஒளியை அதிகப் படுத்த வேண்டும்."

இதை எவ்வாறு செய்ய முடியும்?

எபரமோவுக்குத் தெரியும். நமக்குத் தெரியுமா? அநேகமாகத் தெரியாது. அந்த உண்மை நூற்றுக் கணக்கான வருடங்களாக நுட்பமான அறிவுள்ள விவசாயிகளின் கவனத்திற்கும் தென்படாமல் மறைந்திருந்தது.

"ஒரு ஏக்கர் நிலத்தில் கூடுதல் தானியம் விளைவிக்க அதிகமான சூரிய வெளிச்சத்தைப் பயன்படுத்த வேண்டும். அதற்காக ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் பயிராகும் செடிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். இவ்வுண்மையை எபரமோவ் வெளியிட்டபோழுது, அவருக்கு மூளை சரியில்லை என்று நிபுணர்கள் கருதினர். ஒரு வேளை நாமும் அவ்வாறே நினைக்கலாம். "ஒரு ஏக்கர் நிலத்தில் எப்படி கூடுதல் செடிகளைப் பயிரிடுவது?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"எனக்குத் தெரியாது. நான் அதைக் கண்டுபிடிக்கப் போகிறேன். ஒரு சதுர அடி நிலத்தில் எத்தனை நாற்றுகளைப் பயிரிடலாம் என்பதைச் சொல்லுங்கள்," என்று எபரமோவ் ஒளிவு மறைவின்றிக் கேட்டார்.

நிபுணர்களின் கண்கள் சிவந்தன. "காலத்தை வீணாக்க வேண்டாம். ஒரு ஏக்கர் நிலத்தில் கூடுதல் தானியம் விளைவிக்க முடியுமென்றால், மக்கள் நூற்றுக் கணக்கான வருஷங்களுக்கு முன்பே அதைச் செய்திருப்பார்

கள்," என்று நிபுணர்கள் சொன்னார்கள். அவர்களின் உபதேசம் எபரமோவுக்குத் திருப்தியளிக்கவில்லை.

நமது விவசாயப் பண்ணையில் எபரமோவ் ஒரு கூலியாக இருந்தால், அவர் என்ன செய்திருக்க முடியும்? சர்க்கார் பண்ணையில் சோதனை நடத்த அவருக்கு அனுமதி கிடைத்திருக்குமா? நிச்சயமாகக் கிடைத்திருக்காது. அவர் உழைத்து உழைத்து ஊக்கம் இழந்திருப்பார். அவருடைய சிறந்த கருத்துக்களும் மறைந்துபோக வேண்டியதுதான்.

ஆனால், சோவியத் ரஷ்யாவில் நிலைமை வேறு. பேராசிரியர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் மட்டும்விஞ்ஞானம் சொந்தமல்ல பண்ணை முறையும் நம்முடையவற்றைப் போன்றதல்ல. எபரமோவ் ஒரு கூட்டுப் பண்ணையில் வேலை செய்தார். அது விரிந்த நிலப்பரப்பு. அதில் பாடுபட்டு வந்த நூற்றுக் கணக்கான விவசாயிகளுக்கும் அவர்களின் மனைவிமார்களுக்கும் சொந்தம். எபரமோவ் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார் விவசாயிகள் அனைவரும் வந்திருந்தனர். விவாதம் நடந்தது. பரிசோதனை நடத்த எபரமோவுக்கு நிலம் கொடுக்கப்பட்டது. அவருக்கு உதவி செய்யப் பலர் முன் வந்தனர்.

சோதனையின் முடிவு சோவியத் யூனியன் முழுவதையும் திடுக்கிடச் செய்தது. எபரமோவ் என்ற பெயர் பல மொழிகளிலும் புதியதொரு வார்த்தையாக ஒலித்தது. தாங்கள் எபரமோவைப் பின்பற்றுகிறவர்கள் என்று ஆயிரக் கணக்கான விவசாயிகள் பெருமிதத்துடன் கூறுகிறார்கள்.

முதல் தடவை நடந்த சோதனை என்னவென்று பார்ப்போம். எபரமோவும் அவருடைய தோழர்களும்

ஆயிரக் கணக்கான சிறிய பாத்திகளை; சாகுபடிக்காக எடுத்துக் கொண்டனர். ஒவ்வொரு விதையாக நிலத்தில் ஊன்றினர். ஒரு வித்துக்கும் மற்றொரு வித்துக்கும் உள்ள தூரம் பாத்திக்குப் பாத்தி வித்தியாசப் பட்டது. ஒரு பாத்தியில் ஒரு வித்துக்கும் மற்றொரு வித்துக்கும் உள்ள தூரம் அரை அங்குலம்; மற்றொன்றில் முக்கால் அங்குலம் வேறொன்றில் ஒரு அங்குலம். இப்படிப் பலவாறாக விதைத்தார்கள். சோதனை வெகு கவனமாக நடத்தப் பட்டது.

ஒரு கோதுமைப் பயிருக்கு ஒன்றரை சதுர அங்குல நிலம் போதும் என்பதை எபரமோவ் நிரூபித்தார். ஒரு ஏக்கர் நிலத்தில் ஏராளமான பயிர்களை விளைவிக்கலாம். அவை நன்றாக உண்டாவதற்கு, அவசியமான அளவு சூரிய ஒளியும் கிடைக்கும் என்பதைச் சோதனை தெளிவாக்கியது. **புதிய முறைப்படி பயிரிட்டதில், வழக்கமாகக் கிடைத்த அளவைக் காட்டிலும், ஐந்து மடங்கு கோதுமை கூடுதலாகக் கிடைத்தது!**

அதாவது ஐந்து ஏக்கர் நிலத்தில் பயிர்செய்யப்பட்டு வந்த கோதுமையை, புதியமுறைப்படி, ஒரு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்து பெறலாம் என்பதே, எபரமோவ் நடத்திய சோதனையின் முடிவு. இம்முடிவு வெளியானதும், சோவியத் நிபுணர்கள், எபரமோவின் பண்ணைக்கு விரைந்தனர். ஒரு சாதாரண விவசாயி ஒரு புதுமையை வெளியிட்டதைக் கண்ட நிபுணர்கள் சிற்றம் கொள்ளவில்லை. ஏன்? சோவியத் யூனியனில், விவசாயிகளே நிபுணர்கள்; நிபுணர்களே விவசாயிகள்! விவசாயமும் புதிய விஞ்ஞானமும் தோழமையுடன் கைகோத்துச் செல்கின்றன. எபரமோவ் புகழப் பட்டார்.

ரஷ்ய விஞ்ஞானி பர்ஸ்கி சொன்னதாவது: "எபரமோவின் முடிவு பல்லாண்டுகளாக விவசாயப் பண்ணைகளில் பரீட்சிக்கப்பட்ட கொள்கைகளுக்கு மாறுபட்டது முன்னிவிட சிறந்ததொரு விதைப்பு முறையைக் கண்டு பிடிக்க முடியாதென்று சொல்லப்பட்டு வந்தது. இது தவறென எபரமோவ் நிருபித்து விட்டார். அவர் உண்மையான சோவியத் விஞ்ஞானி. ஏனெனில், விஞ்ஞானம் மனித சமுதாயம் முழுமைக்கும் சொந்தம். அது எல்லோருடைய நன்மையையும் நாடுவது"

இந்த சைபீரிய வாலிபரின் யோசனை அனுபவ சாத்தியமானது என்று நிருபிக்கப் பட்டது. இதனால் சோவியத் மக்கள் அடைந்த ஆனந்தத்தை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்! பெருகிவரும் ஜனத்தொகைக்குத் தகுந்தாற்போல், தானிய விளைச்சலைப் பெருக்கும் முயற்சியில், ஒவ்வொரு ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில், நான்கு ஏக்கர் நிலத்தை வீணைக்கிய ரஷ்ய மக்களிடம், எபரமோவின் முடிவு சொல்லப்பட்ட பொழுது, அவர்கள் மட்டிலா மகிழ்ச்சியுற்றனர்!

இந்நாட்டில் [1] அச்செய்தி அறிவிக்கப் படுகிறதென வைத்துக் கொள்வோம். விவசாயிகள் அதை நம்புவார்களா? இப்பொழுது நம் விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற தானியத்தைக் காட்டிலும், ஐந்து மடங்கு கூடுதலாக நமது நிலத்தில் விளைவிக்க முடியுமா?

சாத்தியமாகலாம்; ஏனென்றால், ரஷ்யாவிலுள்ள கோதுமை வயல்கள், நம் வயல்களைப் போன்றவைதான். எபரமோவ் முறை சோவியத் பண்ணைகளில் கையாளப் படுகிறது. இவ்விளைஞர், தொழிற்கல்வி முறையாகப்

1. கனடா

பெறவில்லை. கூட்டுப் பண்ணை நூல் நிலையத்திலுள்ள புத்தகங்களைத் தானாகவே கற்றறிந்து, விவசாயத் துறையில், மாபெரும் முன்னேற்றத்திற்கு அடி கோலினார். இது கூட முக்கியமல்ல. அவரது முறையை ரஷ்ய விவசாயிகள் எல்லோரும் கையாண்டதுதான் மிக முக்கியம். புதிய விஞ்ஞானத்தின் மாபெரும் சக்திக்கு அது ஓர் எடுத்துக் காட்டென்று, மக்கள் அதை ஆர்வத்துடன் வரவேற்றனர்.

சுருங்கச் சொல்லின் எபரமோவ் முறை பின் வருமாறு: விவசாயம் செய்யப்படுகிற ஒவ்வொரு பகுதியிலும், சூரிய கிரணங்கள் விழுகிற நிசைக்கு ஏற்றார்போல, நாற்று நடப் படுகிறது பழைய முறைப்படி தானியம் விதைக்கப் படுவதில்லை. பருவகாலம் முழுவதும், சூரிய கிரணங்கள் எப்பக்கம் நிலத்தில் விழுகின்றன என்பதை ஆராய்ந்தறிந்த நிபுணர்களால் விதைப்பு மேல் பார்க்கப் படுகிறது. எபரமோவ் கண்ட புதிய முறையில் ஏராளமான தானியம் விளைவதால், போதுமான உரம் வைக்க வேண்டும். இல்லையேல் நிலவளம் குன்றும். அதிகமான தானியம் விளைவிப்பதற்கு, சூரிய வெளிச்சத்தைப் பயன் படுத்துவதின் ரகசியம் இதுதான்: முன்காலத்தில் தானிய வயல்களுக்கு உரமிடுவதால் லாபமில்லை. இப்பொழுது உரமிடுவது போதுமான பலனளிக்கிறது. ஏனென்றால், எபரமோவ் முறைப்படி சாகுபடி செய்வதில் ஒரு ஏக்கரில் முன்னால் கிடைத்த தானியத்தைவிட ஐந்து மடங்கு கூடுதலாகக் கிடைக்கிறது. 1942–ல், சோவியத் பண்ணைகளில் நாற்பது லட்சம் டன் உரம் உபயோகிக்கப்பட்டது. எபரமோவ் முறையை, பிற பயிர்களின் சாகுபடியிலும் கையாள, புதிய நிலையம் ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. அதன் பெயர் "விஞ்ஞான முறைப்படி விதைப்பதற்கான நிலையம்."

எபரமோவின் புது முறையை, புகழ்பெற்ற அலெக்ஸி ஸ்டாக்கனேவ் செய்த வேலைக்கு ஒப்பிட்டுக் கூறலாம். ஸ்டாக்கனேவ் சோவியத் சுரங்கத் தொழிலாளி. அவர் கண்டுபிடித்த புதிய முறைப்படி ஒரு ஷிப்டில் பத்திலிருந்து இருபத்தைந்து டன் வரை நிலக்கரி எடுக்க முடிந்தது. ஜெர்மன் ரூர் பிரதேசத்தில் பயிற்சி பெற்ற ஒரு தொழிலாளி எடுக்கக்கூடிய அளவைக் காட்டிலும் இது அதிகம். பின்னால், ஸ்டாக்கனேவ் ஒரு ஷிப்டில் நூற்றிரண்டு டன் நிலக்கரி எடுத்தார். இது உலகிலேயே மிகப் பெரிய அளவு. ஸ்டாக்கனேவ் முறைப்படி மற்றொரு சோவியத் சுரங்கத் தொழிலாளி சமீபத்தில் ஒரே ஷிப்டில் 536 டன் எடுத்தார். எபரமோவின் சாதனையும் இதுவும் கட்டுக் கதைகளென்று நாம் எண்ணக் கூடும். ஆனால், இவை பிற நாட்டுத் தொழில் நிபுணர்களால், ஏற்றுக் கொள்ளப்பட்ட புள்ளி விவரம். இதைப் போன்ற வியக்கத் தகுந்த சோவியத் உற்பத்தி முறைகள் பல இருக்கின்றன. உதாரணமாக இரும்பாலைத் தொழிலாளர் உலையின் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் பன்னிரண்டு டன் எஃகு உற்பத்தி செய்கிறார்கள். இவ்வுற்பத்தி கடுமையான உழைப்பின் மூலம் அல்ல. தொழிலாளரின் அறிவாற்றல், ஊக்கம் ஆகியவற்றின் பலன். "நமது புதுக் கருத்துக்களையும் ஆற்றலையும் ஊக்கத்தையும் வெளியிட அது நமக்கு வாய்ப்பு அளிக்கிறது. இயந்திரத்தின் மீது மனிதன் அடைந்திருக்கிற வெற்றியை இவை தெளிவாக்குகின்றன. ஒவ்வொரு தொழிலாளியும் இம்முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இஞ்சினீயர் அல்லது தொழில் நிபுணரின் நிலையை அடைகிறான்," என்று ஸ்டாக்கனேவ் சொன்னார்.

ராக்கிட்டின் என்ற மற்றொரு ரஷ்ய விவசாய நிபுணர், எபரமோவ் முறையைக் கையாண்டு, மிக நெருக்க

மான நடுகைக்கேற்ற புது கோதுமைப் பயிரை உண்டாக்கி இருக்கிறார். இப்பயிரின் ஒவ்வொரு கதிரிலும் இரண்டு தானியங்கள் அதிகமாக விளைகின்றன. ஒரு ஏக்கர் நிலத்தில் நான்கு கோடி தானியம், அதாவது, நாற்பது புஷல் அதிகமாகக் கிடைக்கிறது.

லூசென்கோ என்ற உக்ரேன் நிபுணர் ஆச்சரியமான விவசாய முறையொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார். அது 'யரோவைசேஷன்'' என்று சொல்லப்படுகிறது. இது மிகச் சிக்கலானது. விதைகளைப் பூமியில் விதைத்ததும், வெகு விரைவில் முளைக்கக்கூடிய புதிய உபாயம் ஒன்றை, லூசென்கோ கண்டுபிடித்தார். அம் முறைப்படி, பருத்திபோன்ற பயிர்களை குளிர் மிகுந்த வடபகுதிகளில் பயிர் செய்யலாம். குளிர் காலத்திற்கு முன் அக்டோபர், நவம்பர் மாதங்களில் குளிர்கால தானியங்களைப் பயிரிடலாம். பனி சீக்கிரம் விழத் தொடங்குகிற பகுதிகளில், பயிரை விரைவில் முதிரச் செய்யலாம்.

லூசென்கோ முறையைத் தெரிந்து கொள்வதற்காக சோவியத் யூனியன் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் வருகிறார்கள். அவர் உலகப் புகழ் பெற்றவர். எனினும் எளிய விவசாயியைப்போல் உடை தரிக்கிறார். அவர் ஒவ்வொரு பண்ணைக்கும் சென்று, தமது முறைப்படி எப்படி விதையைப் பக்குவப் படுத்துவதென் பதைச் செய்து காட்டுகிறார். ஐந்து கோடி ஏக்கர் நிலம் இம்முறைப்படி பயிராகிறது. இதனால், ஒரு ஏக்கர் நிலத்தில் நூறு பவுண்டு தானியம் அதிகமாக விளைகிறது. அதாவது மொத்தத்தில், ஐநூறு கோடி பவுண்டு கூடுதலாக விளைகிறது. இத்தகைய விஞ்ஞான முறையை, விவசாயத் துறையில் கையாண்டதினால், நாஜி ராணுவம்,

தானியக் களஞ்சியமான உக்ரேன் பகுதியைக் கைப்பற்றிய காலத்திலும், சோவியத் யூனியன் உணவுப் பிரச்னையைச் சமாளிக்க முடிந்தது. மிகுதியாக உணவுப் பொருள்கள் உற்பத்தியாகும் பகுதிகளில், பெரும் பகுதியை இழந்த போதிலும் சோவியத் யூனியன் விஞ்ஞானத்தின் துணை கொண்டு; புதிய பகுதிகளைப் பண்படுத்தியது. 1941–ல், சாகுபடியானதைக்காட்டிலும், 1942–ல், ஐம்பது லட்சம் ஏக்கர் அதிகமாக சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டது.

உலகிலேயே மிகச் சிறந்த பயிர் வளர்க்கும் நிலையத்தின் தலைவர் லிசென்கோ, என்பது மட்டும் வெளிநாடுகளிலுள்ளவிஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆனால்,ரஷ்யர்கள் அதற்காக அவருக்குப் பெருமை கொடுக்கவில்லை. ஒவ்வொரு விஞ்ஞானப் புதுப் புனைவையும், விவசாயிகள் அனைவரும் கையாண்டு நலமுறும் பொருட்டு, அவர் நாடு முழுவதும் பரப்புகிறார். இவ்வரிய சமூகத் தொண்டுக்காகத்தான் ரஷ்ய மக்கள் அவரைப் பாராட்டுகிறார்கள்.

எபரமோவ், ராக்கிட்டின், லிசென்கோ போன்ற நிபுணர்களின் புதிய முறைகள் யாவும், சகல பயிர்களுக்கும் கையாளப் படுகின்றன. ஒரு ஏக்கரில் இருநூறு புஷல் தானியம் கிடைக்கிறதென்ற செய்தியைக் கேட்டு, நாம் அவநம்பிக்கையால், ஏளனம் செய்வதில் பலனொன்றுமில்லை. அச்செய்தி உண்மைதான்.

இவ்வுற்பத்திப் பெருக்கு உலகில் கோதுமை மார்க்கெட்டை எவ்வாறு பாதிக்கும்? விலை வீழ்ச்சியுறுமா? தான்ய வர்த்தகம் நின்றுவிடுமா?

எபரமோவ் சோதனை தொடங்கியபொழுது, இவற்றைக் குறித்துச் சிந்திக்கவில்லை. உண்மையில், அவர்

இன்னும் அவற்றைப்பற்றிச் சிந்திக்கவில்லை. "கோதுமை மார்க்கெட்" "கோதுமை வியாபாரம்" என்ற வார்த்தைகளைப்பற்றிச் சிந்தனை செய்ய சோவியத் விஞ்ஞானத்திற்கு அவகாசமில்லை.

எபரமோவின் விருப்பந்தான் என்ன? அது மிகச் சாதாரணமானது! டிமிரியசேவ் கண்ட கனவை நனவாக்குவதுதான். அதாவது, மனிதனின் பகுத்தறிவுக்கும் விருப்பத்திற்கும் இயற்கையைப் பணியச் செய்வதே அவர் நோக்கம். கனவிலும் காணற்கரிய வெற்றி கண்டார். எப்படி சூரியனை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதென்பதை அவர் கண்டுபிடித்தார். எவரும் புரிந்து கொள்ளக் கூடிய தெளிவான எளிய விஞ்ஞான முறையில் அவர் மனிதனின் நலனுக்காகச் சூரியனையும் அடக்கி ஆண்டார்!

சோதனை தொடங்குமுன் கூட்டுப் பண்ணை விவசாயிகள் அனைவரும் எபரமோவின் நோக்கத்தை நன்கறிந்து கொண்டனர். அவரது நோக்கம் இதுதான்: **"குறைந்த உழைப்பில் அதிக உணவை விளைவிப்பது; உடல் நலமிக்க மனித வர்க்கத்தைத் தோற்றுவிப்பது; வாழ்க்கையின் உயரிய இன்பங்களை அனுபவிக்க விவசாயிகளுக்கு அதிக ஓய்வு அளிப்பது."**

மற்றொரு சோவியத் விவசாய நிபுணர், காலஞ் சென்ற இவான் மிச்சுரின். இவரது சிறந்த கருத்துக்களையும், லட்சக்கணக்கான குடியானவர்கள் பின்பற்றினர். அவரது முறைப்படி உண்டாக்கப்பட்ட ஒருகோடி பழமரங்கள், சாதாரண பழமரங்களைவிட இருமடங்கு அதிக பலனளிக்கின்றன. "நாம் இயற்கையின் அருளை எதிர் நோக்கி நிற்கக்கூடாது. வேண்டியவற்றை இயற்கையிலிருந்து நாமாக எடுத்துக் கொள்வதே நமது வேலை,"

என்பது அவர் பொன்மொழி. சோவியத் விவசாயிகள், தங்களுக்கு வேண்டியவற்றை, இயற்கையிடமிருந்து எடுத்துக் கொள்கிறார்கள். பேராசிரியர் சிட்சின் அழியாக் கோதுமைப் பயிரைக் கண்டுபிடித்திருக்கிறார். அது ஒரு ஏக்கருக்கு முப்பது புஷலுக்கும் கூடுதலாக மகசூல் கொடுக்கிறது. இது இயற்கையின் கருணையால் அல்ல; மனித முயற்சியால் இயற்கையிடமிருந்து எடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் விதைத்துப் பயிரிடாமல், ஆப்பிள் மரங்களைப்போல் நிரந்தரமாக கோதுமை மகசூலைப் பெற முடியும் என்று இச்சோதனை வழிகாட்டுகிறது.

ரஷ்ய விவசாயிகளின் வாழ்க்கையை விஞ்ஞானம் எவ்வாறு மாற்றியிருக்கிறதென்பதைக் குறித்து, ஒரு வார்த்தை. கூட்டுப் பண்ணைகளைப் பற்றியும், கூட்டுப் பண்ணை முறையை எதிர்த்து விவசாயிகள் போராடியதைப் பற்றியும், எவ்வளவோ எழுதப் பட்டிருக்கிறது. அத்தகைய அமைப்பு நம் நாட்டில் சாத்தியமாகாது என்று அரசியல் வாதிகள் பிதற்றுகிறார்கள். அவ்வமைப்புத்தான் என்ன?

அது மிகச் சாதாரணமானது. துண்டு துண்டாக ஆயிரம் வயல்களை வைத்துக்கொண்டு, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குடும்பம் தன் ஜீவனோபாயத்திற்காகப் பாடுபடுவதற்குப் பதில் ஆயிரம் சிறிய வயல்களையும் ஒரே நிலப்பரப்பாக்கி, இயந்திர உதவியால் அதனைக் கூட்டாகப் பயிரிடுகிறார்கள். அது நம் நாட்டில்[1] தொன்று தொட்டு வரும் ஒரு வழக்கத்தைப் போன்றது. ஒரு விவசாயி நோயால் வேலை செய்ய இயலாதிருந்தால், பக்கத்து வீட்டார் ஒன்றுபட்டு அந்நோயாளியின் நிலத்தை விதைப்

---

1. கனடா.

பது வழக்கம். இது சில சமயம் நடப்பது. அதைப்போல் சோவியத் பண்ணைகளில் வருஷம் முழுவதும் கூட்டு முறையில் விவசாயம் நடைபெறுகிறது. உழுவது, விதைப்பது, அறுப்பது, அடிப்பது ஆகிய எல்லா வேலைகளையும் அனைவரும் ஒன்றுபட்டுச் செய்கிறார்கள்.

கூட்டுப்பண்ணை விவசாயிகள் வசதியுள்ள நவீன வீடுகளில் வசிக்கிறார்கள். அவர்கள், தங்கள் வேலைகள் முடிந்ததும், சினிமா கொட்டகைகள், நாடக சாலைகள், நீச்சுக் குளங்கள் முதலிய இடங்களுக்குப் பொழுது போக்கச் செல்லுகிறார்கள். புகழ்பெற்ற கலைஞர்கள், கூட்டுப் பண்ணை நாடகங்களுக்குப் போகிறார்கள். ஒவ்வொரு கூட்டுப் பண்ணையிலும், ஆஸ்பத்திரி, வாசகசாலை, சிசு பராமரிப்புச்சாலை ஆகிய பொது நிலையங்கள் இருக்கின்றன. மணம் செய்து கொண்டு, குடும்ப வாழ்வு நடத்த விரும்புகின்ற காதலர்களுக்கு விவசாயப் பண்ணை புதிய வீடு கொடுக்கிறது.

பொதுநலனைக் கருதி விவசாயிகள் ஒன்றுபட்டு விவசாயம் செய்யவேண்டும் என்பதுதான் கூட்டுப் பண்ணை அமைப்பின் நோக்கம்.

ரஷ்யப் பண்ணைகளில், விஞ்ஞானம் புரட்சிகரமான மாறுதலைச் செய்திருக்கிறது. விவசாயிகளையும் பட்டணவாசிகளையும் பிரித்து நின்ற சுவரை அது தகர்த்தெறிந்து விட்டது. அறியாமை, கடும் உழைப்பு, அச்சம், ஏழ்மை ஆகிய கொடுமைகளுக்கு இலக்காக நின்ற ரஷ்ய

விவசாயி மறைந்து விட்டான். எபரமோவ் போன்ற விவசாயிகள் தோன்றியிருக்கிறார்கள்.

அவர்கள் விஞ்ஞானம் என்ற ரகசிய ஆயுதம் தாங்கிய விவசாயிகள்! கிராமப் புறங்களில் இன்ப வாழ்வு நிலைபெறச் செய்ய சூரியனையும் பயன்படுத்துகின்ற சிறந்த விவசாயிகள்!

ரகசிய ஆயுதம் உருவாகிறது.

சோவியத் சர்க்கார் முதன் முதல் செய்த வேலை, விஞ்ஞானம் மகத்தான வளர்ச்சி அடையத் திட்டம் வகுத்ததுதான். 1918–ல், அத்திட்டத்தை லெனின் தயாரித்தார். அதை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு, விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டது. அன்று முதல், சோவியத் யூனியன் விஞ்ஞானத் துறையில், முழு வேகத்தில் முன்னேறத் தொடங்கியது. வேறு எத்துறையில் அரசாங்கக் கொள்கைகள் மாறிய போதிலும், விஞ்ஞானத்துறையில் மாறுதல் இல்லை.

வெளி நாடுகளிலுள்ள விஞ்ஞானிகள், சோவியத் கொள்கையைக் கடுமையாகத் தாக்கினார்கள். எனினும், ஒரு சிலர் ஆதரித்தனர். காரணம் இதுதான்.—

உலகப் போர் தொடங்கும் முன்பே, வாழ்க்கையின் பல துறைகளிலும் ஏற்பட்டது போன்று, விஞ்ஞானத் துறையிலும் நெருக்கடி ஏற்பட்டது. விஞ்ஞானம் விஞ்ஞானத்திற்காக, என்ற பழமையான கருத்து, வெகு வேகமாகச் சிதைந்தது. தொழில்கள் இளம் விஞ்ஞானிகளைக் கவர்ந்தன. தங்கள் புதுப் புனைவுகள் நசுக்கப் படுவதை அவர்கள் கண்டனர். பிரிட்டன், அமெரிக்கா, கனடா

மற்றுமுள்ள நாடுகளில், விஞ்ஞான ஆராய்ச்சியை, அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும், என்ற கோரிக்கை பிறந்தது.

கூட்டுக் கம்பெனிகளும் சில விஞ்ஞானிகளும் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். அக்கோரிக்கை தோல்வியுற்றது. அதுவரை அமைக்கப்பட்ட தேசிய ஆராய்ச்சிக் கவுன்சில்கள் தொழில் முதலாளிகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்குடன்தான் வேலை செய்து வந்தன. அவற்றிற்குப் போதிய பண வசதி இல்லை. அல்லது சிரத்தையின்றி நடத்தப் பட்டன. அதாவது விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் கிடைக்கின்ற ஆதாயம் பெரிய கூட்டுக் கம்பெனிகளுக்குச் சேர்ந்தன. ஆதாயத்தை குறைக்கக் கூடிய எந்த விஞ்ஞான ஆராய்ச்சியும் நசுக்கப்பட்டது.

இப்போக்கைத் தெளிவு படுத்தும் பல சம்பவங்கள் சமீப காலத்தில் அமெரிக்காவில் நடந்தன. தங்கள் ஆதாயத்தைப் பாதுகாப்பதற்காக, விஞ்ஞானத்தை நசுக்கி, தேசப் பாதுகாப்பை ஆபத்துக்குள்ளாக்கத் தொழில் முதலாளிகள், சிறிதும் தயங்க மாட்டார்கள், என்ற உண்மையை அமெரிக்க அட்டார்ணி ஜெனரல் எடுத்துக் காட்டினர். இதைக் கேட்டுப் பொதுமக்கள் திடுக்கிட்டார்கள். ஆனால், தொழில் நிபுணர்கள் அவ்வுண்மையை வெகு காலத்திற்கு முன்பே நன்கறிந்திருந்தார்கள். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் விஞ்ஞானம் பன்முறை பணத்தால் விலைக்கு வாங்கப் பட்டிருக்கிறது; லாபமில்லாவிட்டால் உதறி எறியப்பட்டிருக்கிறது.

இக்காலத்தில் ரஷ்யாவில் புதிய விஞ்ஞானம் தோன்றிற்று. புதிய ரஷ்யாவின் ஆரம்ப நிலையில், வறுமையும் துன்பமும் நாடெங்கும் பரவியிருந்த போதிலும்,

விஞ்ஞானத் திட்டத்திற்காக லட்சக்கணக்கான டாலர் கள் செலவு செய்யப்பட்டன. எங்கும் கேலிக்கும் சிரிப் புக்கும் உள்ளாகிய அத்திட்டம் இதுதான்:—

முதலாவது வயோதிகர்களின் சங்கமாக இருந்த ரஷ்ய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் பதினெட்டுக்கோடி மக்களின் கலனுக்குகந்த ஆராய்ச்சிக் கழகமாக மாறியது. இரண்டாவது, திறமையுள்ள விஞ்ஞான மாணவர்கள் மட்டும் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டார் கள் அவர்களுக்கு இலவசப் பயிற்சியளிக்கப்பட்டது. படிக்கிற காலத்தில் பல்கலைக் கழகம் அவர்களுக்குப் பண உதவி செய்தது. மூன்றாவது, விஞ்ஞான மாணவர்கள் சிறிது காலம் தொழிற்சாலை அல்லது கூட்டுப் பண்ணையில் வேலை செய்ய வேண்டும். நான்காவது, ஒரு சில ஆராய்ச்சி சாலைகளை நிர்மாணிப்பதற்குப் பதில், ஒவ்வொரு ஆலையி லும் வயலிலும் ஆராய்ச்சிக் கூடங்கள் அமைக்கப்பட்ட னன. ஐந்தாவது, தொழில்கள் விவசாயப் பண்ணைகள் அரசாங்கத் திட்டக் கமிஷன் ஆகியவை ஆராய்ச்சிக்குரிய பிரச்னைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மதிப்புக்குரிய விஞ்ஞானிகள், சுரங்கங்களிலும் வயல்களிலும் வேலை செய்கிறார்கள் என்ற விந்தையைக் கற்பனை செய்து பாருங்கள். அதிகாரிகளும் விவசாயிக ளும் தொழிலாளரும் விஞ்ஞானத் திட்டங்களை விஞ் ஞான ஆராய்ச்சியாளரிடம் சமர்ப்பிக்கிற வினோதத்தை நினைத்துப் பாருங்கள்!

உலக விஞ்ஞானிகள் சோவியத் திட்டத்தைக் கேள்வியுற்றதும் வெகுண்டெழுந்தார்கள். ஆனல், விரை வில் சிற்றம் தணிந்தார்கள். பிறகு வியப்புற்றார்கள்.

உண்மையில் லெனின் திட்டம் ஆகாயக் கோட்டையல்ல. பசியும் பிணியுமற்ற ஒரு புதிய உலகம் உருவாக, சிலர் பிடிப்பிலிருந்த விஞ்ஞானம், மக்கள் கைக்கு வர அவர் திட்டமிட்டார்.

இத்தகைய பொதுவுடமைக் கருத்தை, முதன் முதல் வெளியிட்டவர், 300 ஆண்டுகளுக்கு முன்னிருந்த புகழ்பெற்ற ஆங்கில சிற்பக்கலைஞர் **கிறிஸ்தோபர் ரென்!**

உலகில் முதன் முதல் தோன்றிய பெரிய விஞ்ஞான ஸ்தாபனம் **"ராயல் சொஸைட்டி"** அதை அமைக்க ரென் உதவி செய்தார். அப்பொழுது அவர் சொன்னார்:— "பயன் தரத்தக்க கலைகளையும் விஞ்ஞானத்தையும் வளர்த்து, மக்களின் துன்பத்தையும் கடும் உழைப்பையும் நீக்கி, செல்வத்தையும் பொருள்களையும் உழைப்பின் விகிதத்தில் பங்கிடுவதுதான் மகிழ்ச்சி தரும் அரசாங்கத்தை அமைப்பதற்கான வழி." பதினேழாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட ராயல் சொஸைட்டியின் அடிப்படை நோக்கம் இதுதான். ஆனால், சோவியத் ரஷ்யாவின் கொள்கை என்ன என்பதை இருபதாம் நூற்றாண்டில் அச்சங்கத்தினரால் அறிய முடியவில்லை!

லண்டன் நகரிலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கோயில்களை ஹிட்லரது படைகள் தகர்த்தெறிந்து விட்டன. அதன் பின்னர்தான், பிரிட்டன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் சோவியத் யூனியனோடு பொது எதிரியை ஒழிக்க ஒன்று பட்டன. அதற்கு முன் இருபது ஆண்டுகளில் சோவியத் யூனியனில் எத்தனையோ அதிசய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

4. நிலக்கரியின் மீது ஆதிக்கம்.

1900–ம் வருஷத்திலேயே, லெனின் புது உலகை நிர்மாணிக்க, விஞ்ஞானத்தை எவ்வாறு பயன் படுத்துவ தென்று ஆராயத் தொடங்கினர். அதற்கு அடிப்படைச் சாதனங்கள், எரிந்து உஷ்ணம் கொடுக்கிற பொருள்க ளும் சக்திகளும், என்ற முடிவுக்கு வந்தார். உலகெங்கும் சக்தி உற்பத்தி செய்யப்பட்டு, எல்லா இடங்களுக்கும் வினியோகிக்கப்பட்டால், அப்பொழுது, மனிதன் இயற் கையின் மீது முழு ஆதிக்கம் செலுத்தக்கூடிய வலிமை யுள்ளவனுவான். மனிதனுடைய விருப்பம்போல், இயற் கையைப் பணிய வைக்க முடியும்.

எனவே, ஏராளமான சக்தியை உற்பத்தி செய்யும் முயற்சியில் லெனின் ஈடுபட்டார். இவ்விஷயத்தைக் குறித்து அவர் நிரம்ப எழுதினர். ஒரு நாள் அவருக்கு நல்லதொரு கருத்துத் தோன்றிற்று.

இக்கருத்து முதன் முதலாக மெண்டலீவ் என்ற ரஷ்ய ரசாயன நிபுணராலும் வெகு காலத்திற்கு முன்பே வெளியிடப்பட்டது. அவர்கள் நிலக்கரி தோண்டும் முறையை ஒழிக்க யோசனை சொன்னர்கள். ஒரு மைல்

தூரம் பூமிக்குள் சென்று, நிலக்கரியைத் தோண்டி, மேலே கொண்டு வந்து, கப்பலிலும் ரயிலிலும் ஏற்றிக் கொண்டு போய், எரித்து வாயுவாக மாற்றி, ஆலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகிப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினர். விறகுக்குப் பதில் நிலக்கரியை உபயோகிப்பது எவ்வளவு ஊதாரித்தனமானது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். சுரங்கத்தில் சொற்ப நிலக்கரியை எரித்தால், சுற்றிலுமுள்ள ஏராளமான நிலக்கரி சூடேறி, நிலக்கரி வாயு உண்டாகும் என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். இவ் வாயுவை குழாய்களின் வழியாக வேண்டிய இடங்களுக்கெல்லாம் அனுப்பலாம். நிலக்கரியைத் தொடவேண்டிய அவசியமே இல்லை.

ஆங்கில ரஷ்ய சுரங்க முதலாளிகளுக்கு ஏராளமான லாபம் தரக்கூடிய இம்முறையை இஞ்சினீயர்கள் அலட்சியம் செய்துவிட்டார்கள். அது சாத்தியமில்லை என்று அவர்கள் சொன்னார்கள். இக்கருத்தை வெகு சிரத்தையுடன் ஆராய்ச்சி செய்த முதல் மனிதன், ரஷ்யப் புரட்சியின் தந்தை லெனின். 1913 மே 4-ல் பிரவ்டா பத்திரிகையில், அவர் இவ்விஷயத்தைக் குறித்துக் கட்டுரை யொன்று எழுதினார்.

நிலக்கரி பூமிக்குள் புதைந்து கிடப்பது மனிதனுக்குச் சவால் விடும் இயற்கைச் சக்திகளில் ஒன்று என்பதை அவர் தெளிவாகக் கண்டார். நிலக்கரியைப் பூமிக்குள்ளிருந்து மேலே கொண்டுவந்து, பிற இடங்களுக்கு அனுப்புவது கஷ்டமானது, ஆபத்தானது, மிகுந்த செலவுள்ளது. மெண்டலீவ், ராம்சே ஆகிய இருவரின் கருத்து, நிலக்கரியின் மீது மனிதன் ஆதிக்கம் செலுத்தி, அதை மனிதனு

டைய விருப்பத்திற்குத் தலை வணங்கச் செய்வதாகும் என்று லெனின் கண்டார்!

பூமிக்குள்ளிருந்து தயாரிக்கப்படுகின்ற வாயுவைப் பயன்படுத்த ஒரு புதுமாதிரியான டர்பைன் இயந்திரம் அவசியம். சற்றேபோது செலவாகின்ற தொகையில் ஐந்திலொரு பங்கு செலவில், அவ்வியந்திரத்தின் துணை கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யலாம்.

ஐரோப்பிய முதலாளிகளுக்கு நூதன தொழில் ஒன்றைத் தரக்கூடிய சிறந்ததொரு திட்டத்தைத் தன் மூளையில் அடக்கிக் கொண்டிருந்த மேதை லெனின். ஐரோப்பிய போலீஸ் வேட்டையாடியது! இவ்விந்தையை சற்று கற்பனை செய்து பாருங்கள்! அவர் அத்திட்டத்தை பிரசுரித்த போதிலும் பணக்காரர் அதைக் கவனிக்க வில்லை. ரஷ்யப் புரட்சி தோன்றியதும், லெனின் அரசாங்கக் காரியங்களில் தன் கவனத்தைச் செலுத்தினார் எனினும் நிலக்கரியை எரித்து வாயு தயாரிக்கும் திட்டத்தை அவர் ஸ்டாலினுக்கு விளக்கிக் காட்டினர்.

இத்திட்டத்தை ஸ்டாலின் பரிசிலனை செய்தார். தொழில் நிபுணர்களுக்கு முதலாவது அதில் நம்பிக்கை இல்லை. இஞ்சினியர்கள் சிரத்தை காண்பிக்கவில்லை விவசாய நிபுணர்களின் குற்றத்தை எபரமோவ் எடுத்துக் காட்டியது உங்களுக்கு நினைவிருக்கலாம். அது போலவே, புதிய விஞ்ஞானம் மக்களுக்குச் சொந்தம் என்றும், அதன் ஒவ்வொரு கருத்தையும் சோதனை செய்து பார்க்க வேண்டும் என்றும், ஸ்டாலின் விஞ்ஞானிகளுக்கு நினைவூட்டினர். முடிவாக, நிலக்கரிச் சுரங்கங்களில் தீயிட்டுச் சோதனை செய்யும்படி கட்டளையிட்டார்.

எதிர்பார்த்த அளவுக்கு மேலேயே சோதனைகள் வெற்றி பெற்றன. 1938-ல், கார்லோவ்கா என்ற சுரங்கம் தீயிடப்பட்டது. அதைத் தொடர்ந்து, பல சுரங்கங்கள் சோதனைக்குள்ளாயின. சோதனை வெகு வேகமாகப் பரவியது. இன்றைக்கு ரஷ்யாவில் பூமிக்குள்ளேயே நிலக்கரி வாயு மிக விரிந்த அளவில் தயாரிக்கப் படுவதால் அது தனித் தொழிலாக மதிக்கப் படுகிறது.

அது எப்படி வேலை செய்கிறது? நிலக்கரி இருக்கும் இடம் வரை பூமிக்குள் இரண்டு துவாரங்கள் செய்யப் படுகின்றன. சுரங்கத்தில், இவ்விரு துவாரங்களையும் இணைக்க ஒரு இடை வழி இருக்கிறது. நிலக்கரியில் நெருப்பிட்ட பிறகு, பூமியின் மேலிருந்து ஒரு துவாரத்தின் வழியாகக் காற்று, கீழே செலுத்தப்படுகிறது. எரியும் நிலக்கரியின் அளவும், உண்டாகும் உஷ்ணத்தின் அளவும், இக்காற்றின் அளவைப் பொறுத்திருக்கிறது. ஒவ்வொரு நிமிடமும், நூற்றுக்கணக்கான டன் நிலக்கரி எரிவதால், சுரங்கம், நிலக்கரி வாயுவை உற்பத்தி செய்கின்ற ஒரு பிரமாண்டமான தொழிற்சாலையாக மாறி விடுகிறது. மறு துவாரத்தின் வழியாக வெளியே வருகின்ற வாயுவைப் பெரிய குழாய்கள் எடுத்துச் செல்கின்றன. அவற்றின் வழியே நிலக்கரியின் சக்தி முழுவதும், மனிதனின் உபயோகத்திற்காக வெளிக் கிளம்புகிறது.

இத்தொழிலுக்குச் சுரங்கத் தொழிலாளி ஒருவன் கூட அவசியமில்லை. விசிறிகளைக் கவனிக்கச் சில மனிதரும், வாயு உற்பத்தியாவதைக் கருவியின் மூலம் கவனிக்கச் சில நிபுணர்களும்தான் தேவை.

நிலக்கரியை தோண்டி எடுப்பதின் மூலம், அறுபது சத விகிதம்தான் நிலக்கரி கிடைக்கும். சுரங்கங்களை எரிப்

பதின் மூலம் தொண்ணூறு சத விகிதம் நிலக்கரியை வாயு ரூபத்தில் பெற முடியும் என்று, கார்லோவ்கா சுரங்கத்திலிருந்து கிடைத்த புள்ளி விவரம் அறிவிக்கிறது. புதிய முறையில் கரி வீணாகாது. தீ சுரங்கத்தின் சந்து பொந்தெல்லாம் பரவி, கரி முழுவதையும் எரித்து விடுகிறது. மிதமான கரியும் நல்ல வாயுவாக மாறிவிடுகிறது.

நிலக்கரி வாயு எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது? மூன்று வகையாக உபயோகிக்கப்படுகிறது. ஒன்று, தொழிற்சாலை உலைகளில் எரிக்கப்படுகிறது. இரண்டு, மின்சார உற்பத்திக்கும் பயன்படுகிறது. இவ்வாயுவை உபயோகிப்பதினால், இது வரை செலவாகி வந்த தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்கும், குறைந்த செலவில், மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற லெனினுடைய கருத்து, சரியென நிரூபிக்கப்பட்டது. இதனால், ரஷ்யத் தொழில்கள் எவ்வளவு வளர்ச்சியுறும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்.

முடிவாக, இது வரை ஒருவரும் நினைத்திராத நூதன முறையில், இந்த எரியும் சுரங்கங்கள் பயன் படுத்தப்படுகின்றன. எப்படி? தானே வேலை செய்கின்ற மிகப் பெரும் ரசாயனத் தொழிற்சாலைகளாக. நீரும்—காற்றும் எரிசுரங்கத்தினுள் செலுத்தப் படுகின்றன. இதனால், சுரங்கத்தில் பிராணவாயு, ஜலவாயு, நைட்ரஜன், கரி ஆகிய பொருள்கள் தோன்றுகின்றன. இந்நான்கும் கணக்கற்ற ரசாயனப் பொருள்களைத் தருகின்றன. இத்தொழிற் சாலையைக் கட்டப் பணச் செலவில்லை. கருவிகள் அவசியமில்லை. மூலப் பொருள்கள் வேண்டாம். உஷ்ணமும் சக்தியும் இவற்றிற்கு இலவசமாய்க் கிடைக்கிறது. இத்தகைய தொழிற்சாலையினால் எவற்றையெல்லாம் உற்பத்தி செய்ய முடியுமென்று ஒரு இஞ்சினியரைக் கேட்டால்,

அவர் சொல்லுவார். நிலக்கரி காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், இவற்றை நிர்மாணிக்கலாம். போருக்குப் பின் உலகில் ரசாயனத் தொழில் பெரிதும் வளர்ச்சி பெறும் மார்க்கத்தை இது காட்டுகிறது.

கார்லோவ்கா சுரங்கத் தொழிலாளர் வேலையை இழந்து விட்டார்களே! அவர்களின் பிழைப்புக்கு வழி என்ன? சுரங்கங்களில் வேலை செய்வது மிக ஆபத்தானது. மக்கள் சக்தி வீணாகிறது. அவர்களை அக்கொடிய வேலையிலிருந்து விடுவிக்க வேண்டும், என்பதுதானே அத்திட்டத்தின் முக்கிய நோக்கம்! வேலையிழந்த சுரங்கத் தொழிலாளருக்கு வேறு வேலை கொடுக்கப்பட்டது. நிலக்கரியை எடுத்து குறைந்த செலவில் மின்சாரமும் ரசாயனப் பொருள்களும் ஏராளமாகத் தயாரிக்கப் பட்டதனால், சோவியத் தொழில்கள் விரைவில் வளர்ச்சியடைந்தன. சுரங்கங்களில் வேலை இழந்த தொழிலாளருக்குப் புதிய ஆலைகளில் வேலை கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, அதிக தொழிலாளர் வேண்டியிருந்தனர்.

விஞ்ஞானம் லாபத்தைப் பெருக்குவதற்காக அல்ல.

இயற்கை சக்திகளை அடக்கியாண்டு, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மனித உழைப்பைக் குறைப்பதே, விஞ்ஞானத்தைப் பயன் படுத்துவதின் குறிக்கோளாகும்.

நாம் இப்போது சிறிது சிந்திக்க வேண்டும். ஒரு விஷயத்தில் நாம் குழப்பம் அடையக் கூடாது. முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில், விஞ்ஞானம் மனித சமுதாயத்திற்கு ஒரு நன்மையும் செய்யவில்லை, என்ற மூடிவுக்கு வந்துவிடக் கூடாது.

கடந்த ஐம்பது ஆண்டுகளில், விஞ்ஞானமும் தொழிலும் பிரமாண்டமான வளர்ச்சி அடைவதற்குச் சாதகமாயிருந்தது முதலாளித்துவம்தான். முதலாளித்துவ காலத்திற்கு முன், விஞ்ஞானத்தில் எவருக்கும் சிரத்தை இருந்ததில்லை. விஞ்ஞான வளர்ச்சிக்குத் தொழில் வளர்ச்சி நல்ல வாய்ப்பாக இருந்தது அந்த வாய்ப்பைப் பயன் படுத்தி, விஞ்ஞானம் உலகை மாற்றி அமைத்தது

விஞ்ஞானமும் முதலாளித்துவமும் ஒன்றுபட்டு, விரைவில் முன்னேறின. இவ்வெற்றியைக் கண்டு சிலர் மதி மயங்கினர். "பெரிய கம்பெனிகளின் ஏகபோக உரிமையாக இல்லாவிடில், விஞ்ஞானம் வளர்ச்சியுறாது. ஏழைகளுக்கு மத்தியில் தாங்கள் பணக்காரராக ஆகாவிடில் விஞ்ஞானிகளுக்கு உற்சாகம் இராது. மூலை உழைப்பாளருக்குப் பணம் சன்மானமாக வழங்க வேண்டும்" என்று, அவர்கள் பறை சாற்றினர். இது தவறு.

சோவியத் பௌதிக ஆசிரியர் கபிட்சா என்பவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கிய சிறிது காலத்திற்குப் பின், கபிட்சாவின் புகழ் உலகமெங்கும் ஒலித்தது. ஆங்கில விஞ்ஞானிகள் அவருக்குப் பாராட்டு பத்திரம் வழங்கினர். இரு காரணங்களுக்காக அது குறிப்பிடத் தகுந்தது. முதலாவதாக அந்த இளம் சோவியத் அறிவாளி, அழியாப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளின் வரிசையிலே சேர்க்கப்பட்டார் இரண்டாவதாக, டாக்டர் கபிட்சா, இங்கிலாந்தில் சோவியத் சர்க்காருக்காக வேலை செய்து கொண்டிருந்தார். அவர் அங்கேயே தங்கியிருக்க வேண்டுமென்றும், அதற்காகப் பெரும் தொகை தரப்படுமென்றும் கேட்டுக் கொள்ளப் பட்டார். ஆனால், அவர் அக்கோரிக்கைக்கு இணங்க

வில்லை. ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்த அவர் சோவியத் யூனியனுக்குத் திரும்பிவிட்டார்.

நெப்போலியன் காலத்து சார்டிகாரினே என்ற பிரஞ்சு விஞ்ஞானி கண்டறிந்த விஞ்ஞான விதி யொன்றை, அவர் ஆராய்ந்தார். தொழில் புரட்சியைக் கொண்டு வந்த நீராவி சக்தியை, கார்னேவின் சிக்கலான கணிதம் சாத்தியமாக்கியது. பின்னால், அதே விதிப்படி இஞ்சினியர்கள் பெட்ரோல் இயந்திரங்களையும் கண்டு பிடித்தார்கள் இவற்றால் உலகிற்கு மோட்டார்களும் ஆகாய விமானங்களும் கிடைத்தன. இவ்விதி நித்திய மான உண்மை என்று பாராட்டப்பட்டதில் ஆச்சரிய மில்லை.

கபிட்சா இவ்விதியைக் கவிழ்த்துவிட்டார். அது ஓரளவுதான் உண்மை என்ற முடிவுக்கு அவர் வந்தார், கார்னே விதியை விஞ்ஞானிகள் குருட்டுத்தனமாக நம்பி யிருந்ததால், விஞ்ஞானம் பல வழிகளில் முன்னேறுவது தடைப்பட்டிருந்தது விஞ்ஞானம், எதையும் ஒரேயடி யாக நம்பக்கூடாது என்பது கபிட்சாவின் கருத்து. பழமையை மாற்றுவது எப்படி, சீர்திருத்துவது எப்படி, என்ற ஆராய்ச்சியினால்தான், எல்லா முன்னேற்றங்களும் ஏற்படுகின்றன.

விஞ்ஞானத்தைப் பற்றி விவாதிப்பது ஒரு விஷயம், முடிவு சரியென நிரூபிப்பது மற்றொரு விஷயம். கபிட்சா இவ்விரண்டையும் செய்தார். கணிதத்தைப் பயன் படுத்தி, அவர் தன்கருத்தை எழுதிமுடித்த பிறகு, ஒரு சிறு இயந்திரம் செய்தார். அது ஒரு சுழல் இயந்திரம். ஒரு நிமிடத்தில் அறுபதினாயிரம் தடவை சுழலக்கூடியது. அதற்கு முன் செய்யப்பட்ட சுழல் இயந்திரங்களினின் றும் அது முற்றிலும் மாறுபட்டது. அது மணிக்கு

ஆயிரத்தி இருநூறு மைல் வேகத்தில் காற்றை வீசும். மிகக் குளிர்ந்த பொருள்களான திரவக் காற்றையும், திரவ ஹீலியம் என்ற திரவக் காற்றையும், மற்ற இயந்திரங்களினுல் செய்வதைக் காட்டிலும் மிக விரைவாகவும் குறைந்த செலவிலும் அவர் செய்தார். இச்சிறிய சுழல் இயந்திரம் சோவியத் யூனியனில் விஞ்ஞானக் காட்சிப் பொருளாக இருக்கவில்லை. அது உடனடியாகத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது.

பிரமாண்டமான சுரங்கங்களில் உற்பத்தியான வாயுவை கபிட்சா உபயோகித்து, தன்னுடைய சுழல் இயந்திரத்தினுல் அதை மிகக் குளிர்ந்த திரவப் பொருளாக மாற்றினர். இத்திரவப் பொருளால் பல உபயோகங்கள் உண்டென்று, ரசாயன நிபுணர்கள் கண்டுபிடித்தனர். எளிய கருவிகளைக்கொண்டு, உயர்ந்த ரக எரி பொருளையும். வெடி மருந்துகளையும், ரப்பரையும், பிளாஸ்டிக் முதலிய எண்ணிறந்த பொருள்களையும் செய்தார்கள்.

இவையனைத்தும் பிரமிக்கத்தக்க வேகத்தில் நடந்தன. டாக்டர் கபிட்சா கண்டுபிடித்த புதுப் புனைவை வெளியிட்ட மூன்று ஆண்டுகளுக்கு, அது போன்ற இயந்திரங்கள், சோவியத் தொழிற்சாலைகளுக்கும் செஞ்சேனைக்கும் வேண்டிய ரசாயனப் பொருள்களை உற்பத்திசெய்வதற்குப் பயன்படுத்தப் பட்டன. நம் நாட்டின் இஞ்சினீயர்களும், ரசாயன நிபுணர்களும், தொழில் முதலாளிகளும், கபிட்சாவின் புதுப்புனைவு, உலகத் தொழில் அரங்கில் மாபெரும் மாற்றத்தை உண்டாக்கும் என்பதை நன்கறிவர். எனினும், சில பக்கங்களுக்குள் அடங்கிய சொற்ப கணிதமும் சிறிய சுழல் இயந்திரமும், எப்படி

வெகு விரைவில், புதியதொரு தொழில் முறையாக மாறிய தென்பதை, அவர்களால் அறியமுடியவில்லை.

காரணம் இதுதான். டாக்டர் கபிட்சாவின் புதுப் புனைவு, மிக முக்கியமானதொரு விஞ்ஞான முன்னேற்றம். சோவியத் யூனியனில் அது உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அங்கு விஞ்ஞானம் மக்களின் ஆயுதம். ஆதலால் கபிட்சாவின் புதுப்புனைவு நாட்டுக்கு நலனளிக்கக் கூடிய முறையில், ஆலைகளிலும் தொழிற் சாலைகளிலும் நடைமுறையில் கையாளப்பட்டது. நம் நாட்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும், தங்கச் சுரங்கம் அல்லது எண்ணெய்ச் சுரங்கம், எவ்வளவு விரைவில், அபிவிருத்தி செய்யப்படுமோ, அவ்வளவு விரைவில் அங்கே அந்த விஞ்ஞானப் புதுப்புனைவு அபிவிருத்தி செய்யப்பட்டது. கபிட்சாவின் சுழல் இயந்திரம், ரஷ்ய மக்கள் அனைவருக்கும் பலனளிக்கிறது. ஆனால், நம் நாட்டில் புதிதாகத் தோண்டப்படும் தங்கச் சுரங்கம் அல்லது எண்ணெய்க் கிணறு, ஒரு தனி மனிதன் அல்லது கூட்டுக் கம்பெனியின் சொந்தச்சொத்து. அதனால் சமுதாயம் முழுமைக்கும் பலனில்லை.

கடந்த பத்தாண்டுகளில், சோவியத் தொழில் எவ்வளவு வேகமாக விரிவடைந்திருக்கிறது, என்ற உண்மையை விளக்கிக் கூற, சில நூல்களும் கட்டுரைகளும் சமீபகாலத்தில் வெளிவந்திருக்கின்றன. இவ்வளர்ச்சியைத் தொழிற் சஞ்சிகைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஆனால் புள்ளிவிவரங்கள் மனதைக் கவரா. சோவியத்தின் தொழில் வளர்ச்சியைத் தெரிந்துகொள்ள, பிரமிப்பை உண்டாக்கும் ஒரு சம்பவம் போதும்.

1921–ல், சோவியத் யூனியன், போர் நோய், பஞ்சம் ஆகிய கொடுமைகளுக்கு இலக்காயிருந்த பொழுது, நீப்பர் ஆற்றின் மீது மின்சார அணைகட்டச் சில விஞ்ஞானிகள் திட்டமிட்டனர். உலகமக்கள் அதனைக் கனவெனவே கருதினர். அமெரிக்கர்கூட அதை ஒரு ராட்சஸத் திட்டமெனக் கருதினர். ரஷ்யர்கள் பெருமைப்படத்தக்க அணையோ, கட்டிடமோ, அக்காலத்தில் ரஷ்யாவில் இல்லை. நீப்பர் அணை ரஷ்யர்களுக்கு ஒரு கனவாக இருந்தது. ஆனால் அவர்கள் தங்கள் கனவை நனவாக்கினர். அணையும் உருவாகியது. இவ்வணையைப் பற்றிக் கேள்விப்பட்ட பிற நாட்டு மக்கள் ஏளனம் செய்தனர். பிற் போக்கு நாட்டில் அவ்வணை இருக்கத்தகுதியற்றது என்று கேலியாகப் பேசினர். ரஷ்யர்கள் நீப்பர் அணையை வணங்கினர் என்றும், அதை ஒரு புனித ஆலயமாக வழி பட்டனர் என்றும் சொல்லப்பட்டது.

இந்த ராட்சஸ மின்சார அணை ஏராளமான உழைப்பினாலும் பொருளினாலும் கட்டப்பட்டது. நாடு முழுவதும் வறுமைப் படுகுழியில் வீழ்ச்சியுற்றிருந்த காலத்தில், அது கட்டப்பட்டது. எனவே, அது ரஷ்ய மக்களின் வியர்வை கண்ணீர் இரத்தம் ஆகியவற்றின் மாபெரும் சின்னம். தங்கள் கைகளாலும் அறிவுத் திறனாலும் கட்டிய அவ்வணையை, அவர்களே உடைத்தெறிந்தனர். தற்கால உலகில், சிறந்ததொரு அற்புதமாக விளங்கிய நீப்பர் அணை போர்க்காலத்தில், எதிரியின் கைவசம் சிக்காதபடி உடைத்தெறியப்பட்டது. இச் செய்தியைக் கேட்ட உலகம் திடுக்கிட்டது. ரஷ்யா தோற்று விடும் என்ற அச்சத்தால்தான் அணையை அழித்து விடும்படி, ஸ்டாலின் கட்டளையிட்டார் என்று சோவியத் எதிரிகள் பேசினர்

இச்செய்தியை சோவியத் மக்கள் கேட்டதும் கோபமும் வேதனையும் கொண்டெழுந்தனர். ஆனால், மக்களின் மன உறுதி மேலும் வலுவுற்றது. பகைவரின் மீதும் அவர்கள் கடும் சீற்றமடைந்தனர். செஞ்சேனை வீரப்போர் புரிந்தது சோவியத் தொழில் அழிந்து விடவில்லை. நீப்பர் அணை உடைத்தெறியப்பட்ட செய்தியைக் கேட்டு திடுக்கிட்ட உலக மக்களுக்கு ரஷ்ய இஞ்சினியர்கள் சொன்னதாவது: 'நாஜி அரக்கர்களை ஒழித்துக்கட்டிய பிறகு நாங்கள் மீண்டும் அணையைக் கட்டுவோம். அவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கும் வரை அவர்களுக்குப் பயன் படும்படி எதையும் விட்டு வைக்க மாட்டோம். என்ன நேரிட்டாலும் சரி, பலன் கொடுக்கத் தகுந்த ஒரு சாதனமும் அவர்கள் வசம் சிக்காது.''

உலக இஞ்சினியர்களும் தொழில் நிபுணர்களும், பிறரும், என்ன நேரிட்டதென்பதை, மெல்ல மெல்ல அறிந்து கொள்ளத் தொடங்கினர். நீப்பர் அணை கட்டி முடிந்த காலத்திலிருந்து பத்தாண்டுக்குள், போலந்திலிருந்து மஞ்சூரியா வரையிலும், சைபீரியாவிலிருந்து ஆசிய உஷ்ணப் பிரதேசம் வரையிலும், புதிய விஞ்ஞானம் பல மின்சார நிலையங்களை சோவியத் யூனியனுக்குத் தந்திருக்கிறது. நீப்பர் மின்சார நிலையம் அழிந்தது மாபெரும் நஷ்டந்தான். எனினும், அமெரிக்கா கூட எட்டிப்பிடிக்க முடியாதபடி மிகப்பரந்த அளவில் நடைபெறுகிற சோவியத் மின்சாரத் திட்டத்தில் நீப்பர் ஒரு சிறிய பகுதிதான்.

பத்தாண்டுகளில் சோவியத் யூனியன் மிகுந்த மாறுதலடைந்து விட்டது. இம்மாற்றத்தைப் பற்றிய வதந்தி, அடிக்கடி வெளி உலகிற்கு எட்டியது. இச்செய்திகளை வெளி உலகம் அநேகமாக நம்பவில்லை.

5. அணுவும் போரும்.

அணுக்களின் தன்மையைத் தெரிந்து கொள்ள, அணுப் பிளத்தல் என்னும் ஆராய்ச்சி நடைபெறுவதை நாம் படித்திருக்கிறோம். இப்போது சோவியத் யூனியனில் பிளக்கப்பட்ட அணுக்கள் விஞ்ஞான காரியங்களுக்காக மட்டும் அல்லாமல், ஹிட்லரை ஒழித்துக் கட்டுவதற்காகவும் பயன் படுத்தப்படுகின்றன. ரஷ்யர்கள், அணுக்களைக் கூடப் படை திரட்டி விட்டார்கள். "அணு ஆயுதங்கள்" செஞ்சேனைக்கு வன்மை மிக்க ஆயுதங்களாகி விட்டன.

ஜெர்மன் இராணுவம் ஸ்டாலின் கிராடில் சின்னபின்னமாக்கப் பட்டபொழுது, ஹிட்லரும் கோயபெல்சும் பேசியது நமக்கு நினைவில் இருக்கிறது. ஏராளமான டாங்கிகளையும் பீரங்கிகளையும் ஆகாய விமானங்களையும், ரஷ்யர்கள் கொண்டு வந்து குவித்ததால்தான் தேல்வி ஏற்பட்டதென்று, ஜெர்மன் மக்களுக்கு அவர்கள் சமாதானம் கூற முயன்றனர். நாஜித் தலைவர்கள் தங்கள் வியப்பை, ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தினர். அவ்வளவு ஏராளமான ஆயுதங்கள் செஞ்சேனைக்கு எங்கிருந்து கிடைத்தன; என்பது அவர்களுக்குத் தெரியாது. ஒரு சிறு பகுதி

தான், அமெரிக்கா, கனடா, பிரிட்டன் முதலிய நாடுகளிலி ருந்து கிடைத்தது.

நாஜிகள் சோவியத் யூனியனைத் தாக்கிய பொழுது, ஏராளமான உற்பத்தி ஸ்தலங்களையும், மூலப் பொருள்க ளையும், ரஷ்யர் இழந்து விட்டதாகப் பறை சாற்றப் பட் டது ஹிட்லரும் அப்படியே நம்பியிருந்தான். ஆனல், செஞ்சேனை திடீரென்று புதிய இயந்திர சாதனப் போர்க் கருவிகளைக் கொண்டு குவித்தது. இவை எங்கிருந்து வந் தன? இவற்றைச் செய்தவர் யாவர்?

ஆண், பெண், குழந்தை அனைவரையும் போர் முயற் சியில், சோவியத் சர்க்கார் ஒன்று திரட்டியது எனவும், எதிரிகள் வசம் சிக்கிய பகுதிகளிலிருந்த ஆலைகள் பல, போர் முனைக்கு வெகு தூரத்திலுள்ள யூரல் மலைகளுக்கு மாற்றப் பட்டிருக்கின்றன, எனவும் நமது பொருளுற் பத்தி நிபுணர்கள் சொன்னர்கள். இவ்விரு காரணங்க ளும் ஓரளவு உண்மைதான். ஆனல் மிக முக்கியமான காரணத்தை அவர்கள் சொல்லவில்லை.

இரண்டாயிரம் மைல்கள் நீளமுள்ள சோவியத் போர் முனைக்கு, ஏராளமான போர்க் கருவிகள் வந்து குவிந்ததின் ரகசியம், புதிய உற்பத்தி முறைகளும், புரட் சிகரமான தொழில் நுணுக்கங்களுமே! சோவியத் யூனி யனின் டாங்கிகள், துப்பாக்கிகள், ஆகாய விமானங்கள், பிறநாடுகளில் உள்ளவற்றைவிட மேலானவை. இப் போது, அவற்றின் உற்பத்தியும் நினைக்க முடியாத அள வுக்குப் பெருகி விட்டது.

சோவியத் யூனியனின் அமோக உற்பத்திக்கு அணு சக்தியே முக்கிய காரணம். புதிய உற்பத்தி முறையின் ரகசியம், அணுக்களைப் பிளப்பதிலல் உண்டா

கிற எலக்டரான்கள்தான். கோடி கோடி எலக்டரான்கள் ஒரு அவுன்ஸ் நிறைகூட இராது. அவ்வளவு சிறிய பொருளை, எப்படி போர்க் கருவிகள் உற்பத்தி செய்கின்ற ஆலைகளில் பயன்படுத்த முடியும்?

போர் முனைகளில், செய்தி அனுப்பும் சாதனங்களுக்கும், துருவிப் பார்க்கும் கருவிகளுக்கும், எலக்டரான்கள் பயன்படுகின்றன. ஒவ்வொரு நாடும் எலக்டரான் முறைகளைப் பயன் படுத்துகிறது. அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் போர்க் கருவிகளின் உற்பத்திக்கு எலக்ட்ரான்களைப் பயன் படுத்துவதில், சிறிது முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. ஆனால், சோவியத் யூனியனில் மட்டுந்தான், இந்த நுட்பப் பொருள்கள் அரும் பெரும் செயல்களைச் செய்கின்றன.

எதிரியை எதிர்த்துத் தாக்குவதற்குச் சற்று முன், அதிசயிக்கத்தக்க உற்பத்தி ஏற்படும் என்றார் ஸ்டாலின். போர் தொடங்கிய முதல் ஆண்டில், சோவியத் போர்க் கருவிகள், விரோதிகளின் கருவிகளைவிடச் சிறந்தவையாக இருந்தன. எனினும், குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. பெரிய உற்பத்தி நிலையங்களை இழந்து விட்டபோதிலும், கஷ்டம் தீர்க்கப்படும் என்று, ஸ்டாலின் உறுதி கூறினார். அவர் குறிப்பாகச் சொன்ன இம் முக்கிய விஷயம் நம் நிருபர்களின் கவனத்தில் படவில்லை.

செஞ்சேனை எதிர்த் தாக்குதல் தொடங்கியதும், போர்க் கருவிகள் ஏராளமாகக் குவிந்த அற்புதம் உலகிற்குத் தெரிந்தது. சோவியத் செய்தி இலாகாத் தலைவர் 'அலெக்சாண்டர் செர்பகோவ்' அப்பொழுது சொன்னதாவது: "நாட்டின் இராணுவ பலத்திற்கு முக்கிய காரணம், சோவியத் விஞ்ஞானியின் அரிய செயல்களே. புதிய மூலப் பொருள்களைத் தேடிப் பிடித்து, அவற்றைப்

பயன்படுத்த புதிய தொழில் முறைகளையும் விஞ்ஞானி கள் கண்டுபிடித்தார்கள்." செபர்கோவ், சோவியத் யூனி யன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி காரியத ரிசி. அவர் வெற்றுரை பகர்பவரல்ல. போர்க் கருவிகளை ஏராளமாக உற்பத்தி செய்ய, சோவியத் விஞ்ஞானம் புதிய முறைகளை அபிவிருத்தி செய்திருக்கிறதென்று, அவர் பட்டவர்த்தனமாகக் கூறினர்.

எலக்ட்ரான்களால் உற்பத்தி செய்வது, புதிய முறைகளில் ஒன்று. மனித பலத்தினால் செய்ய வேண்டிய வேலையை எலக்ட்ரான்கள் செய்கின்றன.

போர்க்காலத்தில் போர்க் கருவிகளையும், சமாதான காலத்தில் உபயோகப் பொருள்களையும், உற்பத்தி செய்ய நம் ஆலைகள் மின்சாரத்தைப் பயன் படுத்துகின்றன., மனிதன் செய்யவேண்டிய வேலையை மின்சாரம் செய்கி றது.

(1) "நீங்கள் எப்பொழுதாவது ரோபோ அல்லது இயந்திர மனிதனைப் பார்த்திருக்கிறீர்களா? அவன் மின் சார விந்தை. மனிதன் கட்டளையிடுகின்ற சாதாரண வேலையை அவன் நிறைவேற்றுகிறான். அவன் நாற்காலி யிலிருந்து எழுந்திருக்கிறான், நடக்கிறான், கைகுலுக்குகி றான்."

(2) "மணிக்கணக்காக கண்கள் விநோதச் சித்தி ரங்களைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றன."

சிந்தனை செய்யக் கூடிய அல்லது குற்றேவல் செய் யக்கூடிய இயந்திர மனிதர்களைப் பற்றிப் பல்லாண்டு களாக எழுத்தாளர் கற்பனைக் கதைகள் எழுதி வந்தார்கள்.

இப்பொழுது, சோவியத் யூனியனில் யந்திர மனிதன் வேலை செய்கிறான். இம்மனிதனின் நரம்புகள் மின்சாரக் கம்பிகள்தான். எண்ணங்களுக்குப் பதிலாக, அவன் மூளை எலக்டரான்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. அவற்றிற்குக் கண்கள் உண்டு. அவை களைப்புறுவதில்லை, தவறிழைப்பதில்லை, கண்ணிமைப்பதுமில்லை. மணிக் கணக்காக அதன் கண்கள் விநோதச் சித்திரங்களைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றன. செம்பினாலும், கண்ணாடியினாலும், எலக்டரான்களாலும் ஆக்கப்பட்ட இவ் வற்புத மனிதன் காரியாலயத்தில் உட்கார்ந்திருக்கிறான். ஆனால், அவன் கைகள் மற்றொரு கட்டிடத்திலுள்ள இயந்திர ஆலையில் வேலை செய்கின்றன!

இவ்விந்தை மனிதன் என்ன வேலை செய்கிறான்? மின்சாரக் கண்கள் புதுமாதிரியான பிரதிப் படத்தைப் பார்க்கின்றன. ஒரு சிக்கலான இயந்திரப் பகுதியை அப் பிரதிப் படம் காட்டுகிறது. இயந்திர மனிதன் பிரதிப் படத்தைப் படிக்கிறான். நரம்புகளின் வழியாக, மின்சாரக் கைகளுக்கு எலக்டரான் கருத்துக்களை அனுப்புகிறான். கைகள் உலோக வேலை செய்கின்ற பெரிய லேத்தை இயக்குகின்றன.

இப்புதுப் புனைவால், மனித உழைப்பை அகற்றி விட வேண்டும் என்பது சோவியத் நோக்கமல்ல. முக்கியமான பல அம்சங்களில், இயந்திர மனிதன், தேர்ச்சி பெற்ற தொழிலாளியைவிடச் சிறந்தவன். முதலாவது, பிரதிப் படங்களைச் சரியாக வாசிக்கிறான். அதேபோல் லேத் கருவிகளும் எப்பொழுதும் ஒழுங்காக வேலை செய்கின்றன. இதனால் மிகச் சுருங்கிய கால அளவில், ஏராளமான உற்பத்தி சாத்தியமாகிறது. மேலும், அதன் இயந்திர வேலையைச் சரிபார்க்க வேண்டியதே இல்லை.

ஏனெனில், பிரதிப் படத்தில் உள்ளபடியே உற்பத்தி செய்யப்படுகிறது.

அந்த ரோபா மனிதன் இருபத்திநான்கு மணி நேரமும் வேலை செய்கிறான். அவனுக்கு ஓய்வு அவசிய மில்லை. அவன் களைப்படைவதில்லை, நோயுறுவதில்லை, ஆபத்திற்குள்ளாவதில்லை

மேலும், அவ்வரிய புத மனிதன், இரு கண்களாலும், கண்ணுடிக் குழாய் மூளையாலும், ஒரே காலத்தில், ஒரே மாதிரியான நூற்று லேத்துகளை இயக்குகிறான்.

ரஷ்யாவில் மூலப் பொருள்களைப் பயன் படுத்த, விஞ்ஞானிகள் புதிய முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என செர்பகோவ் குறிப்பிட்டது, இவ்வியந்திர மனிதனைப்போன்ற புதுப் புனைவுகளைத்தான். இயந்திரங்களை இயக்க, பயிற்சி பெற்ற தொழிலாளர் ஆயிரக் கணக்கில் வேண்டும் இப்பிரச்னையைச் சோவியத் யூனியன் சில மாதங்களில் தீர்த்துவிட்டது. எலக்டரான் மூளையால், இயந்திரத்தை இயங்கச் செய்ததின் மூலம் அப்பிரச்னை தீர்ந்தது. ரோபோ மனிதன் ஒரு புதிய இயந்திரத்தை இயக்குவதற்குப் புதுப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியமில்லை. புதுப் பிரதிப் படம் ஒன்றைக் கொடுத்து விட்டால் போதும். படம், ரோபோவின் கண்களுக்குப் புதிதாகத் தென்படுவதில்லை.

6. தீர்க்க தரிசனம்.

1931-ல், ஸ்டாலின் செய்த பிரசங்கத்தை நம் நாடுகள் கவனிக்கவில்லை. அது ஒரு தலை சிறந்த தீர்க்க தரிசனமாக உலக வரவாற்றில் இடம் பெறும்.

"முற்போக்கடைந்துள்ள நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது, நாம் நூறாண்டு பின் தங்கி நிற்கிறோம். இன்னும் பத்தாண்டுகளில், அம் முன்னேற்ற நாடுகளை நாம் எட்டிப் பிடித்தாக வேண்டும். இல்லையேல் அவை நம்மை நசுக்கிவிடும்" என்பதே அவரது தீர்க்க தரிசனம்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு, ஹிட்லர் ஐரோப்பாவில் முற்போக்கு நாடுகளின் தொழிற்சாலைகளை எல்லாம், தன் ஆதிக்கத்தில் ஆக்கிக் கொண்டு, சோவியத் யூனியனைத் தாக்கினான்.

அப்பொழுது ஸ்டாலின் உலகிற்கு அறிவித்ததாவது: "தங்கள் மின்னல் தாக்குதலினால் வெற்றி பெறும் திட்டத்தை, ஜெர்மானியர் மறைக்கவில்லை, அவர்கள் அதைப் பலவாறாக விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள், ஒன்றிரண்டு மாதங்களில் சோவியத் யூனியன் மீது வெற்றி காண்பது உறுதி என கணக்குப் போட்டிருக்கின்றனர்.

அவர்களின் பைத்தியக்காரத் திட்டம் படுதோல்வி யுறும்.''

நாருண்டுகளின் வளர்ச்சியை சோவியத்துகள் பத்தாண்டுகளில் பெற்று, மேலும் முன்னேறுகின்றன என்பதை, நமது இராணுவ நிபுணர்களும், தொழில் நிபுணர்களும் ஒப்புக்கொள்வர். ஹிட்லர் அவற்றை அழிக்க முயன்றான். அவனுடைய மின்னல் தாக்குதல் திட்டம் தோல்வியுற்றது.

ஒவ்வொருவரும் வியப்படைந்தனர். ஐக்கிய நாடுகளின் தொழில் நிபுணர்கள் வாயடைத்துப் போயினர். ஹிட்லரின் நிபுணர்களே திடுக்கிட்டனர், நூறுண்டுகளின் இடை வெளியைப் பத்தாண்டுகளில் தாவிப் பிடிக்க, சோவியத்துகள் எத்தகைய மந்திர சக்தியைக் கையாண்டனர்?

மந்திர சக்தி ஒன்றுமில்லை. அவை புதிய விஞ்ஞானத்தைப் பயன் படுத்தின. எந்நாடும் கையாளாத அப்புதிய விஞ்ஞானத்தை சோவியத்துகள் கையாண்டன. சோவியத் விஞ்ஞானிகளும், தொழில் நிபுணர்களும் திட்டங்கள் தயாரித்தனர். அவற்றை நிறைவேற்றும்படி ஸ்டாலின் மக்களிடம் கொடுத்தார்.

''விஞ்ஞானமும், அதைப் பயன் படுத்தப் பயிற்சி பெற்ற மக்களும் நம்மிடம் இருப்பதால், நாம் எல்லாக் காரியங்களையும் செய்து முடிக்க முடியும்'' என்றார் ஸ்டாலின்.

அவர் சொன்னது போலவே நடந்து, சோவியத்துகளில் 1917-ல் இருந்த விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களின் எண்ணிக்கை 210. 1937-ல் 2200.

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், 1917,ல். 120,000 000. ஆனால் 1937–ல் விஞ்ஞானப் பயிற்சி பெற்ற தொழில் நிபுணர்களின் எண்ணிக்கை 9,000 000.

1937–ல் தொழில் பள்ளிக்கூடங்கள் நீங்கலாக 716 பல்கலைக் கழகங்களும், கலாசாலைகளும், உயர்தரப் பயிற்சி நிலையங்களும் இருந்தன. ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடுகள் உள்பட ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும், சோவியத் யூனியனின் பல்கலைக் கழகங்களிலும், கலாசாலைகளிலும் படித்து வந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகம்.

ஒரு காலத்தில் பிற நாட்டு மக்கள் அப்புள்ளி விவரம் பொய்யென ஏளனம் செய்தனர். அது பொய்யல்ல, உண்மையே. மின்னல் தாக்குதல் தடுத்து நிறுத்தப் பட்டதும், ''சோவியத் யூனியன் பலம் பெருகி வருகிறது'' என ஸ்டாலின் சொன்ன பொழுது ஹிட்லரின் தாக்குதலினுல் அவதியுற்ற மக்கள் அதாவது சர்ச்சில் முதல், பத்திரிகைப், பையன்கள் வரை ஸ்டாலினுக்கு நன்றி கூறினர்.

விஞ்ஞானக் கழகத் தலைவர் ஸ்டாலினுக்குக் கீழ்க் கண்ட உறுதிமொழி கொடுத்தார்:

''பிரியமுள்ள ஜோசப் விஸ்ஸாரியானேவிச்! உலகம் பயங்கரமான நிலையிலிருக்கிறது. உலக நாகரிகத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து, மக்களை அடிமைப் படுத்தி, நிகழ்ச்சிகளைப் பின் தள்ளி மனித சமுதாயத்தின் பண்பாட்டை மிதித்துத் துவைப்பதே, பாசிஸத்தின் குறிக் கோள் என்பதை நாங்கள் அறிவோம். மக்கள்தான் எல்லாவற்றிலும் விலையுயர்ந்த செல்வம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நம் அரசாங்கத்தையும் சுதந்

தீரத்தையும் எங்கள் முழுபலத்தினாலும் காப்போம்! நாங்கள் மனிதாபிமானிகள். நாம் மக்களை விலைமதிப்பற்ற மாணிக்கங்களாகக் கருதுகிறோம். மிருக பலத்தினால் அடிமைப் படுத்தப்பட்டு, கொடிய அரக்கரின் காலடிகளில் கிடந்து தவிக்கின்ற மக்களின் புலம்பல் எங்கள் செவிகளைத் துளைக்கிறது. எனவே, விஞ்ஞானம் என்னும் ஆயுதத்தின் மீது எங்களுக்குள்ள பிடிப்பை வலுவாக்குகிறோம். கொடுமை, இழிவு, சாக்காடு முதலிய கேடுகளிலிருந்து, எங்கள் சகோதர சகோதரிகளைப் பாதுகாக்க, இந்நாட்டின் சக்திகள் அனைத்தையும் விஞ்ஞானம் ஒன்று திரட்டும். எங்கள் அன்பார்ந்த விஸ்ஸாரியானேவிச்! வெகுகாலமாக முன்னேறிவருகின்ற தற்கால விஞ்ஞானத்தின் ஆற்றலைப் பெருக்கி எதிரியை முறியடிப்போம், என்று நாங்கள் உங்களுக்கு உறுதி கூறுகிறோம். விஞ்ஞானத்தின் மகத்தான சக்தியால் பாசிஸ மிருகத்தைச் சின்னபின்னமாக்குவோம்!''

இவ்வுறுதிமொழி கொடுத்தவர் பிரபல விஞ்ஞானி விலாடிமிர் கொமரோவ். அவர் சோவியத் விஞ்ஞானக் கழகத் தலைவர்.

புதிய விஞ்ஞானத்தை நான் மிகைப்படுத்திச் சொன்னதாக நீங்கள் முதலில் நினைத்திருக்கலாம். நான் சொன்னது உண்மை. புதிய விஞ்ஞானம் ரஷ்யாவின் மாபெரும் ஆயுதம் ஹிட்லரின் கொலைகாரக் கும்பலிடமிருந்து உலக நாகரிகத்தைப் பாதுகாக்க. சோவியத் செஞ்சேனை, சோவியத் கொரில்லா வீரர், சோவியத் மக்கள் ஆகியோரால் கையாளப்பட்ட மகோன்னத ஆயுதம்!

டாக்டர் கொமரோவின் சொற்களை மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள். நம் நாட்டில் ஒரு விஞ்ஞானி

யோ அல்லது ஒரு இஞ்சினீயரோ, தன் அரசாங்கத் தலைவரிடம் அவ்வாறு பேசியதைக் கேட்டிருக்கிறீர்களா? நிச்சயமாக கேட்டிருக்க முடியாது. நமது விஞ்ஞானம் வேண்டாத குழந்தையைப்போல் நடத்தப்படுகிறது. விஞ்ஞானிகள் அன்றுட வாழ்க்கையோடு எவ்வித தொடர்புமின்றி, தனித்து நிற்கவேண்டும் என்பது, நமது அரசாங்கத்தின் விருப்பம். ஆனால், சோவியத் யூனியனில், விஞ்ஞானிகளும் மக்களும் எவ்விதப் பிரிவுமின்றி ஒன்று பட்டிருக்கிறார்கள்.

"உலகில் முதன் முதலாக விஞ்ஞானக் கொள்கையை நடைமுறையில் சாத்தியமாகச் செய்த பெருமை, எங்கள் அரசாங்க அமைப்பைச் சார்ந்தது" என்று விஞ்ஞானக் கழக உறுப்பினரான டாக்டர் போரிஸ் கெல்லர், எனக்கு அனுப்பிய கட்டுரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அது எப்படிச் செய்யப்பட்டது?

ரஷ்யாவில் விஞ்ஞான அபிவிருத்திக்குக் கையாளப்பட்ட உபாயங்களாவன:

1. மனித சமுதாயம் நல்வாழ்வு பெறுவதற்கான சிறந்த ஆயுதம் விஞ்ஞானம், என்ற உண்மை சோவியத் ஆண் பெண் குழந்தை அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது.

2. விவசாயிகளும் தொழிலாளரும் தங்கள் அன்றுட வேலைகளில் எழுகின்ற பிரச்னைகளை அண்மையிலுள்ள விஞ்ஞான நிலையங்களுக்குத் தெரிவித்தார்கள். சில சிறந்த கருத்துக்கள் சாதாரண மக்களிடமிருந்து

தோன்றின எனவே, விஞ்ஞானம் சிலருக்குத்தான் உரிமை என்ற நிலைமை மாறியது.

3. இரவு பகலாக விஞ்ஞான ஆராய்ச்சிக்கு வேண்டிய பணம் தட்டுத் தடங்கலின்றிக் கொடுக்கப்பட்டது. விஞ்ஞான முன்னேற்றத்தைத் தடைசெய்யக் கூடிய அதிகாரவர்க்கம் ஒழிக்கப்பட்டது.

4. சோதனைக் கூடங்கள் அனுப்புகிற ஒவ்வொரு அறிக்கையையும், எஞ்சினீயர்கள் கவனமாகப் படித்து, சிறந்த கருத்துக்களை உருவாக்கினர்.

5. எஞ்சினீயர்களின் சோதனை வெற்றிபெற்றால், சர்க்கார் தொழில் திட்டக் கமிஷன், உடனே, அவற்றைத் தொழிற்சாலைகளில் பெருவாரியாகப் பயன் படுத்த ஏற்பாடு செய்தது.

6. விஞ்ஞான ஆராய்ச்சி மட்டுமல்ல, திட்டம் வகுப்பதும், சர்க்கார் நிர்வாகமும், விஞ்ஞான நிபுணர்களின் பொறுப்பு.

7. புதிய கருத்துக்கள், தொழிலாளர்களாலும் குடியானவர்களாலும், சோதிக்கப்பட்டு சாத்தியமற்றவை கைவிடப்பட்டன.

8. நமது பல்கலைக்கழக மாணவர்கள் தேர்ச்சி பெறும் கால அளவில், பத்தில் ஒருபங்கு காலத்தில் வாலிபர்களும் வயோதிகர்களும், போர் வீரர் போரிடுவதைப் போன்று, முழுமனதுடன் விஞ்ஞானத்தைக் கற்றுவந்தனர்.

இன்று நம் நாடுகளில், நிபுணர்கள், விஞ்ஞானத்தைப் போருக்காகப் பயன்படுத்தும் பணியில் மூழ்கி

நிற்கிறார்கள். துன்பம், கடும் உழைப்பு இவற்றை ஒழிக்க விஞ்ஞானம் சோவியத் யூனியனில் எப்பொழுதும் போர்க் கோலம்பூண்டு நிற்கிறது. அந்த நிரந்தரமான விஞ் ஞானப் போர். ஆண் பெண் குழந்தை அனைவரின் இன்ப வாழ்வுக்காக நடைபெறுகிறது.

இது மிகைபடக் கூறல் என்று நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களா? கடந்த ஆண்டில் சோவியத் விஞ்ஞானி களுக்கு ஸ்டாலின் பரிசு வழங்கப்பட்டது. அப்பொழுது டாக்டர் கெல்லர் சோவியத் மக்களுக்குச்செய்த பிரசங் கத்தைக் கவனியுங்கள்:

"இப்பரிசுகள் நம் நாட்டில் முன்னேறுகின்ற புதிய விஞ்ஞானத்தின் அளவு கோல். நமது சமூகத்தில் ஒரு பெரிய புதுமை நேரிட்டது. ஆண் பெண் இருபாலோரி லும் விஞ்ஞானிகள் தோன்றினர். இவர்கள் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள். மக்களின் அன்பைப் பெற் றவர்கள். பொதுவாக சோவியத் யூனியனில், விஞ்ஞானி யின் நிலைமையே மாறிவிட்டது. ஜார் ரஷ்யாவிலிருந்த அறிவாளிகள் வெறும் தத்துவ ஞானிகளே. அவர்கள் உலகையும் உலகிலுள்ள துன்பங்களையும் விளக்கிச் சொல்லுவதோடு நின்றுவிட்டார்கள். ஆனால் சோவியத் விஞ்ஞானிகள் உலகையே மாற்றி அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்!"

போர்க்களத்திற்குப் பின்னல் நடைபெறுகின்ற வாழ்க்கையைக் கவனிப்போம்.

7. விஞ்ஞானம் தோற்றுவித்த ஆஸ்பத்திரி.

பல வருஷங்களுக்கு முன், ஆங்கில டாக்டர்கள், மாஸ்கோவிலுள்ள அவசர சிகிச்சை ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டார்கள். அவர்கள் லண்டன் திரும்பியதும், மாஸ்கோவில் கண்ட காட்சியை மகிழ்வுடன் வெளியிட்டனர். அவர்களுடைய அறிக்கையை எவரும் பெரிதாகக் கருதவில்லை. சில வருஷங்களுக்கு பின்பு, உண்மை வெளியாயிற்று. பிரிட்டிஷ்–அமெரிக்க இராணுவ டாக்டர்கள் அந்த ஆஸ்பத்திரியைப் பார்க்க நேரிட்டது. இவர்கள் வெளியிட்ட அறிக்கை ஆர்வத்துடன் படிக்கப்பட்டது. விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாகிய வைத்தியம், சோவியத் யூனியனில் மகத்தான முன்னேற்றம் அடைந்திருக்கிறது, என்ற உண்மையை டாக்டர்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.

இவ்வுண்மையை டாக்டர்கள்தான் அறிய முடியும் என்பதில்லை. அதே ஆஸ்பத்திரியைப் பார்க்க வாய்ப்புக் கிடைக்கிற எந்த மனிதனும், ரஷ்யாவில் வைத்தியம் எத்தகைய முன்னேற்றம் அடைந்திருக்கிறதென்பதை அறிந்து கொள்வான். ஆனால், எல்லோரும் மாஸ்கோவுக்குப்

போக இயலாது. எனவே, நாம் மாஸ்கோவுக்குப் போகிறதாகக் கற்பனை செய்து கொள்வோம்.

மாஸ்கோ மத்திய அவசர சிகிச்சை ஆஸ்பத்திரி அழகிய கட்டிடம் ஒன்றில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதை அழகான அரண்மனை என்று சொல்லலாம். அதைப் போன்ற ஆஸ்பத்திரி வேறெந்த நாட்டிலும் இல்லை. திடீரென்று காயமுற்றவர்கள் அல்லது நோய்வாய்ப் பட்டவர்களின் சிகிச்சைக்கான ஆஸ்பத்திரி அது.

இதற்கென தனி ஆஸ்பத்திரி எதற்காக என்ற கேள்விக்கு ரஷ்ய டாக்டர்கள் கூறுகின்ற பதிலைக் கவனிப்போம். "அவசரக் கேசில் மனிதன் பிழைப்பது சில நிமிடங்களில் செய்யப்படுகின்ற சிகிச்சையைப் பொறுத்திருக்கிறது. ஓர் உயிரைக் காப்பாற்றுவதென்றால், அதை எப்படிக் காப்பாற்றுவதென்பதை டாக்டர்கள் தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும். சிறிதும் தாமதமின்றிச் சிகிச்சை செய்யத் திறமை வேண்டும் பொது ஆஸ்பத்திரியில் அவசர வார்டு மட்டும் இருந்தால் போதாது. விபத்து ஏற்பட்டதிலிருந்து தொடர்ந்து வேலை செய்ய, ஒரு நூதன வைத்திய ஸ்தாபனம் அவசியம், என்பதை அறிந்தே அதைக் கட்டத் தீர்மானித்தோம்."

கோர விபத்தை நீங்கள் மாஸ்கோவில் பார்க்கிறதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். வீதியில் ஓடுகிற ஒரு காரில் ஒரு கிழவி மோதி விபத்துக்குள்ளாகிறாள். மாஸ்கோவிலுள்ள அவசர சிகிச்சை ஆஸ்பத்திரிக்கு நீங்கள் டெலிபோன் செய்தி சொல்லுகிறீர்கள். தேர்ச்சி பெற்ற பெண் ஒருத்தி உங்கள் பேச்சைக் கவனமாய்க் கேட்கிறாள். எத்தகைய விபத்து என்பதை அவள் அறிந்து கொள்ளுகிறாள். உங்கள் பேச்சைக் கேட்டுக்

கொண்டே அவள் ஒரு விசையை அமுக்குகிறாள். இரண்டு மாடிகளுக்குக் கீழே, ஆஸ்பத்திரிக்குப் பின்புற முள்ள மோட்டார் ஷெட்டில் சிவப்பு ஒளி வீசுகிறது. வேகமாய்ச் செல்லக்கூடிய ஓர் அம்புலன்ஸ் காரை டிரைவர் ஓட்டுகிறார். இரண்டு டாக்டர்கள் மோட்டாரில் ஏறுகிறார்கள். பத்து வினாடிகளுக்குள் விபத்து நேர்ந்த இடத்தை, வாஞ்ஞெலியின் மூலம் டெலிபோன் பெண் அறிவிக்கிறாள். கார் காற்றாய்ப் பறக்கிறது.

மின்சார கெடியாரத்தின் கால அட்டவணைப்படி ஒவ்வொரு செயலும் நடைபெறுகிறது. டெலிபோன் ஒலித்த இரண்டு நிமிடங்களுக்குள், கார் புறப்பட்டுவிட வேண்டும். இது ஆஸ்பத்திரியின் நியதி. சிறிது தாமதம் ஏற்படினும் விசாரணை நடக்கும். ஒரு கார் வெளியே றியதும் மற்றொன்று தயாராக நிற்கும். அடுத்து வரும் டெலிபோன் செய்தியை மற்றும் இரு டாக்டர்கள் எதிர்நோக்கி இருப்பர்.

மாஸ்கோ அவசர சிகிச்சை ஆஸ்பத்திரி ஒப்பற்றது. உயிர்களைக் காப்பாற்றுவதும், வேதனையைக் குறைப்பதும் அதன் நோக்கம். ஒரே காலத்தில் எழுநூறு நோயாளிகள் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. நூறு டாக்டர்கள் வேலை செய்கிறார்கள். இன்னும் நூறுபேர்கள் தயாராயிருக்கிறார்கள். சமாதான காலத்தில் இன்னும் வருஷம் ஒன்றுக்கு அறுபதினாயிரம் நோயாளிகள், அங்கே வைத்திய உதவி பெறுகிறார்கள். விபத்தில் சிக்கியவர்களுக்கு, தீயணைக்கும் இலாகா வேலை செய்வதைக் காட்டிலும் துரிதமாக உதவி செய்ய, இந்த ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டிருக்கிறது.

டெலிபோன் பெண்களும் அம்புலன்ஸ் கார் டிரைவர்களும் இந்த ஸ்தாபனத்தின் முன்னோடிகள். மாஸ்கோ

வின் ஒவ்வொரு தெருவும் ஜில்லாவும் அவர்களுக்குத் தெரியும். வெகு விரைவில் செயலாற்ற நகரின் ஐந்து பகுதிகளில், கார் ஷெட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. டெலிபோன் பெண் விசையை அமுக்கியதும், விபத்து நடந்த இடத்திற்கு அருகிலுள்ள ஷெட்டிலிருந்து கார் கிளம்பி விடும்.

கார் புறப்பட்டதும், டெலிபோன் பெண் விபத்தைப்பற்றி மேலும் விபரம் சேகரிக்கிறாள். கிடைத்த தகவல்களைக் காரில் போய்க்கொண்டிருக்கிற டாக்டர்களுக்கு வானொலி மூலம் தெரிவிக்கிறாள். பிறகு ரண சிகிச்சை செய்கிறவர்களுக்கும் செய்தி அனுப்புகிறாள். மருந்துகளையும் கருவிகளையும் டாக்டர்கள் தயாராக வைத்திருக்கிறார்கள்.

வெகு நாட்கள் தங்கி சிகிச்சை பெறுகிறவர்கள் மாஸ்கோ ஆஸ்பத்திரியில் இல்லை. அதில் வேலை பார்க்க விரும்புகிற டாக்டர்கள், ஒரு குறித்த துறையில், பத்தாண்டுகள் தேர்ச்சி பெற வேண்டும். அவசர கேஸ்களைக் கவனிக்க மிகத் தேர்ச்சி பெற வேண்டிய அவசியத்தை முன்னிட்டே, இவ்விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்குள்ள டாக்டர்கள். உயிரைக் காப்பாற்றும் பணியில், இருபத்தினான்கு மணி நேரமும் ஈடுபட்டிருக்கிறார்கள். சாதனங்கள் முதல் தரமானவை—ஒப்பற்றவை என்று பிரட்டிஷ் இராணுவ டாக்டர்கள் கூறுகிறார்கள். அவசர சிகிச்சை மட்டுமல்ல, வேறு எத்தகைய ரண சிகிச்சைகளுக்கும் அவசியமான எல்லா வசதிகளும் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறந்த வைத்திய முறைகளும் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இரத்தத்தை உடலில் பாய்ச்சும் முறையை எடுத்துக் கொள்ளுங்கள். ஆஸ்பத்திரிகளிலும் போர்க்களங்களிலும் எளிதில் உபயோகப்படுத்துவதற்காக இரத்தம் உலர்த்தப்படுகிறது. இம்முறை நம் நாடுகளில் சமீப காலத்தில்தான் வளர்ச்சியுற்றிருக்கிறது. ரஷ்யாவில் அது முன்னமேயே கையாளப்பட்டு வருகிறது. இரத்தப் பரிசோதனையின் கேந்திர ஸ்தானம் மாஸ்கோதான். இத்துறையில், பிற நாடுகளைவிட மாஸ்கோ முன்னேறியிருக்கிறது. உதாரணமாக, விபத்துக்குள்ளான ஒரு மனிதன், மிகுதியான இரத்தத்தை இழந்துவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவன் அவசர சிகிச்சை ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறான். அவன் உடலில் இரத்தம் பாய்ச்சப்படுகிறது. அது உயிருள்ள மனிதனின் இரத்தமல்ல. இறந்தவன் இரத்தம்! விபத்தில் இறந்த ஒருவனின் இரத்தம்!

இப்புதிய முறையினால் எண்ணற்ற ரஷ்யர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். எவ்வித நோயுமின்றி, திடீரென்று மரணமடைந்தவர்களின் உடல்களிலிருந்து எடுக்கப்படுகின்ற இரத்தம் சிகிச்சையை எளிதாக்குகிறது. மனிதன் இறந்ததும் இரத்தம் உறைந்துவிடுகிறது. சிறிது நேரத்தில் அது திரவமாகிறது. அதை உடனே எடுத்தால், எவ்வித ரசாயனப் பொருள்களின் கலப்புமின்றித் திரவமாகவே நிற்கிறது. இக்காரணத்தால், இறந்தவர்களின் உடல்களிலிருந்து எடுக்கப்படுகின்ற இரத்தம் மிகச் சிறந்தது.

இம்முறையை ரஷ்ய டாக்டர்கள் போர்க்களத்தில் உபயோகிக்கிறார்கள். இது இராணுவ ரகசியம். எனினும், அது பிரிட்டிஷ் அமெரிக்க டாக்டர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர்கள் மட்டில்லா மகிழ்ச்சியுற்றனர்.

இறந்தவர்கள் இறந்துகொண்டிருந்தவர்களுக்கு உயிரளித்தனர். சுதந்திரத்திற்காக உயிர்நீத்த வீரர்கள், சிகிச்சையால் பிழைத்தவர்களின் உடல்களில் மீண்டும் உயிர்பெற்றெழுந்தனர்! இதைக் காட்டிலும் அழிவற்ற வீரத்தை மனிதன் ஒருபோதும் கற்பனைகூடச் செய்யமுடியாது!

மத்திய அவசர சிகிச்சை ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்கள், போர்க்களத்திற்கு அவசியமான பல வைத்திய முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

போர்க்களத்தில் காயமுற்றவர்களுக்கு முதல் உதவி, புதிய முறைகளில் செய்யப்பட்டன. அவை மத்திய அவசர சிகிச்சை ஆஸ்பத்திரியில்தான் முதன் முதலாகக் கையாளப்பட்டன. மின்சார அதிர்ச்சியால் தாக்கப்பட்டவர்களை அதிகமாக நகர்த்திக்கொண்டு போகக் கூடாது. எனவே, ஆஸ்பத்திரியின் இயந்திர நிபுணர்கள் ஒரு புதிய *ஸ்டிரெச்சரைத் தயாரித்தார்கள். அது நோயாளியை ஆடாமல் அசையாமல் தூக்கி அம்புலன்ஸ் காரில் கிடத்திவிடும்.

அதைப் பார்த்த இராணுவ டாக்டர்கள் ஒரு அம்புலன்ஸ் டாங்கியை நிருமாணித்தார்கள், போர்க்களத்தில் அடிபட்டுக்கிடப்பவன் மீது அது ஊர்ந்து சென்று, அவனைத் தூக்கி எடுத்து, உள்ளே வைத்துக்கொள்ளும். அதனுள் டாக்டர்கள், தாதிகள், முதலியோர் வேலை செய்கிறார்கள். எதிரியின் குண்டுகளின் தாக்குதலிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அதைச் சுற்றிலும் கவசமிடப்பட்டிருக்கிறது.

---

*"ஸ்டிரெச்சர்" மனிதனைத் தூக்கிச்செல்லும் கருவி.

அந்த நூதன "ஸ்டிரெச்சர்" நமக்குத் தேவையில்லாதிருக்கலாம். ஆனால், எல்லோருக்கும் சம்பந்தப்பட்ட சாதாரண சிகிச்சை முறையை, இங்கே வேலைசெய்யும் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ரண சிகிச்சையில் வலி தெரியாமலிருக்க குளோரோபாம் என்ற மயக்க மருந்தை உபயோகிக்கிறார்களல்லவா? அதே போன்று வலி தெரியாமலிருக்க, புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள், அதை ரண சிகிச்சைக் கலையில் மிகப் பெரிய முன்னேற்றம் என்று பிரிட்டிஷ் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சொத்தைப் பல்லைப் பிடுங்குவதற்கு, பல் டாக்டர், அந்தப் பல்லைச் சுற்றி மருந்தைத் தடவுகிறார். பிறகு பல்லைப் பிடுங்குகிறார். வலி தெரிவதில்லை. அறிவை மயக்காமல் பல்லைச் சுற்றி உணர்ச்சியற்றுப் போகும்படி அம் மருந்து செய்கிறது.

ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளுக்குக்கூட, இத்தகைய மருந்தை ஊசியால் செலுத்தி, ரண சிகிச்சை செய்யும் முறையை, 1940-ல், விஷ்னெவ்ஸ்கி என்ற டாக்டர் கண்டுபிடித்தார். 'நோவோகேன்' பெர்க்கேன் என்ற மருந்துகளைச் சுத்த நீரில் கரைத்து, தோலுக்குள் செலுத்தினர். உடலின் அப்பகுதி மரத்துப் போயிற்று. வலி தோன்றுத இடத்தில், மேலும் ஊசியை ஆழமாகச் செலுத்துவதன் மூலம், உடலின் பெரும்பகுதியை உணர்வற்றதாகச் செய்யலாம் என்று அவர் கண்டார்.

விஷ்னெவ்ஸ்கியின் முறையால் சிறிதும் வலி தோன்றாது. விபத்தில் சிக்கியவருக்கு வலியே இல்லாதபடி இரண்டு நிமிடங்களில் செய்துவிடலாம். நோயாளி சுய

உணர்வோடு இருப்பார் குளோரோபாரத்தைப் போல இம்முறை இதயத்துடிப்பைப் பாதிக்காது.

சென்ற 1942-ம் வருஷத்தில் சோவியத் ரசாயன நிபுணர்கள், புதியதொரு மயக்க மருந்தை விஷ்னெவ்ஸ்கியின் சோதனைக்குக் கொடுத்தார்கள். அதன் பெயர் 'சோவ்கெயின்' இம்மருந்தில் ஒரு சொட்டை பத்தாயிரம் சொட்டுத் தண்ணீரில் கலந்து உபயோகிக்கலாம். அப்படியிருந்தும் அது உடலை மரத்துப் போகச்செய்கிறது. இதனால் கேடில்லை. ஆறு மணி நேரம் இதன் மூலம் வலி தோன்றுதிருக்கச் செய்யலாம்.

விஷ்னெவ்ஸ்கி முறை வெற்றிபெற்று விட்டது. இப்பொழுது எலும்பு முறிவு கை கால் துண்டித்தல், குடல் ரண சிகிச்சை, புற்று நோய், இவற்றின் சிகிச்சைக்கு, இம்முறையைப் பயன்படுத்துகிறார்கள். காலைத் துண்டிக்க சோவ்கெயினை ஊசி மூலம் பாய்ச்சி, அப்புறம் ஆப்பரேசன் செய்கிறார்கள். இதனால் சில நாட்களுக்கு, வலியே தெரியாமல் இருக்கிறது. இதன் மத்தியில் புண் ஆறிவிடும்.

போர்க்களத்தில் காயமுற்றவர்களுக்கு விஷ்னெவ்ஸ்கி முறை பெரிதும் பயன்பட்டது. மிகத்தவருகப் பறைசாற்றப்பட்ட பின்லந்து போரில், காயமடைந்த போர் வீரர்களை வெகுவிரைவில் சோவ்கெயின் குணப்படுத்தியது. போர்க்களத்தில் இம்முறையைக் கையாண்டு பரீட்சித்துப் பார்த்ததில், காயத்தினால் மரணமடையும் போர் வீரரின் எண்ணிக்கையை நாற்பது சதவிகிதம் குறைத்திருக்கிறது!

"பிரிட்டிஷ் மக்களிடமிருந்து, சோவியத் மக்களை மறைத்து வைத்திருந்த நம்பிக்கையின்மை என்னும் திரை

பைச் சரித்திரப் போக்கு கிழித்தெறிந்து விட்டது. சோவியத் மக்கள் எதனைப் பாதுகாக்கப் போராடுகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளவும், வரலாறு வாய்ப்பு அளித்துவிட்டது;" என்று பிரிட்டிஷ் ராணுவத்திய நிபுணர் 'ராஸ்கோ கிளார்க்' சொல்லுகிறார்.

மத்திய அவசர சிகிச்சை ஆஸ்பத்திரியில் நடைபெற்ற எல்லா அபிவிருத்திகளையும் இந்நூலில் விளக்க இயலாது. ஒன்றிரண்டு மட்டுந்தான் உதாணமாகக் காட்டலாம். இங்கே அவசர பிரசவப் பகுதி ஒன்று உண்டு. கஷ்டமான பிரசவங்களுக்கு உதவி அளிக்கப் படுகிறது. குழந்தை கருப்பையில் இருக்கும் பொழுது, அதற்கு இரத்தம் சேகரித்துக் கொடுக்கும் பை ஒன்றிருக்கிறது. அது குழந்தை பிறந்ததும் வெளியே வந்து விடுகிறது. அதில் சுத்தமான இரத்தம் இருக்கிறது. சாதாரணமாக இப்பையைத் தொப்புள் கொடியுடன் நறுக்கி எறிந்து விடுகிறார்கள். மாஸ்கோ ஆஸ்பத்திரி இந்த இரத்தத்தைச் சேகரித்து, வேறு இளம் உயிர்களைக் காப்பாற்றப் பயன் படுத்துகிறது. தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை ஒவ்வொரு படியிலும் உயிரைப் பாதுகாக்க, சோவியத் விஞ்ஞானிகள் இடையறாது முயற்சிக்கிறார்கள்.

டாக்டர் பாக்டஸராவ் குடல் புண்ணுக்கு ஆட்டு இரத்தத்தைப் பாய்ச்சி, ஆராய்ச்சி செய்தார். இதனால் முந்நூறு நோயாளிகளுக்குக் குணம் ஏற்பட்டது. வலி இரத்தப் போக்கு முதலிய அறிகுறிகள் அடியோடு மறைந்தன. இதே முறையை உடல் புண்ணுக்கும் பரீட்சை செய்து பார்க்கிறார்கள்.

ஆப்ரேஷன் செய்யத் தொடங்கு முன், டாக்டர் தனது கைகளை நன்றாய்ச் சுத்தம் செய்வதைப் பார்த்திருப்

பீர்கள். கையிலுள்ள கிருமிகளைப் போக்குவதற்காக அவர் அவ்வாறு சுத்தம் செய்கிறார். அதுபோலவே நோயாளிக்காக உபயோகிக்கிற உடைகளையும் பல மணி நேரம் கொதிக்க வைத்து பிறகு உலர்த்த வேண்டும். கருவிகளையும் அப்படியே செய்ய வேண்டும். பெரிய ஆஸ்பத்திரியில் இவற்றைச் செய்ய வசதி இருக்கும் போர்க்களத்திலோ விபத்துக்குள்ளான நோயாளியின் விஷயத்திலோ இவை சாத்தியமில்லை. கிருமிகளை நீக்காமல் ஆப்ரேஷன் செய்வதால், வியாதிக் கிருமிகள் உட்புகுந்து விடலாம். பல மணி நேரம் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தால் நோயாளியின் உயிர் போய்விடும்.

இதற்காக டாக்டர் டாவட்லாவ், கிருமிகளைச் சீக்கிரம் கொல்ல ஒரு வழி கண்டு பிடித்தார். கிருமிகள் அடங்கிய தண்ணீரில் கையை நனைத்து பிறகு மூன்று நிமிடங்கள், நீர் சேர்ந்த ஹைடரோகுளோரிக் அமிலத்தில், கையை நனைத்தார். பின்பு மைக்ராஸ்கோப் கண்ணாடியால் பார்த்தார். கைகளில் கிருமிகளே காணப்படவில்லை கருவிகளில் உள்ள கிருமிகள் அனைத்தையும் போக்க இருபது நிமிடங்கள் ஆயின. இதைப் பன்முறை சோதித்துப் பார்த்து, தற்போது இம்முறை எல்லா ஆஸ்பத்திரிகளிலும் கையாளப் படுகிறது.

இரு காரணங்களுக்காக நான் டாவட்லாவ் முறையைக் குறிப்பிட்டேன். ஒன்று நமது போர் வீரர்களின் உயிரைக் காப்பாற்ற; அதனைப் பயன் படுத்தலாம். இரண்டு; சோவியத் ஆராய்ச்சியாளர், செலவில்லாத சுலபமான முறைகளுக்குக் கொடுக்கும் மதிப்புக்கு இது ஓர் உதாரணம். சிக்கலானதும், அதிக பணச் செலவுள்ளதுமான முறைகளை விடுத்து, சுலபமான மலிவான முறை

களையே அவர்கள் கண்டு பிடிக்கிறார்கள். ஏன்? ரஷ்யாவில் பணத்தைச் சேமித்து வைக்க விரும்புகிறார்களா?

டாவட்லாவ் முறையை மறுபடியும் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அதற்குக் கருவிகள் எதுவும் தேவையில்லை. கிருமிகளை நாசம் செய்ய, பெரிய ஆஸ்பத்திரிகளில் பயன் படுத்துகின்ற கருவிகளின் விலை ஆயிரம் டாலர்களுக்கும் கூடுதலாக இருக்கும். விலையுயர்ந்த கருவிகளைச் செய்வதிலேயே அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள். கருவிகளின் விலை கூடினால்தான் ஆராய்ச்சிக்குப் பணம் கொடுக்கின்ற முதலாளிகளின் லாபமும் கூடும். இதனால்தான், அமெரிக்க ஆஸ்பத்திரிகள், காரியாலயங்கள், தொழிற்சாலைகள் ஆகிய அனைத்திலும், விலை உயர்ந்த கருவிகள் இடம் பெறுகின்றன. இவை விஞ்ஞான வளர்ச்சியின் சின்னங்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது முழுதும் உண்மையல்ல. வாழ்க்கையை எளிதாக்குவதுதான், விஞ்ஞான ஆராய்ச்சியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று. சோவியத் விஞ்ஞானிகள் இந்நோக்கத்தை உண்மையாகக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

இலாபத்திற்காக ஆசைப்படுகின்ற முதலாளிகளுக்காகவோ, முதலாளிகளின் கம்பெனிகளுக்காகவோ, சோவியத் விஞ்ஞானிகள் வேலை செய்யவில்லை. மக்களின் நலனுக்காகவே உழைக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி, ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும் பலனளிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். எனவே, சுலபமான முறைகளையும் அதிக செலவில்லாத முறைகளையும், அவர்கள் தேடிக் கண்டு பிடிக்கிறார்கள்.

டாக்டர் டாவட்லாவ், தனது புதிய முறையால், போர்க்களத்தில் காயமுற்ற வீரர்களின் உயிரைக் காப்

பாற்ற விரும்பினர். ஒரு சிக்கலான இயந்திரத்தைச் செய்து, ஒரு பணக்காரனுக்கு விற்று, பணம் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் அவருக்குக் கனவிலும் இல்லை. வைத்தியப் பயிற்சி இல்லாத சாதாரண மக்கள்கூட, போர்க்களத்திலும் விவசாயப் பண்ணைகளிலும் தொழிற் சாலைகளிலும் காயமுற்றவர்களுக்கு முதல் உதவி செய்ய இச்சுலபமான முறையைக் கண்டு பிடித்தார்.

இதுபோன்ற புதிய முறைகளால் போர்க் களத்தில் அடிபட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை, செஞ்சேனை சம்பந்தப்பட்ட வரை மிகக் குறைந்திருக்கிறது. முதலாவது உலகப் போரில், காயங்களால் இறந்தவர்களின் எண்ணிக்கையைவிட, இரண்டாவது உலகப்போரில் காயமுற்று இறந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு எண்பது குறைந்திருக்கிறது. ஐரோப்பாவில் பயங்கரக் கொள்ளை நோயாகக் கருதப்படுகின்ற 'டைபஸ்' என்னும் நோய் பாதிக்காதிருக்கும் பொருட்டு சோவியத் விஞ்ஞானிகள் புதிய ஊசி மருந்துகள் தயாரித்திருக்கிறார்கள்.

மாஸ்கோ அவசர சிகிச்சை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறுவதற்கு முன், மற்றொரு பிரபல நிபுணரைச் சந்திக்க வேண்டும். அவர் பெயர் பைலடாவ். அவருடைய உருவப் படத்தை நீங்கள் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். ரஷ்யா போரில் இறங்கியதும், அவர் புகழ் உலகெங்கும் பரவியது. அவர் ஒரு மாய மனிதன். நடக்கக் கூடியதென்று எவ்வும் கனவிலும் எண்ணுத காரியங்களை அவர் சாதித்திருக்கிறார். உதாரணமாக, அவர் குருடருக்குப் பார்வையளித்து விட்டார்!

இறந்தவர்களின் இரத்தத்தால் சாகக்கிடந்தவர்கள் பிழைத்தெழும் புதுமையை நாம் ரஷ்யாவில் அறிந்து

கொண்டதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இதோ மற்றொரு புதுமை! **செத்தவன் கண்ணைக் குருடன் கண்ணில் பதித்துப் பார்வை கொடுக்கிறார்,** டாக்டர் பைலடாவ்!

(இந்த ஆப்ரேஷன் முறை இதுவரை சில குருடுகளுக்கு மட்டும் பிரயோகிக்கப் படுகிறது. இதைப்பற்றி உங்களுக்கு மேலும் விவரம் தெரிய வேண்டுமானால், பைலடாவ் ஆப்ரேஷன் முறையை நடைமுறையில் கையாண்டு வருகிற லான் பிரான்சிஸ்கோ டான் சொஸைட்டி டாக்டர்களுக்கு எழுதுங்கள்.)

டாக்டர் பைலடாவ் கரு வளர்ச்சி ஆராய்ச்சியில் தலைசிறந்த நிபுணர். உலகிலுள்ள வைத்திய ஆராய்ச்சியாளர் அனைவரும், அவருடைய சாதனைகளுக்காக அவரை மதிக்கிறார்கள். மாஞ்செடிகளை ஒன்றோடொன்று சேர்த்து ஒட்ட வைப்பது போல, மனித உடலிலும், ஒரு பகுதியைத் துண்டித்து, மற்றொரு உடலில் அதே பகுதியில் ஒட்ட வைக்கலாம் என்று அவர் நம்புகிறார். அவருடைய மாணவரான டாக்டர் ஒகுநெவ், ஒருவர் பல்லை மற்றொருவருக்குப் பதிக்கும் முறையைக் கண்டு பிடித்திருக்கிறார். ஏழு வயதிற்கு முன்பு குழந்தைகளின் பற்கள் விழுகின்றன அல்லவா? அவற்றைச் சேகரித்துப் பெரியவர்களுக்குப் பதிக்கிறார். அவை வளருகின்றன. பொய்ப் பல்லுக்குப் பதில் எதார்த்தமான பல், பொக்கை வாய் கிழவர்களை அலங்கரிக்கின்ற விந்தையைச் சிந்தித்துப் பாருங்கள்! குழந்தைகளைப் போல் கிழவர்களுக்கும் பல் முளைக்கச் செய்கிறார் டாக்டர் ஒகுநெவ்!

இறந்தவர்களது நரம்புகளைக் காயமுற்றவர்களுக்கு ஒட்ட வைக்கின்ற புதிய முறை, டாக்டர் பைலடாவால் சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. பைலடா

வின் சுலபமான முறைகளை நேரில் கண்ட, பிரிட்டிஷ் அமெரிக்க இராணுவ டாக்டர்கள் பிரமித்துப் போயினர். உலகில் நரம்புவியாதிகளாலும், தளர்ச்சியாலும், அவதியுறுகின்ற லட்சக்கணக்கான நோயாளிகளுக்கு, பைலடாவ் புதிய ஆரோக்கிய வாழ்வளிக்கும் பணியில் முனைந்திருக்கிறார்.

மாஸ்கோ அவசர சிகிச்சை ஆஸ்பத்திரியிலிருந்து இனி வெளியேறுவோம். இதைப் படிக்கிற பொழுது நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். "ஆபத்தில் சிக்கி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படுகிற நோயாளியின் சிகிச்சைக்குச் செலவாகிற பணத்தைக் கொடுப்பவர்கள் யாவர்?"

நோயாளி கொடுக்கவில்லை. சமுதாயம் கொடுக்கிறது. வைத்தியம் மக்களுக்குப் பொது. நோயாளிக்கு வைத்தியம் செய்வது அரசாங்கப் பொறுப்பு. ரஷ்யாவுக்கு வெளியிலுள்ள பல டாக்டர்கள் இம்முறையை எதிர்க்கிறார்கள்.

மாஸ்கோ மத்திய ஆஸ்பத்திரியைப் பார்வையிடச் சென்ற, ஓர் ஆங்கில டாக்டர் தனது கருத்தை வெளியிட்டார். அவர் சொன்னது ரஷ்ய டாக்டர்களுக்குப் புரியவில்லை. அவர்களில் ஒருவர் சொன்னார்: "டாக்டர்! அந்தப் பிரச்னை முதலாளித்துவமா? அல்லது சோஷலிஸமா? என்பதல்ல! லண்டன் பட்டணத்தில் தீப்பற்றி எரியும் பொழுது தீயணைக்கும் இலாகா உதவி செய்கிறது. தீப்பற்றி எரிந்த வீட்டின் சொந்தக்காரனுக்கு அந்த இலாகா பில் அனுப்புகிறதா? சொல்லுங்கள் டாக்டர்!"

"நிச்சயமாக அனுப்புகிறதில்லை"

"அப்படியானால் ஒருவனுக்கு வியாதி ஏற்பட்டாலோ, அல்லது விபத்து நேர்ந்தாலோ, ஏன் சிகிச்சை செய்துகொள்ளப் பணம் கொடுக்கவேண்டும்? தீயணைப்பது எல்லோருடைய நன்மைக்காக என்றால், வியாதி பரவாதிருக்க நோயாளியைக் குணப்படுத்துவதும் அப்படித்தானே. அது மட்டுமல்ல; வீடு எரிந்துபோனால் புது வீடு கட்டலாம். மனிதன் செத்துப் போனால் பிழைக்க வைக்க முடியாது. தீயை அணைப்பது எப்படி அரசாங்கப் பொறுப்போ அதே போன்றதுதான் நோயாளிக்குச் சிகிச்சை செய்வதும். இதில் அரசியல் ஒன்றுமில்லை. இது பகுத்தறிவு. நோயாளிக்கு சிகிச்சைச் செலவு கிடையாது. நோயாளி பணம் கொடுக்க விரும்பினாலும் வாங்குவார் இல்லை!"

இது முக்கியமான விஷயம். ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் சிறந்த வைத்திய உதவி பெறுகிறார்கள். நோயாளிக்குப் பணம் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி அக்கறை இல்லை. நோயாளியின் தேவைக்குத் தகுந்தபடி, மருந்துகள், ஊசிகள், இரண சிகிச்சை, நிபுணர்களின் உதவி, உணவு, அனைத்தும் சர்க்கார் செலவில் கிடைக்கும். இவ்வசதிகள் சோவியத் ரஷ்யாவில் விலைக்குக் கிடைக்க மாட்டா. இவற்றை விலைக்குப் பெற முயற்சிப்பவர்களை ரஷ்ய மக்கள் பைத்தியக்காரர் எனக் கருதுவர். மனித வாழ்வுக்கு விலைமதிப்பு உண்டா? உயிரை விலைக்கு வாங்க எவரால் முடியும்? ரஷ்யாவில் உயிருக்குள்ள மதிப்பு இத்தகையது!

8. அறியாமையிலிருந்து அறிவியலுக்கு.

ஜார் காலத்தில், மக்கள் ரஷ்ய இராணுவத்தை வெறுத்தார்கள். கட்டாய இராணுவ சேவை, சிறந்த இளைஞர்களைப் பல வருஷங்கள் வீட்டை மறந்து, வெளியே இருக்கச் செய்தது. போர் வீரரும், அவர்கள் குடும்பத்தாரும் இராணுவ சேவையைக் கொடிய அஞ்ஞாத வாசமாகக் கருதினர். எனவே, போர் வீரர் சிந்திய கண்ணீருடன்தான் இராணுவ சேவைக்குச் சென்றனர்.

பழைய ரஷ்யாவில் ஒரு போர் வீரனின் நிலைமை இதுதான்: அவனுக்கு ஓட் உரிமை இல்லை. பல வருஷங்கள் அவன் தன் குடும்பத்தைப் பார்க்க இயலாது அவனுடைய கடிதங்கள் சோதனைக்குள்ளாகும். அவன் பத்திரிகை படிக்க முடியாது. அவன் மக்களுடன் பழகக் கூடாது. சவுக்கடி போன்ற கடுமையான தண்டனைக்கு அவன் உள்ளாகவேண்டும். இக்கொடுமைகளை எதிர்க்க அவனுக்கு வழி இல்லை. மேல் அதிகாரிகள் பிற்போக்கான பிரபுத்துவ வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் போர் வீரரை ஆடுமாடுகளிலும் இழிவாகக் கருதினர்.

முதன் முதல் போர்வீரர்தான் ஜார் அமைப்பை எதிர்த்தார்கள் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை

புரட்சிக் காலத்தில் இராணுவத்தில் வேகமாக மாறுதல்கள் நிகழ்ந்தன. முதலாவது உலகப் போரில், நான்கு :வருஷங்கள் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான் போர் வீரர் புதிய இராணுவத்தில் அதாவது செஞ்சேனையில் தாமாகச் சேர்ந்தனர்.

இது ஒரு சரித்திர நூல் அல்ல. எனவே, கடந்த காலத்தை விட்டு சமீபகாலத்திற்கு வருவோம். சோவித் யூனியனை ஹிட்லர் தாக்குவதற்கு முன், ரஷ்யாவில் பெரிய சேனையும் கடற்படையும் இருந்தன. கட்டாய இராணுவ சேவைதான். ஆனால் எவ்வளவு வித்தியாசம்! புதிய இராணுவத்தில் சேர முன்வந்த வாலிபர்களை மக்கள் வாழ்த்தினர். வாலிபர் பெருமிதத்துடன் இராணுவத்தில் சேர்ந்தனர். கொண்டாட்டங்களில், போர்வீரருடன் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். ஜார் இராணுவத்தில் துயருற்றதை நினைவில் வைத்திருந்த விவசாயிகள், இராணுவ அதிகாரிகளுடன் சரிசமமாக உணவருந்தி, கைகுலுக்க பல மைல்கள் நடந்து சென்றார்கள்.

ஜார் இராணுவத்தின் அடிப்படை அறியாமை செஞ்சேனையின் அடிப்படை, விஞ்ஞானம். பயிற்சிபெற வேண்டியவன் எவன்? மனிதன். **எனவே, மனிதன் என்ற போர் வீரன் செஞ்சேனையின், ஆரம்பமும், முடிவும்.** செஞ்சேனை வீரர்களை உலகில் மிகச் சிறந்த போர் வீரராக மாற்றும் பிரச்னை, நீண்டகாலத்திற்கு முன்பே விஞ்ஞான அடிப்படையில் ஆராயப்பட்டது. இப்பிரச்னை இரு உபாயங்களால் தீர்க்கப்பட்டது.

முதலாவது, புதிய கட்டுப்பாடு. இராணுவ அதிகாரிகள் சாதாரண போர் வீரராக இருந்து பயிற்சி பெற

வேண்டும். பிறகுதான் அவர்கள் இராணுவக் கல்லூரிக்கு அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு இராணுவ அதிகாரியும் ஒரு காலத்தில் சாதாரண போர் வீரனாக இருந்தவர்தான். ஒவ்வொரு போர் வீரனும் இராணுவ அதிகாரி ஆகக் கூடும்.

செஞ்சேனையில் வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடே கிடையாது. ஒருவன் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன், பணக்காரன், படித்தவன் அல்லது அரசாங்கத்தில் செல்வாக்கு உள்ளவன் என்ற காரணத்தால், நேரடியாக இராணுவ அதிகாரி ஆக முடியாது. நிறத்தாலோ, ஜாதியாலோ, ஒரு போர் வீரன், இராணுவ அதிகாரி ஆவதைத் தடுக்க முடியாது. இராணுவக் கல்லூரியில் சேரவிரும்புகிறவன், போர் வீரனாகச் சேவை செய்திருக்க வேண்டும்; இராணுவத் திறமை பெற்றிருக்க வேண்டும்; தன் திறமையை நிரூபிக்க வேண்டும்; தன் தோழர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும்; பயிற்சியில் ஆர்வம் வேண்டும். விஞ்ஞான முறையில் பயிற்சி பெற்றவர்களே செஞ்சேனை உறுப்பினர்.

இராணுவ அதிகாரிகளைப் போல், போர் வீரரும் கட்டுப்பாடுள்ளவர்கள். மீறி நடக்கிறவர்களைக் கவனிக்க, தோழர்களின் கோர்ட்டு ஒன்றை, போர் வீரர் தேர்ந்தெடுக்கின்றனர். அக்கோர்ட்டுகளில் தீர்க்க முடியாத வழக்குகள் மட்டும், அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு போகப்படும். அதிகாரிகள் தங்களைப் போன்றவர்களே. திறமையாலும், அனுபவத்தாலும், நாட்டுப்பற்றாலும் அவர்கள் மேல் பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள், என்று போர் வீரர் நினைக்கின்றனர்.

இக்காரணங்களால், செஞ்சேனையில் புதிய கட்டுப்பாடு நிலவுகிறது. இதைக் கண்ட பிறநாட்டு இராணுவ அதிகாரிகள் ஆச்சரியம் அடைகிறார்கள். விஞ்ஞானம் என்னும் ஆயுதத்தைக் கையாளத் திறமையுள்ள போர் வீரனைத் தோற்றுவிக்க, இக்கட்டுப்பாடு முதற்படி.

இரண்டாவது, புதிய இராணுவ வாழ்க்கை. ஐந்து குறிக்கோளுடன் செஞ்சேனைக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது: அரசியல், ஒழுக்கம், பண்பாடு, உடல்வலிமை, இராணுவ தந்திரம் ஆகிய துறைகளில் முன்னேறுவது.

நமது நாடுகளில் இராணுவத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பே கிடையாது. போர்வீரரின் ஒழுக்கத்தைப் "பாதுகாப்பவர்கள்" மதக் குருக்கள். அவர்களின் முயற்சி தோல்வியடைகிறது என்பது நமக்குத் தெரியும். போர் வீரர் ஒழுக்கம் தவறி. சீர்குலைந்து நின்றால், இது "போர் வீரன் வாழ்க்கை" என்று சொல்லப்படுகிறது. நம் போர் வீரரின் கல்வி, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்காகச் செய்யப்படுகின்ற முயற்சி மிகக் குறைவு. உடற் பயிற்சியும், இராணுவப் பயிற்சியுந்தான் நல்ல முறையில் அளிக்கப்படுகிறது.

சோவியத் யூனியனில், போர்வீரர்களுக்கு அரசியல் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது செஞ்சேனையில் ஒழுக்கம் என்பது தீர்க்க முடியாத ஒரு பிரச்னையல்ல. ஏனென்றால், இராணுவ வாழ்க்கை குடும்ப வாழ்க்கையை ஒட்டியது. கலைத்துறையில் அவர்கள் செய்யும் வேலைகள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. சமாதான காலத்தில் செஞ்சேனைக்காக முப்பதினாயிரம் கலைக்கழகங்களும், மூவாயிரம் இளைப்களும் இருக்கின்றன. இராணுவ நூல் நிலையங்களிலுள்ள நூல்கள் இரண்டு கோடி ஐம்பது

லட்சம். நாள்தோறும் 1 725 000 செய்தித் தாள்களும், மாதந்தோறும் 500.000 சஞ்சிகைகளும் வழங்கப் படுகின்றன. போர்வீரர் கண்டுகளிக்க முதல் தரமான சினிமாக்கள், நாடகங்கள், சங்கீதம் போன்ற கலைகளுக்கு ஒவ்வொரு வருஷமும் கோடிக்கணக்கான டாலர்கள் செலவாகின்றன. ஒவ்வொரு இராணுவ முகாமையும், நடிகர், இசைவாணர், எழுத்தாளர், விஞ்ஞானிகள் போன்ற நிபுணர்கள் பார்வையிடுகிறார்கள். போர் வீரருடன் உறவாடுவதை அவர்கள் பெருமையாகக் கருதுகிறார்கள். கடந்த கால நிலைமையையும், நிகழ்கால நிலைமையையும், அவர்கள் சித்தரித்துக் காட்டி, அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறார்கள்.

மக்களுடன் கலந்து உறவாடுதல் செஞ்சேனையின் அடிப்படைக் கொள்கை. இக்கூட்டுக் கலப்பு இயற்கையாக உண்டாகிறது. அதிகாரிகள் போர் வீரராக இருந்தாலும், போர்வீரர் ஆலைகளிலும் பண்ணைகளிலும் வேலை பார்த்து வந்த உழைப்பாளிகளானதாலும், இராணுவமும் மக்களும் ஒன்றுபட்டவர்களே! இரண்டாவது உலகப் போரில் இந்த ஒற்றுமை தெளிவாகத் தெரிந்தது. அறுவடையில், விவசாயிகளுக்கு செஞ்சேனை உதவி செய்கிறது. போர் முனையில் உணவு நெருக்கடி ஏற்பட்டால், அறுவடையாகும் தானியம் அனைத்தையும், விவசாயிகள் போர் வீரருக்குக் கொடுக்கிறார்கள். நகரங்களிலும் பட்டணங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதிலும் நாஜிகளின் துப்பாக்கிகளுக்கும் குண்டுகளுக்கும் இலக்காகாத படி, தொழில் இயந்திரங்களை வெளியேற்றுவதிலும், மக்களும் இராணுவமும் ஒன்றுபட்டு உழைத்தார்கள்.

போர் மூண்டதும் சோவியத் யூனியனில் மட்டும் தான் "மக்கள் இராணுவம்" என்ற கூச்சல் கிளம்ப

வில்லை. செஞ்சேனை மக்களின் இராணுவம். அது மக்களிடையே எழுந்தது. அது மக்களுக்குச் சேவை செய்கிறது. மக்கள் அதை முழு மனதுடன் ஆதரிக்கிறார்கள். ஒவ்வொரு போர் வீரருக்கும் இவையனைத்தும் தெரியும்.

சோவியத் எழுத்தாளர் எரன்பர்க் கூறுவதைக் கவனிப்போம்: "எதற்காகப் போரிடுகிறார்கள் என்பது செஞ்சேனை வீரர்களுக்குத் தெரியும் இளம் நாட்டைப் பாதுகாக்கிறார்கள், என்பதையும் அவர்கள் நன்கறிவர். உழைப்பு, உற்பத்தி, ஒற்றுமை ஆகிய அடிப்படையில், உலகில் முதன் முதல் புதிய சமுதாயத்தை அமைத்தவர்கள் நாங்கள். எங்களுடைய நாட்டுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போர் புரிவதோடு, உலக சுதந்திரத்திற்காகவும், மனிதனின் பெருமைக்காகவும், எங்கள் வாலிபர்கள் போராடுகிறார்கள். பாரிஸ் நகரின் உரிமைகளுக்காகவும், பிரேக் நகரின் பல்கலைக் கழகத்திற்காகவும், பெருமை மிக்க நார்வேக்காகவும், செர்பியரின் குடிசைகளுக்காகவும் அவர்கள் போரிடுகிறார்கள்."

ரஷ்யாவில் புதிய இராணுவ அமைப்பு இம்முறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இது எப்படி வந்தது என்பது புதிரல்ல. பகுத்தறிவால் வளர்ந்தது. ஜார் அதிகாரிகளின் மடமை ஒழிந்தது. விஞ்ஞான அறிவு தோன்றியது. மக்கள் அனைவரும் புதிய ஆயுதத்தைக் கையாண்டனர்.

9. ரஷ்ய இராணுவத்தின் மூளை.

ஹிட்லர் சோவியத் யூனியனைத் தாக்கிய பொழுது, "செஞ்சேனை உலகைத் திடுக்கிடச் செய்து, ஆச்சரியத்தை விளைவிக்கும்" என்று ரஷ்யாவிலிருந்த மாஜி அமெரிக்கத் தூதுவர் ஜோசப் இ. டேவிஸ் சொன்னார். "செஞ்சேனை முதல்தரமான போர் வீரரும் அதிகாரிகளும் அடங்கிய சிறந்த ஸ்தாபனம் என்பதை நான் அறிந்திருந்ததால் போரில் அது திடுக்கிடும் செயலாற்றும் என்பதில் எனக்குச் சந்தேகம் இருந்ததில்லை. நான் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே அது பெரும் செயலாற்றியது. அதன் தலைவர்களின் மகத்தான செயல்கள் நண்பர்களுக்கும் ஆச்சரியம் விளைவித்தன. அது ஜெர்மானியர்களையும் திடுக்கிடச் செய்தது. ஜெர்மன் இராணுவத்தின் மின்னல் தாக்குதலை எதிர்ப்பதற்காகப் புதிய போர் முறைகளை செஞ்சேனை வகுத்ததானது, இராணுவக் கலையின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய உதவி" என்று அவர் பின்னும் கூறினார்.

செஞ்சேனை உலக மக்களைப் பன்முறை பிரமிக்கச் செய்தது. "செஞ்சேனை ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத பாமரக் கூட்டம்" என்ற பிறர்கூற்றை நாம் நம்பி இருந்தோம். இப்பாமரக் கூட்டம், சரித்திரத்திலேயே மிகப் பெரிய இராணுவமாகத் திகழ்கிறது. பயங்கரமான மின்

னல் தாக்குதலைத் தடுத்து நிறுத்திய ஒரே இராணுவம் செஞ்சேனைதான்.

இந்த இராணுவத்தின் தலைவர்களுள் ஒருவரைப் பற்றி மிகச் சிலரே கேள்விப்பட்டிருக்க முடியும். அவர் பெயர் மார்ஷல் 'போரிஸ் மிக்கலோவிச் சேப் போஸ் நிக் கோவ்'. அவர் செஞ்சேனையின் பிரதம தளகர்த்தர். இந்நிபுணரைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம். இரு விஷயங்கள் மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, புரட்சி தோன்றியதும், சோவியத்தில் சேர்ந்த மிகச் சில இராணுவ அதிகாரிகளில் நிக்கோவ் ஒருவர். மற்றொன்று, அவர் தளகர்த்தர் ஆகுமுன், அவர் விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் நிபுணர்.

1919–ல், செஞ்சேனையை நடத்தும் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப் பட்டிருந்தது. 1921–ல், அவருக்கு ஓர் உயர்ந்த பட்டம் கொடுத்து, சோவியத் மக்கள் அவரைப் பெருமைப் படுத்தினர். 1929–ல், அவர் இராணுவ நிபுணர்களின் தலைவரானார். 1932–ல், தற்காலப் போர் முறைகளைப்பற்றி தளகர்த்தர்களுக்கு ரகசிய வகுப்புகள் நடத்தினார். அவ்வகுப்பு மாணவர்களில் ஸ்டாலின் ஒருவர். விஞ்ஞான முறைப்படியுள்ள போர்ப் பயிற்சிகளிலும் போர்த்தந்திரங்களிலும் ஸ்டாலின் அவருடைய அனுபவத்தைப் பின்பற்றினார்.

செஞ்சேனைத் தளகர்த்தர் பலர் சேப்போஸ் நிக் கோவினால் பயிற்சியளிக்கப்பட்டவர்கள். அவர் பரிசுகள் பல பெற்றவர். நாஜி இராணுவத்தை எதிர்த்துத் தாக்கிய பொழுது, செஞ்சேனை கையாண்ட போர்த் தந்திரங்களுக்கும் போர் முறைகளுக்கும், அவருடைய சிறந்த கொள்கைகளும் அனுபவ அறிவுமே காரணம்.

இராணுவத் தலைமையைப் பற்றி ஷேப்போஸ் நிக்கோவ் மூன்று பெரிய நூல்கள் எழுதினார். அவை சிறந்த இராணுவ காவியங்கள் என எல்லா நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன் பெயர் "இராணுவ மூளை" விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படையில் இராணுவத் தலைமையை நிறுவுவதைத்தான் அவை விளக்கிக் கூறின. அவற்றை ஹிட்லரின் தளகர்த்தர்கள் தலைகீழ்ப் பாடமாய்க் கற்றனர். ஆனால், அவை அவர்களுக்கு அதிகமாகப் பயன்படவில்லை. ஏனென்றால், அவை விஞ்ஞானத்தைப் பயன்படுத்திய இராணுவத்திற்காக எழுதப்பட்டவை. அவை இராணுவ அதிகாரிகளுக்காக மட்டுமல்ல, ஒவ்வொரு போர் வீரனுக்காகவும் எழுதப்பட்டவை.

விஞ்ஞானத்தில் செஞ்சேனைக்குள்ள ஆர்வத்தைக் கண்டு, நாஜிகள் ஏளனம் செய்தார்கள். ஜெர்மனி. ரஷ்யா மீது தாக்குதல் தொடங்கியதும், ரஷ்ய பீரங்கிப் படையை, ஜெர்மானியர் கேலி செய்தார்கள். ஆனால், சோவியத் பீரங்கிப் படை புகழ்பெற்ற ஜெர்மன் மின்னல் தாக்குதலைத் தகர்த்தெறிந்தது. அது இணையற்றது. புதிய விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான கணித நிபுணர்களை நிக்கோவ் தயாரித்ததுதான், அப்படையின் வலிமைக்குக் காரணம். அவருடைய கணித முறைப்படி, செஞ்சேனைப் போர் வீரர், குறி தவறாமல் சுடப் பயிற்சி பெற்றிருந்தனர். மின்னல் போரில் இது மிகவும் அவசியம்.

ஒரு இராணுவத்தை, சிறிய மூளையும் பெரிய உடலும் உள்ள பெரிய மிருகத்திற்கு ஒப்பிடுவது வழக்கம். ஏனென்றால், பழைய இராணுவங்களில் உயர்தர அதிகாரிகள் மட்டுந்தான் சிந்திக்கலாம். ஆனால், செஞ்சேனைப்

போர் வீரர் ஒவ்வொருவரும் தன் முழு ஆற்றலையும் விஞ்ஞானம் என்னும் ஆயுதத்தையும் பயன்படுத்த நிக்வோவ் பயிற்சி அளித்திருந்தார்.

ஒருவன் தன் மூளையால் சிந்திக்கலாம். ஆனால், அவன் போரிடுவதற்கு வீரம் செறிந்த இதயம், கொள்கைப் பற்று, போர்க் கருவிகளைப் பற்றிய முழு அறிவு ஆகியவை வேண்டும்.

10. லட்சோப லட்சம் வீரர்.

கிழக்குப் போர் முனையில் போர் தொடங்கிய சிறிது காலத்திற்குப் பின், நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று. ரஷ்ய இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றைப் பார்வையிட்ட நிருபர் ஒருவர் அதனை எழுதினார். படுக்கையில் அழுதுகொண்டிருந்த ஒரு போர் வீரனின் அருகே அந்நிருபர் சென்றார். போர்முனைக்கு மீண்டும் போகமுடியாத நிலைமைக்காக, அவன் வருந்துவதாகச் சொன்னான். அவன் தனது உயிரைப்பற்றிக் கவலைப்பட வில்லை. பாசிஸ வெறியர்களை அழிக்கும்படி ஸ்டாலின் இட்ட கட்டளையை நிறைவேற்ற அவன் விரும்பினான். இரு கால்களையும் இழந்து முடமாயிருந்த அவ்வாலிப வீரனிடம் நிருபரின் உள்ளம் ஈடுபட்டது.

செஞ்சேனையைப்பற்றிப் பேசும்பொழுது, "வீரன்" என்ற சொல் அடிக்கடி கையாளப் படுகிறது. அரசியல் வாதிகள், பத்திரிகாசிரியர்கள், நிருபர்கள், ஆண், பெண் அடங்கலும் "வீரம் செறிந்த செஞ்சேனை" என்று சொல்லுகிறார்கள். சோவியத் வீரத்தைக் கண்டு, நாஜிகள்கூட ஆச்சரியப் படாமல் இருக்க முடியவில்லை.

"சோவியத் யூனியனின் அளவிலா ஊக்கம், அதன் மாபெரும் தலைவர் ஸ்டாலின், அதன் செஞ்சேனை, என்ன நேரினும் தளரா ஆண் பெண் ஆகிய அம்சங்கள் தலை சிறந்து விளங்குகின்றன. பிறர் சுதந்திரமாக வாழ தங்கள் ஆருயிரையும் ஈந்து, மகத்தான தியாகம் செய்வதே மாபெரும் புகழ் எனக் கருதும் மக்களும் இருக்கின்றனர் என்ற உண்மையை இக்கொடிய போர் தெளிவாக்கியது;" என்று டேவிஸ் சொல்லுகிறார்.

ரஷ்யாவில் ஆண்மை, விஞ்ஞானப் பிரச்னையாகக் கருதப்பட்டது. நாஜிப் படைகளைப்போல் சோவியத் போர் வீரர் வெறியூட்டும் மருந்து அருந்திவிட்டோ, அல்லது இரத்தவெறி பிறந்தோ. போர் புரியவில்லை. எந்நோக்கத்திற்காக எத்தகைய கருவியைக் கொண்டு சோவியத் வீரன் போரிடுகிறான் என்பதை அவன் அறிந்து கொள்ள அவனுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

அந்த ஊக்கம் திடீரென்று ஏற்பட்டதில்லை. "அரசியல் கமிஸார்கள்" பல வருஷங்களாகப் போர் வீரர்களை ஊக்கப்படுத்தி வந்தார்கள். "கமிஸார்கள் இல்லையேல், செஞ்சேனையும் இருந்திருக்க முடியாது" என்று ரஷ்யத் தலைவர் லெனின் வெகுகாலத்திற்கு முன்பே சொன்னார்.

இந்தக் கமிஸார்கள் யார்?

இவர்கள் இராணுவத் துறையில் நன்கு பயிற்சி பெற்ற போர் வீரர்கள். அவர்களின் ஆற்றலின் காரணமாக அவர்கள் மக்களின் மதிப்புக்கு உரியவராயினர். அவர்கள் சோவியத் சர்க்காரிடம் நீண்டகாலமாக விசுவாசமுள்ளவர்கள். ஒரு காலத்தில் ஸ்டாலினும் இராணுவக் கமிஸாராக இருந்தார். பல வருடங்களுக்கு முன் செஞ்சேனையிலிருந்து துரோகிகளை அகற்ற நடவடிக்கை எடுக்

கப்பட்டது. ரஷ்யாவில் ஹிட்லர் விலைக்கு வாங்கியிருந்த துரோகிகளைக் கம்யூனிஸ்ட்கள்தான் கண்டு பிடித்தார்கள். ஐந்தாம் படைகளின் துரோகம் ரஷ்யாவில் மட்டுந்தான் பலிக்கவில்லை. அவர்களின் முயற்சி கருவிலேயே சிதைக்கப்பட்டது. இப்புனிதத் தொண்டைச் செய்தவர்கள் கம்யூனிஸ்ட்களே. அவர்கள் அவ்வாறு செய்யத் தவறியிருந்தால், செஞ்சேனை சின்னாபின்னமாயிருக்கும். நாமும் இன்று ஹிட்லர் காலடியில் வீழ்ந்து கிடப்போம்.

நாம் இதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ரஷ்யாவின் இராணுவ பலத்தைப்பற்றித் தெளிவுபடுத்த விரும்பும் இராணுவ "நிபுணர்களுக்கு," இப்பிரச்னையைப் போல் வேறெதுவும் அவ்வளவு குழப்பத்தைக் கொடுப்பதில்லை, 1942-ல், கம்யூனிஸ்ட் முறையை செஞ்சேனை "கைவிட்டதிலிருந்து" இக்குழப்பம் அதிகமாயிற்று. கம்யூனிஸ்ட் முறைபற்றிப் பல வருஷங்கள் தவறான எண்ணம் நிலைத்திருந்தது. உதாரணமாக, "துக்காசெவ்ஸ்கி ஒழித்துக் கட்டிய கம்யூனிஸ்ட் முறை மீண்டும் அமுலுக்கு வரப்போகிறது என்ற செய்தி ஹிட்லருடைய தளகர்த்தர்களுக்கு ஆறுதல் தரும்" என்று அமெரிக்க இராணுவ விமர்சகர் மேஜர் ஜெனரல் 'பீல்டிங் எலியட்' 1938-ல், அமெரிக்கன் குவார்ட்டர்லி என்ற பத்திரிகையில் சோவியத் யூனியனைப்பற்றிக் குறிப்பிட்டார். துர்க்கா செவ்ஸ்கி செஞ்சேனையில் ஐந்தாம் படையாக இருந்தான். தனது துரோகக் கும்பலை அம்பலப்படுத்திவிடும் என்ற காரணத்தால் கம்யூனிஸ்ட் முறையை ஒழித்துக்கட்ட முயற்சித்தான். ஆனால் அவன் முயற்சி வீணாயிற்று. ஹிட்லர் ஆறுதலடைவதற்குப் பதில் துயருற்றான். ஒரு வருஷத்திற்குள் அவன் சோவியத் யூனியனை ஆக்ரமிப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்து கொண்டான்.

ரஷ்யாவில் துரோகிகளை ஒழித்துக் கட்டியதையும், துரோகிகளின் விசாரணைகளையும், அணுக்கிரமிப்பு ஒப்பந்தங்களையும் பற்றி எழுதிய நம் பத்திரிகைகள் கமிஸார்களைப்பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. கமிஸார்கள் தான் செஞ்சேனையில் துரோகிகளைக் களைந்தெறிந்தனர். அவர்கள் செஞ்சேனைக்குப் புத்துயிர் கொடுத்ததால்தான், ஹிட்லர் ஸ்டாலினுடன் ஒப்பந்தம் செய்ய நேரிட்டது. கமிஸார்கள், ரஷ்யாவையும், நம்மையும் அழிவிலிருந்து பாதுகாத்தார்கள்.

அன்னிய ஒற்றர்களையும் ஏஜண்டுகளையும் கண்டு பிடிப்பது கமிஸார்களின் முக்கிய வேலையல்ல. தான் பயன் படுத்துகிற போர்க்கருவிகளில் நன்கு தேர்ச்சி பெற்று, விரோதியின் தந்திரங்களை முற்றிலும் அறிந்திருக்க வேண்டும் என்பதைப் போர்வீரருக்கு விளக்குவதுதான் அவர்களது முதல் வேலை. அதற்கு அவர்களே உதாரண மாக விளங்குகிறார்கள். ஒரு போர் வீரனுக்கு நம்பிக்கை அளிப்பது இதைக்காட்டிலும் வேறொன்றும் இல்லை. கமிஸார்களுக்கு மற்றொரு முக்கியமான வேலை உண்டு. ஒரு காலத்தில் போர் வீரர் மேல்அதிகாரிகளின் உத்திரவு களைக் குருட்டுத்தனமாக நிறைவேற்றினர்கள். காரணம் கேட்க அவர்களுக்கு உரிமை இல்லை. ஏவிய வேலையைச் செய்து சாவதுதான் அவர்களது கடமை. செஞ்சேனைக் கமிஸார்கள் இப்போக்கை ஒழித்துக் கட்டினர். ஒவ் வொரு தாக்குதலுக்கும் முன்னால், அந்த நடவடிக்கைக்குக் காரணம் என்ன என்பது ஒவ்வொரு போர்வீரனுக்கும் கமிஸாரால் தெளிவாக விளக்கப்படுகிறது.

கமிஸார்களின் வேலைகளை ஸ்டாலின் விளக்கியிருக் கிறார். "அணித்தலைவன் ஒரு அணி வகுப்பின் தலை கமி ஸார், அதன் தந்தையும், உயிரும் ஆவான். கமிஸார் தள

கர்த்தனுக்கு உதவி செய்து, அவருடைய அதிகாரத்தைப் பலப்படுத்த வேண்டும். எந்த ஒரு அதிகாரியின் இராணுவ தந்திரத்திலுள்ள குறைகளையும், வேறு தவறுகளையும், கமிஸார் மேலிடத்திற்கு அறிவிக்க வேண்டும். பயமின்மை, அமைதி, தன்முயற்சி, தீரம் ஆகிய பண்புகள் அவருடைய கவனத்திலிருந்து தப்பமாட்டா என்பதும், தகுதி பெற்றவர்களுக்கு பதவி உயர்வு கிட்டும் என்பதும் செஞ்சேனை வீரர்களுக்குத் தெரியும்.

அணித்தலைவன் உள்பட எல்லா அதிகாரிகளுக்கும் கமிஸார்கள் உதவி செய்கிறார்கள். ஒவ்வொரு கட்டளையிலும் அணித்தலைவனும் கமிஸாரும் கையொப்பமிட வேண்டும். ஏன் இந்த இரட்டை ஆட்சி?

இக்கேள்விக்குப் பதில் சொல்லுவது மிக எளிது. இராணுவ நிபுணர் சாதாரணமாய்க் கவனிப்பது, பிடிக்க வேண்டிய இடம், எதிரியின் பலம். போர்க் கருவிகளின் அளவு. பின் பலம் ஆகியவை. ஒவ்வொரு திட்டமும் சரியாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா என்று கவனிக்க வேண்டியது கமிஸார் கடமை. மனித உயிர் விரயம் செய்யப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது கமிஸாரின் தனிப் பொறுப்பு.

பாசிஸத்தின் கைப்பாவையான பின்லந்தை எதிர்த்து, மார்ஷல் டிமிஷெங்கோ வெற்றி பெற்ற போர் செஞ்சேனையின் இராணுவத்திற்குத் தகுந்த உதாரணம். அது சரித்திரத்தில் இடம் பெறத்தகுந்தது. பின்லந்திலுள்ள மானர்ஹீம் அரணைப் போன்று, சோவியத் போர் அரங்கத்திற்குப் பின்னால் 1940–ல், டிமிஷெங்கோ ஓர் அரண் கட்டினார். இந்த அரணை எதிர்த்து, செஞ்சேனை பல மாதங்கள் போரிட்டுப் பழகியது. அதிக உயிர்ச் சேத

மின்றி உண்மையான மானர்ஹீம் அரணைத் தகர்த்தெறிய முடியும் என்று, டிமஷெங்கோவுக்கும் கமிஸார்களுக்கும் திருப்தி ஏற்பட்ட பிறகு, தாக்குதல் தொடங்கப்பட்டது. இக் கொள்கையைக் கையாண்டதால், உயிர்கள் காப்பாற்றப்பட்டதுடன், விரைவில் அரணும் கைப்பற்றப்பட்டது. செஞ்சேனை, பின்லந்தின் பாசிஸ்டுகளைச் சில வாரங்களில் தோற்கடிக்க முடிந்ததற்கு இதுவே காரணம்.

ஒவ்வொரு பெரிய இராணுவமும் வீரம் செறிந்ததெனக் கருதப்படுகிறது. அது முழு இராணுவத்தின் பலத்தை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கலாம். ஆனல், ரஷ்யா ஒன்றுதான், முதன் முதல் ஒவ்வொரு போர் வீரனின், ஒவ்வொரு மனிதனின், ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு, விஞ்ஞான முறைப்படி இராணுவத்தை அமைத்தது. 1790–ம் வருஷ பிரஞ்சுப் புரட்சியில் தோன்றிய இராணுவ கமிஸார் முறையைத்தான் ரஷ்யர்கள் பின்பற்றினர். கமிஸார்களை இராணுவத் துறையில் நிபுணர்களாக்கி, செஞ்சேனையின் அமைப்பைப் புதுப்பித்தார்கள். கமிஸார்கள் புதுமாதிரியான அதிகாரிகளாக்கப் பட்டார்கள். அவர்கள் இராணுவ அதிகாரிகளுக்குப் பதில் நியமிக்கப்படவில்லை. செஞ்சேனையில் இருவகை அதிகாரிகள் இருந்தார்கள். ஒருவர் இராணுவ நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும். மற்றவர் வீரர்களை நடத்திச் செல்லவேண்டும். அதிகாரிகள் இராணுவத்தைப் பாதுகாத்தனர். கமிஸார்கள் மனிதர்களைப் பாதுகாத்தனர்.

ஜெர்மானியரின் பயங்கரத் தாக்குதலை சோவியத் துருப்புகள் சமாளிக்க முடியும் என்று கமிஸார்கள்தான் தளகர்த்தர்களுக்கு ஊக்கம் அளித்தார்கள். 'மின்னல் தாக்குதல் பீதியை உண்டாக்குவதுதான், அமைதியாகவும்

உறுதியாகவும் எதிர்த்துத் தாக்கினால், அதைத் தடுத்து நிறுத்திவிடலாம்" என்று, அவர்கள் தங்களின் செயல்கள் மூலம் போர் வீரருக்கு எடுத்துக் காட்டினார்கள்.

போர்முனை சிதையாதிருக்க, கடைசி மனிதன் வரை சாகத் தயாராக இருக்க வேண்டுமென்று, கமிஸார்கள் போர் வீரருக்கு அடிக்கடி சொல்வது வழக்கம். கமிஸார்களின் வாசகம் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும். அவர்கள் சாவுக்கு அஞ்சமாட்டார்கள்.

அவ்வளவு முக்கியமான கமிஸார் முறையை ஏன் ஒழிக்க வேண்டும்? கமிஸார் பதவி எடுபட்டாயிற்று என்று மாஸ்கோ சமீபகாலத்தில் அறிவித்ததும், நமது பத்திரிகைகளும் விமர்சகர்களும் கொக்கரித்ததை நாம் அறிவோம். செஞ்சேனையின் திறமையைப் பாதுகாக்கும் பொருட்டு கமிஸார் முறை ஒழிக்கப்பட்டதென்று நம் நிபுணர்கள் நிரூபிக்க முயன்றார்கள்.

இது உண்மையல்ல. செஞ்சேனை மகத்தான போர் புரிந்து அனுபவம் அடைந்து விட்டதால், கமிஸார் முறை அவசியம் இல்லாது போயிற்று. கமிஸார்களும் அதிகாரிகளும் ஒன்றுபட்டுப் போரை நடத்தினர். தற்காலப் போர் முறையில் மிகுந்த அனுபவம் பெற்றுவிட்டனர்.

கமிஸார்கள் இராணுவத்தை நடத்தவும், இராணுவ அதிகாரிகள் வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கவும் திறமையுள்ளவர்களாகி விட்டார்கள். சுருங்கச் சொல்லின், **கமிஸார்கள் இராணுவ நிபுணர்களாகி விட்டார்கள், இராணுவ அதிகாரிகள் அரசியல் நிபுணர்களாகி விட்டார்கள்.**

இவ்வாறு, இருவகை அதிகாரிகளிடையே இருந்த வேறுபாடு, நடைமுறையில் மறைந்து போயிற்று. ஒவ்

வொருவரும் மற்றவருடைய வேலையைக் கற்றுக்கொண் டார்கள். இரு மாறுபட்ட கருத்துக்களிலிருந்து ஒன்று பட்ட புதிய கருத்து எழுந்தது. இங்கு புதிய கருத்தென் பது புதிய செஞ்சேனை அதிகாரி. அப்புதிய அதிகாரி தான்சோவியத் எதிர்த்தாக்குதலின் வெற்றிக்குப் பொறுப் பானவர். அந்த அதிகாரி, தனது இளமையாலும், நம்பிக் கையாலும், துணிவாலும், திறமையாலும் தன் ஆட்கள் மீதுள்ள நம்பிக்கையாலும். நமது நிருபர்களுக்கு ஆச்சரி யத்தை விளைவிக்கிறார்.

இன்றைக்கு செஞ்சேனையை நடத்துகிறவர்கள் அப் புதிய அதிகாரிகள்தான், அவர்கள் ''வீரன்'' என்ற வார்த்தைக்கு புதிய வியாக்யானம் செய்தார்கள். லட்சக் கணக்கான செஞ்சேனைப் போர் வீரர்களுக்கு ஊக்கம் அளித்து மகா வீரர்களாக மாற்றிவிட்டார்கள்.

''ரஷ்யர்கள் மனிதர்களல்ல, செத்துவிட்டனர் என எண்ணிக்கொண்டிருக்கும்பொழுது, அவர்கள் போரிடு கிறார்கள். அவர்கள் சலிப்பின்றிப் போரிடுகிறார்கள். கடைசி மனிதன் வரை அழிக்கப்பட்டு விட்டான் என்று எவரும் கூற முடியாது,'' என நாஜி போர் நிருபர் ஒருவர் சொன்னார்.

இப்போரில் ஒரு புதிய வீரன் தோன்றினான். அவனை 'ஸ்டாலின்கிராடு மனிதன்' என்று அழைக்க விரும்புகிறேன். சாகும் வரை உறுதியுடன் நிற்கவேண் டும் என்று அவன் உணர்ந்தான். அவன் பாதுகாத்த இடத்தை, ஜெர்மானியர் கைப்பற்றிய போது, அவன் அந்த இடத்தை விட்டு அகலாமல், கடைசிவரை போரிட் டுப் பிணமாகிக் கிடந்ததை அவர்கள் கண்டார்கள். எந்த ஒரு தனி வீரனின் பெயரையும் என்னால் குறிப்பிட முடி

யாது. ஆனால், முற்றிலும் வீரர்களைக் கொண்ட படைகளின் பெயரைக் குறிப்பிட முடியும்;" என ரஷ்ய நிருபர் ஒருவர் சொன்னார்.

இதற்குக் காரணம் என்னவென்றால், ஒவ்வொரு கடைசி மனிதனும் சாகத் துணிந்து விடுகிறான். எனவே, அவன் தனது மூளையைப் பயன்படுத்தி, சிந்தனை செய்து, எதிரி கைப்பற்றக் கருதுகிற ஒவ்வொரு அங்குல நிலத்திற்கும் பல உயிர்களைப் பலி கொடுக்கச் செய்கிறான்.

செஞ்சேனை வீரரில் காயமுற்று இறந்தவர்களின் எண்ணிக்கை மிக சொற்பமாக இருந்ததைக் கண்டு, நம் இராணுவ வைத்தியர்கள் ஆச்சரியப்பட்டார்கள். போர்க்களத்தின் வெற்றியைப் போல் வைத்தியத்தின் வெற்றியையும் முக்கியமாக விஷ்னெவ்ஸ்கியின் தலைமையிலுள்ள ரஷ்ய வைத்திய நிபுணர் கருதினர்.

இரத்தத்தை உடலுக்குள் புகுத்தும் முறை, சோவியத்தில் எவ்வளவு வளர்ச்சியுற்றிருக்கிறது என்பதை, நாம் முன்பே குறிப்பிட்டோம். போரில் இராணுவ டாக்டர்களின் முயற்சியால் அது மேலும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இரத்தம் முழுவதையும், ஒரே காலத்தில் உடலில் புகுத்துவதற்குப் பதில் செஞ்சேனை டாக்டர்கள் புதிய முறையைக் கையாளுகிறார்கள். புது இரத்தத்தைத் துளி துளியாக நோயாளியின் உடலில் நாள் முழுவதும் செலுத்துகிறார்கள்.

இரத்தம் புகுத்தும் முறை ஒரு புறமிருக்க டாக்டர் 'போரிஸ் குட்ரியசோவ்' ஒரு புதிய முறை கண்டு பிடித்திருக்கிறார். போர்க்களத்தில் உயிர்களைக் காப்பாற்ற ஒரு ரசாயனப் பொருள் உபயோகிக்கப்படுகிறது இதன் பெயர் 'தராம்பின்'. எல்லா நாடுகளிலுமுள்ள விஞ்

ஞானிகள் இப்பொருளின் பண்புகளை வெகு காலத்திற்கு முன்பே அறிந்திருந்தார்கள். அது இரத்தத்தை உறையச் செய்யும் பொருள். அது இரத்தக் கசிவை நிறுத்துகிறது. சுத்தமான தராம்பின் ஏராளமாகத் தயாரிக்கும் முறையைக் குட்ரியசோவ் கண்டு பிடித்தார். படுகாயம் அடைந்தவர்களுக்கு, அதைப் பிரயோகித்து, இரத்தம் வெளியேறுதபடி தடுத்து நிறுத்தலாம். இந்த ரசாயனப் பொருள், சோவியத் யூனியனில் ஏராளமாகத் தயாரிக்கப் படுகிறது.

கிழக்குப் போர் முனையில் இந்த ரசாயனப் பொருள் பல உயிர்களைக் காப்பாற்றியது. குண்டுகளின் சில்லுகள் மூளைக்குள் புகுந்து, அதனால் ஏற்படுகின்ற காயங்களை அது குணப்படுத்துகிறது. அதன் உதவியால் இது வரை சாத்தியமில்லை என்று கருதப்பட்ட ரண சிகிச்சைகளை சோவியத் டாக்டர்கள் செய்திருக்கிறார்கள். அது நோயாளிக்குத் தீங்கு விளைவிக்காது. அதை உபயோகித்ததும் இரத்தக் கசிவு முற்றிலும் நின்று விடும்.

செஞ்சேனையைப்பற்றி இன்னும் ஒரு விஷயம் நாம் கவனிக்கவேண்டும். மிகுந்த காயமுற்று, போர் முனைக்கு மீண்டும் போக இயலாதவர்களின் நிலைமை என்ன? அவர்களுக்கு எத்தகைய உதவி அளிக்கப்படுகிறது.?

இக் கேள்விக்கு சோவியத் சமூகப் பாதுகாப்புக் கமிஸார் எளிதில் விடை தருகிறார். செம்படை வீரன் ஒருவன் வேலை பார்க்க இயலாதவனாக இருந்தால், அவனுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். உபகாரச் சம்பளம், அவன் அல்லது அவள், முன் வேலை பார்த்த காலத்தில் பெற்று வந்த மொத்தச் சம்பளத்திற்குக்

குறையாது. காயத்தின் கடுமைக்கு ஏற்றவாறு உபகாரச் சம்பளம் அதிகப்படும்.

உபகாரச் சம்பளம் பெற்று சோம்பேறியாக வாழ்பவர் ஒரு சிலரே. காயமுற்றவர்கள் ஏதேனும் ஒரு வேலையில் பயிற்சி பெற, சௌசேனை, பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரிகளும் அமைத்திருக்கிறது. இவற்றில் வேலை செய்கிறவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு இலாகா சம்பளம் கொடுக்கிறது.

சோவியத் நாட்டைப் பாதுகாக்கும் புனித போரில் ஊனமுற்று வேலை செய்யத் தகுதியற்றவர்கள், தங்கள் பழைய திறமையை மீண்டும் பெறவேண்டிய உதவி தரப்படுகிறது. இல்லாவிடில், முன் மாதிரி வாழ்க்கை நடத்த போதிய உபகாரச் சம்பளமும் பிற வசதிகளும் கொடுக்கப்படுகின்றன.

11. நாடு முழுதும் போர்க்கோலம் பூண்ட புதுமை.

ரஷ்யாவின் பலத்திற்கு, நிபுணர்கள் பலவாறுகக் கூறினர். "சோவியத் மக்கள் தங்கள் தாய் நாட்டைப் பாதுகாக்கப் போரிடுகிறார்கள். எனவே, அவர்கள் ஜெர்மானியர்களின் தாக்குதலை வெற்றிகரமாக எதிர்க்கிறார்கள்," என்று சிலர் சொன்னார்கள். என்ன அறியாமை! பலம் பொருந்திய போலிஷ் மக்களும் கிரேக்கர்களும் தங்கள் தாய்நாட்டின் பாதுகாப்பிற்காகப் போரிடவில்லையா? அவர்கள் தோல்வியுற்றார்களே.

தங்களுடைய சோஷலிஸ சமுதாயத்தைப் பாதுகாக்க ரஷ்யர்கள் வீரப் போரிடுகிறார்கள் என்பது மற்றொரு சாராரின் கூற்று. ஆனால், அமெரிக்க கடற்படை வேக் தீவில் மிகத்திறமையாகத்தான் போரிட்டது. ஐக்ய அமெரிக்கா சோஷலிஸ அரசாங்கம் அல்லவே. பிரிட்டிஷ் கனேடிய இராணுவமும் ஆறுவது ஜார்ஜ் மன்னருக்காக வீரப்போர் புரிந்ததே!

ரஷ்யர்கள் தங்கள் தாய்நாட்டையும் சோஷலிஸத்தையும் பாதுகாப்பதற்காக வீரப்போர் புரிந்தனர் என்று

சோவியத் யூனியனின் பலத்திற்குக் காரணம் கூறுவது பொருத்தமல்ல. எனினும், சோவியத் யூனியனின் பலத்திற்கு இவை காரணம் அல்ல என்று தள்ளிவிட முடியாது. சோவியத் வெற்றியில் இவற்றிற்கும் பெரும் பங்கு உண்டு என்பதில் ஐயமில்லை. ஆயினும் இந்தப் போரிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. ஒரு நாடு உயிரினும் இனிய பல விஷயங்களைப் பாதுகாக்க வீரப்போர் செய்யலாம். அத்தகைய நாட்டை ஹிட்லரின் மிலேச்சர்கள் தோற்கடிக்க முடிந்தது.

ஆனால், ரஷ்யர்களை நசுக்கத் துணிந்த முயற்சியில் ஹிட்லர் வெற்றியடையவில்லை. ரஷ்யர்கள் அவனை நசுக்கி விட்டனர். குளிர்காலத்தை மாஸ்கோவில் கழிக்கக் கருதிய ஹிட்லரின் கருங்காவலர் படை ரஷ்ய சமவெளியில், மீளாத உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறது.

மாஸ்கோவையும், சோஷலிஸ அமைப்பு அளித்த எல்லா நன்மைகளையும் பாதுகாக்க ரஷ்யர்கள் போர் புரிந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால், அவர்களின் வீரப்போருக்கு வேறு காரணமும் உண்டு.

பதினைந்தாண்டுகளுக்கு முன், ரஷ்யா முழுவதும் ஆயுதம் தாங்கவேண்டும் என ரஷ்யர்கள் தீர்மானித்தார்கள். இராணுவமும், சர்க்காரும், விஞ்ஞானத் தலைவர்களும் வெகு கவனமாகத் திட்டங்கள் வகுத்தனர். இதற்கு ஒரு மத்திய ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. பாதுகாப்புப் படை என்று நாம் அதைக் குறிப்பிடலாம். அதில் மக்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என சர்க்கார் தீர்மானித்தது. எனவே, மக்களின் ஆலோசனையை நாடியது.

போர் ஆபத்து இல்லாத பொழுது, பாதுகாப்புப் படை திரட்டுவதென்றால், மக்களுக்கு ஆர்வம் உண்டாக வேண்டும். எனவே, அதற்கு ஒரு வழி கண்டு பிடித்தார் கள். அவ்வழி பிரசங்கமுமல்ல, பிரச்சாரமுமல்ல. மனிதர் களுக்கு உள்ள ஒரு சபல குணத்தைப் பயன்படுத்தி மக்க ளுக்கு ஆர்வம் உண்டாக்கப்பட்டது. அதுதான் சூதாட் டம்! சோஷலிஸ அமைப்பிலும் சிறிய தொகையைப் பண யம் வைத்தால், ஏதாவது கிடைக்காதா என்ற பேராசை இருப்பதாகக் காணப்படுகிறது.

சூதாட்டத்தின் தீமைகளைப்பற்றி பலர் எழுதி யிருக்கிறார்கள். அளவுக்கு மிஞ்சினால் அது கேடாக முடியும். மக்கள் குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டங் களில் ஈடுபடுகிறார்கள். ரஷ்யர்கள் இதற்கு விலக்கல்ல. ஆனால், ஒரு விஷயத்தில் அவர்களுக்கும் நமக்கும் வித்தி யாசம் உண்டு. சூதாட்டத்திலுள்ள ஆர்வம் நாட்டின் நன்மைக்காகப் பயன்படுத்தப் பட்டது.

எனவே, அவர்கள் பாதுகாப்புப் படை "லாட்டரி" தொடங்கினர். அநேகமாக ஒவ்வொருவரும் சீட்டுகள் வாங்கினர். 1940–ல், 2,5000000 ரூபிள்கள் ஜெயித்தவர் களுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்கும் அதிகமான தொகை பாதுகாப்புப் படையின் நிதிக்கென ஒதுக்கப் பட்டது.

அதன் வருஷ வருமானத்திலிருந்து ஏராளமான தற்காப்புக் கருவிகள் வாங்கப்பட்டன. சூதாட்டம் ஒவ் வொருவருக்கும் ஆர்வத்தை உண்டாக்கியதைப் போல், பாதுகாப்பு நடவடிக்கைகளும் மக்களின் ஆர்வத்தைத் தட்டி எழுப்பின! ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்க ளிலும் ரஷ்ய மக்கள், வெடிகுண்டு எறிதல், குதிரை ஏற்

றம், பாலங்களைத் தகர்த்தல், ரேடியோ, டெலிபோன் போன்ற கருவிகளைப் பயிலுதல், காடுகளில் வசித்தல், விமானங்கள் செய்தல், அவற்றிலிருந்து குதித்தல்போன்ற விரிவான பாதுகாப்புப் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

1940–ல், லட்சக்கணக்கான ஆண் பெண் பாரசூட்களிலிருந்து குதிக்கக் கற்றுக் கொண்டார்கள், பாதுகாப்புப் பயிற்சி பந்தாட்டம்போல் ஒரு விளையாட்டாகக் கருதப்பட்டது. நம் நாடுகளில் சிறுவர்களும் சிறுமிகளும், விமானத்தில் பறக்கக்கூடிய நாளைப்பற்றிக் கனவு காண்கிறார்கள். ஆனால், சோவியத் இளைஞர்கள் பறக்கிறார்கள். பாரசூட்களிலிருந்து குதிக்கிறார்கள். விமானங்களில் பறப்பதை இன்பமாகக் கருதுகிறார்கள்!

ரஷ்யாவில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு விமானம் இருப்பதாக நான் சொல்லவில்லை. ஆனால், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது பாதுகாப்புப் படையில் சேர்ந்திருப்பார். ஒவ்வொரு பாதுகாப்புக் கிளப்புக்கும் ஒரு விமானம் உண்டு. இவ்விமானத்தை வாலிபர், வயது வந்தவர், குழந்தைகள், அனைவரும் உபயோகிக்கிறார்கள். சோவியத் சிறுவர்களையும் சிறுமிகளையும் நம் நாட்டின் சாரணப் படைக்கு ஒப்பிட்டுக் கூறலாம். தொலையிலுள்ள கோடைகால முகாம்களுக்கு அவர்கள் விமானத்தில் பறக்கிறார்கள். லட்சக்கணக்கான சிறுவர்கள் பாரசூட்களின் மூலம் கீழே குதிக்கிறார்கள். ஆனால், நம் நாடுகளில் பயிற்சி பெற்றவர்கள்கூட, பாரசூட்களின் மூலம் குதிப்பது ஆபத்தென்று கருதப்படுகிறது! சோவியத் யூனியனில் பள்ளிப்பிள்ளைகளும் சர்வசாதாரணமாய் பாரசூட்டை கையாளுகிறார்கள்.

விமானத்தில் பறத்தல், பாரச்சூட்டு மூலம் கீழே குதித்தல் போன்ற நாணுவக் கலைகளை ரஷ்யாவின் ஒவ்

வொரு பகுதியிலுமுள்ள மக்களுக்கு தற்காப்புப் படை மிக எளிதாக்கியது. மாஸ்கோ சிறுவன் ஒருவனைப்பற்றி ஒரு கதை உண்டு. அவன் நூற்றுக்கணக்கான பள்ளிச் சிறுவருடன் வெகு தொலையிலுள்ள விவசாயப் பண்ணையில் இறங்கினான். அங்கு வயலில் வேலை செய்து கொண்டிருந்த வயோதிக விவசாயியை நோக்கி, "தாத்தா! நீங்கள் இதைப்போல் எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"என்னுடைய பேரன் சென்ற வாரம் இங்கு வந்தான், அவன் மிகத் திறமை வாய்ந்தவன். அவன் உன்னைப்போல் பாரச்சூட்டு புதரில் சிக்கும்படி இறங்கவில்லை. இந்தா! அதை நீ இழக்காதே. பாரச்சூட்டை எப்படி உபயோகிப்பது என மாஸ்கோவில் உனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லையா?" என்று கூறிக்கொண்டே, கிழவர் சிறுவனுடைய பாரச்சூட்டைத் திறமையாக மடித்துக் கொடுத்தார்.

"இவ்வாரத்தில் நான் பாரச்சூட்டு மூலம் குதிக்கப் போகிறேன். இன்றிரவு மழை இல்லையானால், தற்காப்பு நிலையத்திற்குப் போய், அதைச் செய்யப் போகிறேன். பிறகு இயந்திரத் துப்பாக்கிப் பயிற்சியை விரைவில் முடிப்பேன்." என்று அக்கிழவர் மேலும் சொன்னார்.

குறிபார்த்துச் சுட ரஷ்யாவில் லட்சத்தணக்கானவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குறி தவறாமல் சுடும் வித்தையில் ரஷ்யர்கள்தான் முதல் ஸ்தானம் வகிப்பவர்கள். குதிரை ஏற்றம், பனிக்கட்டிமேல் வழுக்கிச் செல்லுதல் போன்ற பயிற்சிகளும் உடல் வலிமையுள்ள ஒவ்வொரு ரஷ்யனுக்கும் அளிக்கப்படுகின்றன.

இதுவே சமாதான காலத்தில் தற்காப்புப் படை செய்த வேலை. போரில் அது செய்த வேலைகளை நாம் பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். பாசிஸ வெறியர்கள் சோவியத் யூனியனைத் தாக்கியதும், நாடு முழுவதும் போர்க்கோலம் பூண்டெழுந்தது. போர் வீரர்களும் கொரில்லாக்களும் நாடு முழுதும் தோன்றினர். லாட்டரிச் சீட்டுகள் மூலம் திரட்டப்பட்ட நிதியினால் தற்காப்புப் படை அவர்களுக்குப் பயிற்சி அளித்திருந்தது.

நாஜி வெறியர்கள் சோவியத் யூனியன்மீது பாய்ந்த பொழுது, சோவியத் ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் ஐரோப்பிய மக்களைப் போல் கிலி பிடித்து ஓடவில்லை. அதற்குக் காரணம், அவர்களுடைய மனைதிடமும் விஞ்ஞான அடிப்படையில் அவர்கள் தற்காப்புப் பயிற்சி பெற்றிருந்ததும்தான்.

ரஷ்யரின் கொரில்லாப் போர், இரண்டாம் போர் முனையைப் போல் உருவாகியது என ஹிட்லரின் தளகர்த்தர்களே ஒப்புக் கொண்டனர். ரஷ்யர்கள் பதினைந்தாண்டு பயிற்சி பெற்றதால், எப்படித் திறம்பட போர் செய்வதென்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

12. விடுதலை பெற்ற புதிய குடும்பம்.

பாசிஸ இராணுவம் உக்ரைன் பிரதேசம் முழுவதையும் கைப்பற்றிய பொழுது, உக்ரைன் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம், ரஷ்யாவின் உட்பாகத்தில் உக்ரைன் கவிஞர் ஒருவருக்கு வணக்கம் செலுத்துவதற்காக ஒரு மாநாடு கூடியது. போகோமலெட்ஸ் என்ற விஞ்ஞானி கீழ்கண்ட கவியைப் பாடினர்.

"பொங்கும் சுதந்திரப் புதுமைக் குடும்ப
மாபெரு மக்கள் மாபே ரினமாம்
உற்றூர் உறவினர் சுற்றம் சூழ
என்னைப் பற்றி நினைவெழும் போது
அன்பு கனிந்த இன்சொல் வழங்குக."

அப்பொழுது விஞ்ஞானிகள் எழுந்து நின்றார்கள். அக்கவிஞரின் பெயர் செவ்சென்கோ. அவர் மகா கவிகளில் ஒருவர். அதுமட்டுமல்ல, மனித வர்க்கத்தின் விடுதலை வீரர்களில் ஒருவர். கடும் போரில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகள் கவிஞர் ஒருவருக்கு வணக்கம் செலுத்த வேண்டிய காரணம் என்ன?

இக்கேள்விக்குப் பதில், செவ்சென்கோவின் வாழ்க்கையிலும் செயலிலும் காணப்படுகிறது. ஜார் மன்னர்களின் காலடிகளில் அழுந்திக் கிடந்த உக்ரைனில் செவ்சென்கோ வாழ்ந்தார். அவர் ஒரு நில அடிமை. அவர் அடிமைத்தனத்தை வெறுத்தார். அவருடைய மக்கள் வெள்ளை ரஷ்யர்களின் தேசிய இனவெறிக்கு ஆளாயினர். அவர் மனித சகோதரத்துவத்தைப் போதித்தார். உக்ரைன், போலந்து உள்பட ரஷ்யா முழுவதும் அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த காலத்தில் "காக்கஸஸ்" என்ற புகழ் பெற்ற கவியை செவ்சென்கோ பாடினார். அணைக்க முடியாத விடுதலைத் தீ எவ்வாறு காக்கஸஸ் மலைகளின் பனி தோய்ந்த சிகரங்களைத் தழுவி மேலும் ஓங்கியது, என்பதை விவரிப்பதே அக்கவிதை. கண்ணீரையும் செந்நீரையும், மன்னர்கள் தாகந்தீரப் பருகலாம். ஆனால், ஜார் எனும் கழுகு சுதந்திர வீரர்களின் வாழ்க்கைக் குருதி முழுவதையும் பருகிவிட முடியாது, என அவர் வீர முழக்கம் செய்தார்.

செவ்சென்கோவின் இக்கவிதையைக் கேட்டு, ஜார் மன்னனும், பெரிய நிலச்சுவான்களும் நடுங்கினர். ஆனால், மக்கள் அதைப் பாராட்டினர். அவர் மரணமடைந்த பிறகு, அவரது கொள்கைகள் மேலும் பெருகின. புரட்சிக்குப் பின், சோவியத் சர்க்கார் உக்ரைனை விடுவித்த பொழுது, செவ்சென்கோவின் கவிதைகள் பன்முறை அச்சாகி வெளிவந்தன. உக்ரைன் மக்கள் அவற்றை ஆர்வத்துடன் படித்தார்கள். செவ்சென்கோவின் கவிதைகள் மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கை அழிக்க ஹிட்லரது முரடர்கள் முயன்றனர். அவருடைய கவிகளை அவர்கள் திரித்து எழுதினர். அவர் ஒரு தேசிய கவி என்றும், ரஷ்யர், யூதர், போலிஷ் ஆகிய தேசிய இனங்களை வெறுத்

தவர், என்று கருதும்படியாக அவருடைய கவிகளை மாற்றி அமைத்தார்கள்.

ஆனால், செவ்சென்கோவின் வாழ்க்கையும், பாடல்களும் அவர்களின் கூற்றைப் பொய்யாக்கின. உதாரணமாக செவ்சென்கோ இருந்த கிராமத்திற்குச் சில குண்டர்கள் வந்தார்கள். ஜார் மன்னனின் கையாட்களால் தூண்டப்பட்ட அக்கொலைஞர் யூதர்களைத் தாக்கினர். அச்செய்தியைக் கேள்வியுற்ற செவ்சென்கோ அக்கொடிய செயல் நடைபெற்ற இடத்திற்கு ஓடினார். வீடுகள் தீக்கிரையாகிக் கொண்டிருந்ததைக் கண்டார். ஒரு குழந்தை நெருப்பில் சிக்கிக் கொண்டது. அவர் நெருப்பில் பாய்ந்தார். குழந்தையைக் காப்பாற்றினார். அது யூதக் குழந்தை. 'தேசிய இன வெறியைக் கிளப்புகிறவர்கள்தான் உக்ரைனியர்களை அடிமைப் படுத்தி வைத்திருக்கிறார்கள், என்று அவர் அடிக்கடி தெளிவாக்கி வந்தார்.

செவ்சென்கோ ரஷ்யர்களை வெறுத்தார் என்பதும் பொய். அவர் ஜார் மன்னனையும், பிரபுக்களையும், சுதந்திர விரோதிகளையும் தான் வெறுத்தார். ரஷ்ய தேசிய இனத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜனநாயக வாதி சொனி செவ்ஸ்கி என்ற பெரியார் உக்ரைன் தேசிய இனத்தைச் சேர்ந்த செவ்சென்கோவின் உற்ற நண்பர். உக்ரைன் தலைவர்களிலும் மக்களின் நண்பர்கள் எவர்? துரோகிகளுடன் கூட்டுறவு கொண்டிருந்தவர்கள் எவர்? என்பதையும் அவர் தெளிவாக எடுத்துக் காட்டினார். "எல்லா தேசிய இனங்களுக்கும் சுதந்திரம்" என்ற அடிப்படையில் உக்ரைனியர்களையும் தனது ரஷ்ய சகோதரர்களையும் ஒற்றுமைப்படுத்த முயன்ற, பாக்டன் செல்னிட்ஸ்கி என்ற ரஷ்யப் பெரியாரை, உக்ரைன் கவிஞர் செவ்சென்கோ பாராட்டினார்.

உக்ரைன் துரோகிகளும், பாசிஸ வெறியர்களும் தான், ஜெர்மனியின் பொய்க்கூற்றை நம்பினர்கள். ஜெர்மன் இராணுவத்தோடு, உக்ரைன் ஐந்தாம் படையும் சோவியத் உக்ரைனில் புகுந்த பொழுது, அப் பொய்க் கூற்று அம்பலமாகியது. நூறுண்டுகளுக்கு முன் இறந்து போன கவிஞர் மீது ஜெர்மானியர் பகைமை உணர்ச்சியைக் காட்டினர்! உக்ரைன் மக்கள் புனிதமாகக் கருதிய செவ்சென்கோவின் சமாதியை அக்கொடியவர் சிதைத்தனர்!

ஜெர்மானியர் தேசிய இன வெறி கொண்டவர்களானதால், இத்தகைய அருவருக்கத்தக்க செயலைச் செய்தனர். ரஷ்யர், உக்ரைனியர், போலிஷ் போன்ற எல்லா தேசிய இனத்தினரும், "விடுதலை பெற்ற புதிய குடும்பமாக" வாழவேண்டும் என்று, கனவு கண்ட மேதையின் நினைவுச் சின்னத்தைக்கூட அவர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை!

தேசிய இன வெறுப்பு ஒரு நச்சு ஊற்று. மக்களின் இதயப் பண்பைக் கெடுக்க, பாசிஸ வெறியர்கள் அதைக் கையாளுகிறார்கள். அது, ஒரு தேசிய இனத்திற்கும் மற்றொரு தேசிய இனத்திற்கும், வெள்ளையருக்கும் கருப்பருக்கும், இடையே பகைமையை உண்டாக்கும் விஷ விதை. மனித சகோதரத்துவத்தை உடைத்தெறிவதற்காக, கொடியவர்கள் தேசிய இனப் பகைமை என்ற விஷயத்தை வெகு காலமாகக் கையாண்டு வந்திருக்கிறார்கள்.

ஹிட்லர் விரித்த மாய வலையில் ஜெர்மன் மக்களைச் சிக்கச் செய்தது, தேசிய இன வெறுப்புத்தான். பிரான்சு, போலந்து, செக்கோஸ்லோவேக்கியா, ஹங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகளைக் கெடுத்ததும் அதுதான். இன்றைக்கும்

நம் நாடுகளில்; பாசிஸ வெறியர்களும், அவர்களின் கையாட்களும் இந்த நச்சு மரத்தைப் பேணி வளர்த்து வருகிறார்கள்.

நூற்றுக்கணக்கான வருஷங்களாக தேசிய இனக் கொடுமைக்கு உறைவிடமாயிருந்த ஐரோப்பாவில்; சோவியத் பகுதி அவ்விஷப் பாம்பின் பிடிப்பிலிருந்து விடுவிக்கப் பட்டு விட்டது.

இதற்கு விஞ்ஞானம் வழிகாட்டியது, தேசிய இனங்களில் ஏற்றத் தாழ்வு இல்லை என விஞ்ஞானம் வாழ்க்கையில் நிரூபித்துவிட்டது. சமவாய்ப்பு அளிக்கப் பட்டால்; எல்லா இனங்களும் சமமாகிவிடும். அதற்கு மாறாக நிரூபிக்க விஞ்ஞானத்தில் ஆதாரம் இல்லை. புனிதமான ஒரே ஒரு இனம்தான் உண்டு. மனித இனம்தான் அது என விஞ்ஞானம் சொல்கிறது.

தேசிய இன குரோதத்தைக் கிளப்புவதற்கு, "மனித இயல்பில்" இடம் உண்டா என்பதை சோவியத் விஞ்ஞானிகள் ஆராய்ந்தார்கள். அப்படி ஒன்றும் இல்லை என தெரிந்தது. மக்களின் விரோதிகளிடமிருந்தே இனக் குரோதம் என்னும் விஷம் பிறக்கிறது என்ற உண்மையை சோவியத் மக்கள் தெரிந்து கொண்டார்கள்.

எனவே, இனப் பகைமையைப் பரப்புவது, சோவியத் அரசாங்கத்திற்கு விரோதமாகச் செய்கின்ற குற்றம் என்று, சோவியத் மக்களின் ஆதரவோடு சோவியத் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது.

இரு காரியங்கள் வெகு வேகமாக நிகழ்ந்தன. முதலாவது, வெறுப்பைப் பரப்புகின்ற சில்லரை விஷமிகள், கோழைகளைப்போல் வாயடைத்துப் போயினர். இரண்

டாவது, தேசிய இனப் பகைமையைத் தூண்டியவர்கள் பிடிபட்டார்கள். மக்களே மாக்களாக்கும் குற்றவாளிகள் என்று அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

இச் சட்டம் அமுலுக்கு வந்த சில வருஷங்களுக்குள். சோவியத் யூனியனில் இன வெறுப்பு ஒழிந்து போயிற்று. இம் மாபெரும் சாதனையை நம் நாட்டில் புரிந்து கொள்ள முடியாது. ஐக்கிய சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் என்ற பெயரே, அது குடியரசுகளின் சங்கம் என்பதைக் குறிக்கிறது. அது பல தேசிய இனங்களின் கூட்டுறவு, அவற்றில் ரஷ்ய இனமும் ஒன்று அதில் வெள்ளை மஞ்சள், கறுப்பு ஆகிய மூன்று நிறத்தவரும் வசிக்கிறார்கள். அசர்பெய்ஜான், ஜியார்ஜியா, ஆர்மீனியா, டர்க்மெனியா, உஷ்பெகிஷ்தான், டாட்சிகிஸ்தான், காசாகிஸ்தான், கிர்கிஷ்தான் போன்ற பல தேசிய இனக் குடியரசுகளைச் சேர்ந்த கோடிக் கணக்கான மக்கள், சோவியத் யூனியனில் வசிக்கிறார்கள். இந்த ஒவ்வொரு குடியரசும், வெவ்வேறு மொழியும், பழக்க வழக்கங்களும் கொண்ட தனி தேசிய இனம். இன்னும் பல தேசிய இனங்கள் அங்கே இருக்கின்றன. புரட்சிக்கு முன் இம் மக்களில் சிலர் எஸ்கிமோக்களைப் போல் நாடோடிகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஜார் ஆட்சியின் அடக்கு முறையில் அவதிப்பட்டவர்கள். அவர்களுடைய தாய் மொழியில் அவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் இல்லை. சொந்த நாட்டை விட்டு வெளியிடங்களுக்குச் செல்லவேண்டுமானால் அவர்கள் அனுமதி பெற வேண்டும்.

புத்த மதத்தினர், முஸ்லீம்கள், இந்துக்கள், கிரேக்கர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் போன்ற பல மதப் பிரிவினர் இருந்ததால், இனப் பிரச்னை மிக சிக்கலாகியது.

எனினும் பிரச்னை தீர்க்கப்பட்டது. தேசிய இனப் பிரச்னை இல்லாத பெரிய நாடு சோவியத் யூனியன் ஒன்று தான். அதன் பதிவைட்டுக் கோடி மக்களும், இனக் குரோதம் என்னும் நச்சரவின் ஆபத்திலிருந்து விடுதலை பெற்று விட்டனர். உக்ரைன் கவிஞர் செவ்சென்கோ வின் கனவு நனவாகி விட்டது. இனத்தைப்பற்றிய உண் மையை. மக்களுக்கு விளக்கிக் காட்டிய புதிய சோவியத் விஞ்ஞானம், செவ்சென்கோவின்கனவை எதார்த்தமாக்கி விட்டது.

அது சாத்தியமான விதம் இதுதான்:—

முதலாவது ஒவ்வொரு தேசிய இனத்தின் மொழி, பண்பாடு, பரம்பரை ஆகியவற்றைப் பாதுகாப்பது என்ற கொள்கையை சோவியத் சர்க்கார் மேற்கொண்டது. தாய் மொழி வளர்ச்சிக்கான பள்ளிக்கூடங்கள், கல்லூரி கள், பத்திரிகைகள், சுதேசப் பாடல்கள், நடனங்கள். சினிமாக்கள் ஆகியவற்றிற்குப் புத்துயிர் கொடுத்ததின் மூலம். அக்கொள்கை நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டது. ஜார் ஆட்சியில் இவை தடுக்கப்பட்டிருந்தன. சோவியத் அரசாங்கம் அவற்றைப் பலமாக ஆதரித்தது.

இரண்டாவது, எல்லாவிதமான் புதிய பண்பாட் டையும் வளர்ப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் ஊக்கம் அளிக்கப்பட்டது. புதிய விஞ்ஞானம், புதிய விவசாயம், புதிய தொழில், புதியவாழ்க்கை ஆகியவற்றை வளர்க்க ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு தேசிய இன மும், தன் பலத்தையும் வருங்காலத்தில் ஒரு பெரிய நாட் டினராக வளர்வதற்குரிய அம்சங்களையும், தெரிந்து கொண்டது. போர், கொள்ளை, இனப் பகைமை இவற்றை விடுத்து, இலக்கியம், இசை, கவிதை. விஞ்ஞானம், விவ

சாயம், உழைப்பு இவை போன்ற நற் செயல்களை மேற் கொள்ளவேண்டும் என்பதை, ஒவ்வொரு தேசிய இனமும் உணர்ந்தது. இக்கொள்கை தகுந்த பலன் அளித்தது. ஜார் மன்னனின் அடக்குமுறைக்கு ஆளாகி அவதிப்பட் டிருந்த காலத்திலும், தங்கள் பரம்பரையும் பண்பாட் டையும் பாதுகாத்து வந்த உக்ரைனியர்கள்கூட, சோவி யத் ஆட்சியில் தம் தேசிய இன உணர்ச்சியும் பெருமையும் அதிகரிப்பதாக உணர்ந்தார்கள்.

மூன்றாவது ஜார் ஆட்சியில் மிருகத்தனமான அடக்கு முறைக்குப் பயந்து, நாலா பக்கமும் சிதறிக் கிடந்த மக்களின் பண்பாடும், பரம்பரையும் முக்கியமாகப் பாதுகாக்கப்பட்டன. அழிந்து கொண்டிருந்த சில தேசிய இனங்களும் பாதுகாக்கப்பட்டன. அப்படிப் பாதுகாக்க முன் வந்தது, அந்த தேசிய இனங்களின் தலைவர்கள் அல்ல, ரஷ்யர்களே. முன்னால் தங்களைத் தவிர, பிற இனத்தாரை அடக்கி ஒடுக்கின அதே ரஷ்யர்கள்தான், பிற தேசிய இனத்தினருக்கும் பாதுகாப்பளிக்க முனைந்த னர். ஒடுக்கப் பட்டிருந்தவர்கள் மெல்ல மெல்ல தலை நிமிர்ந்தார்கள். தங்கள் பண்பாட்டை மீண்டும் வளர்க்க முன் வந்தார்கள். சோவியத் யூனியனில் உள்ள மற்ற தேசிய் இனத்தாரைப் போல், தாங்களும் வரவேற்கப் படுவதைக் கண்டார்கள். இவ்வுண்மை, ஆர்மீனியர்களின் விஷயத்தில் மிகப் பொருத்தம். கடந்த நூற்றாண்டுக ளில், மற்ற தேசிய இனங்களைக் காட்டிலும் அவர்கள் மிகுந்த கஷ்ட நஷ்டத்திற்கு உள்ளானவர்கள். கடைசி மனிதன் வரை வாளுக்கிரையாகி, ஆர்மீனியர் இனமே மறைந்து விட்டது என்று துருக்கியர்கள் பெருமை அடித் துக்கொண்டார்கள். ஆனால், இன்றைக்கு ஆர்மீனியர் களுக்காகத் தனி குடியரசு இருக்கிறது. பெருமைப்படத்

தகுந்த முறையில் அக்குடியரசு வேகமாக முன்னேறுகிறது.

நான்காவது, ஜார் காலத்தில் மிருகங்களைப் போல் வேட்டையாடப்பட்ட புராதன மக்களை, சோவியத் மொழி நிபுணர்கள் தேடிச் சென்று, அவர்களுடைய பேச்சு வழக்கை ஆராய்ந்து அவர்களுக்கு எழுத்து வகுத்தார்கள். அவர்கள் முதன் முதலில் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டதுடன், தங்கள் கிராமியப் பாடல்களையும் கதைகளையும் தங்களது எழுத்தில் வடித்தார்கள். இப்பொழுது அத்தகைய தேசிய இனத்தின் பாடல்களும் கதைகளும் சோவியத் யூனியன் முழுவதுமே பரவி இருக்கின்றன. இதைச் செய்ததற்காக, சோவியத் விஞ்ஞானிகள் மிகப் பெருமை கொள்கின்றனர். ஏனென்றால், புராதன மக்களுக்கு எழுத்தும், மொழியும், நூல்களும், பள்ளிக்கூடங்களும், சுதந்திரமும் இருந்தால், அவர்கள் வெகு விரைவில் முற்போக்குள்ள மக்களின் நிலைக்கு உயரமுடியும் என்ற உண்மையை அது நிரூபித்தது.

இந் நான்கு காரியங்களும் ஒரு பொது நோக்குடன் செய்யப்படுகின்றன. சோவியத் யூனியனிலுள்ள ஒவ்வொரு தேசிய இனத்தையும் பாதுகாத்து ஊக்கம் அளிப்பதுதான் அப்பொது நோக்கு. ஏதாவது ஒரு தேசிய இனத்தின் பெருமை அதிகரித்து, உயர்ந்த தேசிய இனம் என்ற தவறான நிலைமைக்கு மாறிவிடும் என்று சோவியத் அதிகாரிகள் அச்சமுறவில்லையா?

அத்தகைய அச்சத்திற்கு இடமில்லை. ஏனென்றால், மனித சமுதாயத்தைப்பற்றி, விஞ்ஞானம் கண்டறிந்த உண்மையைக் கடைப்பிடித்து, சோவியத் அதிகாரிகள் செயலாற்றுகிறார்கள். இனக் குரோதம் இயற்கைக்கு மாறானது. அது மக்களின் விரோதிகளால்

கிளப்பி விடப்பட்டது. விரோதிகள் அழிந்து போன தால், அத்தகைய பகைமை மீண்டும் தலை காட்ட இட மில்லை என்ற உண்மையை சோவியத் ஆட்சியாளர் நன்கு அறிவர். புதிய விஞ்ஞானத்தில் நம்பிக்கை கொண்ட சர்க்கார், கவிஞர் செவ்சென்கோவின் "புதிய சுதந்திரக் குடும்பம்" பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரே குடும்பம் என்ற கனவை விரிந்த அளவில் நிறைவேற்ற முடிந்தது.

சில வேளைகளில், வார்த்தைகளைவிட புள்ளி விவ ரங்கள் ஒரு விஷயத்தைத் தெளிவாக்குகின்றன. இப் பொழுது நூல்கள் 74 சோவியத் மொழிகளிலும், பத்திரி கைகள் 71 மொழிகளிலும், சஞ்சிகைகள் 61 மொழிகளி லும் வெளியாகின்றன. புரட்சிக்குப் பின், சோவியத் நிபுணர்கள் 40 தேசிய இனங்களின் மொழிகளுக்கு வரி வடிவம் அமைத்திருக்கிறார்கள். ஷேக்ஸ்பியர் நாடகங் கள் 17 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகி இருக்கின்றன. செவ்சென்கோவின் கவிகள் மால்டேவி யன், டாட்சிக் போன்ற சிறு பான்மையோர் மொழிகளில் கூட வெளி வந்திருக்கின்றன.

சோவியத் யூனியனிலுள்ள ஒவ்வொரு தேசிய இன மும் ஜீவ சக்தியுடன் வாழ்கிறது ஆயினும் தேசிய இனங் கள் அனைத்தும் ஒரு குடும்பம் போல் வலுவாகப் பிணைக் கப்பட்டிருக்கின்றன.

தமது நாட்டையும் சோவியத் யூனியனையும் பாது காக்கவேண்டும் என்ற உறுதியும், புது வாழ்வில் ஆர்வ மும், சோவியத் குடியரசுகளை ஒன்றுகப் பிணைத்திருக்கின் றன. புதிய சோவியத் வாழ்வு ஒவ்வொரு இனத்திற்கும் சுதந்திரம் அளித்திருக்கிறது. தேசிய இனப் பண்பையும், பெருமையையும் மீட்டுக் கொடுத்திருக்கிறது. அதே சம

யத்தில், கடந்த காலத்தின் அடக்குமுறைச் சின்னங்கள் அனைத்தையும் அது அழித்து விட்டது.

போரின் மத்தியில் செவ்சென்கோவுக்கு மரியாதை செலுத்துவதற்காக, உக்ரைன் விஞ்ஞானிகள் ஏன் கூடினர் என்பதை,நீங்கள் இப்பொழுது அறிந்துகொள்ளமுடியும். ''தேசியம்'' ''தேசிய இனம்'' என்ற இரு வார்த்தைகளின் பொருள்களை அக்கவிஞர் தெளிவாக அறிந்திருந்தார்.

''தேசியம்'' என்பது தவருன கொள்கை. அது இனக் குரோதத்தைக் கிளப்பிவிட்டு, மனிதனை மிருகமாக்குகிறது அத் தொத்து நோய் பாசிஸ வெறியர்களால் பரப்பப்பட்டது. அது ஒருவறுக்கப்படவேண்டியது.

'தேசிய இனம்'' பெருமைப்படத் தகுந்தது. அது விலை மதிப்பற்ற நற்சாட்சிப் பத்திரம். அது ஒவ்வொரு மனிதனுக்கும், அவனுடைய பெற்றோர்களாலும் முன்னோர்களாலும் கொடுக்கப்பட்டது. அது பாதுகாத்தற்குரியது.

எல்லா தேசிய இனங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்ற **மனித சமுதாயம்**, ஒரு ''பெரிய குடும்பமாக'' சமாதானத்துடன் வாழ முடியும் என்ற உண்மையை கவிஞர் செவ்சென்கோ கண்டார். நூறுண்டுகளுக்குப்பின், அவர் சொன்னது உண்மை என்பதாக சோவியத் விஞ்ஞானிகளும், சர்க்கார் தலைவர்களும் நிரூபித்தார்கள்.

இன்றைக்கு சோவியத் யூனியனிலுள்ள எல்லா தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களும் ஒன்று பட்டு ஒற்றுமை கீதம் பாடுகிறார்கள்:

"மாண்புடன் உயர்ந்த மாஸ்கோ முதலா
இலங்கும் தொலிவில் எல்லை வரையும்
அலைகடல் நமது ஆர்டிக் முதலா
சமர்க் கந்தெல்லை வரையும் சமத்துவ
சுதந்திரம் நிலவுநம் தந்தையர் நாட்டில்
நிமிர்ந்து உலாவும் மன்னர் நாமே!"

அன்பான வார்த்தைகளால் மட்டுமின்றி, கம்பீர மிக்க பாடல்களாலும் மக்கள் செவ்சென்கோவை நினைவில் வைத்திருக்கிறார்கள். அவருடைய சமாதியை நாஜி மிருகங்கள் உடைத்தெறிந்ததினால் நஷ்டமில்லை. கவிஞரின் கொள்கைகள் அழிக்க முடியாதவை. பாசிஸ வெறியர்களைத் தங்களுடைய நாட்டை விட்டு வெளியே துரத்தியடித்து, மனித சமுதாயம் முழுமைக்கும், புனிதமான ஆலயமாக விளங்கும் முறையில், நீப்பர் நதிக்கரையில் செவ்சென்கோவின் சமாதியை மீண்டும் கட்டுவதென, மக்களின் சார்பாக, உக்ரைன் விஞ்ஞானிகள் சபதம் எடுத்தனர்.

"புதிய சுதந்திரக் குடும்பம்" என்று கவிஞர் கண்ட கனவு முற்றிலும் உண்மையாயிற்று, என்பதை ஒரு சிறந்த உதாரணத்தினால் விளக்கிக் கூறலாம். ஆனி ஆந்ரெயேவ் உக்ரைனிலுள்ள ஒரு விமானி. பத்திரிகைகளில் அவன் பெயர் அடிக்கடி வருகிறது. அவனது பெற்றோரும், சகோதர சகோதரிகளும் ஹிட்லர் மிருகங்களால் கொலை செய்யப்பட்ட கொடுமையைப் பற்றி அவன் தன் சகோதரனுக்குக் கடிதம் எழுதினான். அக்கடிதம் மிக உருக்கமாக இருந்ததால், அதை ரேடியோவில்படிக்கும்படி சகோதரன் கொடுத்தான். லட்சக்கணக்கான மக்கள் அதைக் கேட்டார்கள். போர் முனையிலிருந்து வருகின்ற

கடிதங்களை, நம் நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் கேட்பதைப் போன்று, அக் கடிதத்தையும் வாசிக்கக் கேட்டார்கள்.

ஆந்த்ரெயேவின் கடிதம் ரேடியோவில் வாசிக்கப்பட்ட பிறகு, ஆச்சரியப்படத் தகுந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. எவ்வித தூண்டுதலும் இல்லாமலே நூற்றுக்கணக்கான மக்கள், அவனுடைய தந்தையின் ஸ்தானத்தில் இருக்க இசைந்து அவ்வாலிபனுக்குக் கடிதம் எழுதினர். நூற்றுக்கணக்கான பெண்கள் தாயார் ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ள முன் வந்தனர். நூற்றுக்கணக்கான சிறுமிகள் சகோதரிகளாகவும், சிறுவர்கள் அவனுடைய சகோதரர்களாகவும் இருக்க இசைந்து, ஆந்த்ரெயேவ் என்ற அந்த இளைஞனுக்குக் கடிதம் எழுதினர். போருக்குப் பின் ஆந்த்ரெயேவ், தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும் என்று அனைவரும் விரும்பினர். ஒருவர் எழுதியது மற்றொருவருக்குத் தெரியாது.

அவை அன்பு நிறைந்த கடிதங்களாயிருந்ததால், ஆந்த்ரெயேவ் அவற்றை அரசாங்க சரித்திரக் கண்காட்சி சாலையில் ஒப்படைத்தான். அவைகளை இன்றும் அங்கே காணலாம்.

ஆந்த்ரெயேவின் "புதிய சுதந்திரக் குடும்பங்களிலிருந்து" ஆயிரம் கடிதங்கள் அவனுக்குக் கிடைத்தன.

13. சோவியத் பெண்களும் திருமணமும்.

நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து, ஒழுக்கம் என்ற பிரச்னை தீர்க்கப்படாமல் இருந்து வந்திருக்கிறது. ஒரேயடியாக ஒழுக்கங் கெட்ட நாடுகளும், ஒரேயடியாக ஒழுக்கத்தை மிகைப்படுத்திய நாடுகளும் உண்டு. பெண்களை, வழிபடுகின்ற மதங்களும், பெண்களை சாத்தானின் படைப்பு என்று நிந்திக்கின்ற மதங்களும் இருக்கின்றன. "இனப் பிரச்னை" போன்று; இதுவும் ஒரு சிக்கலான பிரச்னையாகிவிட்டது.

இனப் பிரச்னைக்கு இயற்கையில் இடமில்லை என்பது விஞ்ஞான ஆராய்ச்சியால் கண்டறிந்ததைப் போல், "பெண்கள் பிரச்னை" என்று ஒன்று இல்லை என்பது விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவு. சோவியத் யூனியன் அமைக்கப்பட்டவுடன், பெண்கள் சம்பந்தமான ஒழுக்கம், ஒழுக்கக் கேடு ஆகியவற்றைப்பற்றி, விஞ்ஞானிகள் முடிவு செய்ய முனைந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஐக்ய அமெரிக்காவில், சோவியத் தூதராயிருந்த லிட்வினுபின் மனைவி சோவியத் நாட்டில் ஏற்பட்ட மாறுதலைக் குறித்துக் கூறியதைக் கவனிப்போம். ஸ்ரீமதி லிட்வினுப் வாஷிங்டன் போய்ச் சேர்ந்த சிறிது காலத்திற்குப்

பின், பெண்களின் தேசிய கிளப் ஆதரவில் பேசினார். அங்கு நடைபெறும் விருந்துகள் மிக ஆடம்பரமானவை. அதிக செல்வாக்குள்ள பெண்கள், அவற்றில் கலந்து கொள்வர். அக்கூட்டத்தில் லிட்வினுப் ஒரு வெடி குண்டு எறிந்தார்.

அவருடைய பேச்சை நியூயார்க்டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருந்தது: 'இக்கூட்டத்திற்கு வருகிற பெண்கள் இன்னரின் இனிய மனைவி என்று அறிமுகம் செய்யப் படுகிறார்கள். நானும் அப்படியே அறிமுகம் செய்யப்பட்டேன். ரஷ்யாவில் இத்தகைய வழக்கம் கிடையாது. 'இனிய ஜனங்கள்' என்று சொல்லப்படுகிறவர்கள் அங்கில்லை. நான் ஒரு அதிகாரியின் மனைவி என்பதற்காக, என் பேச்சைக் கேட்க எவரும் வரமாட்டார்கள். சோவியத் பெண் தனிப் பெருமை பெற்றவள். தன் தகுதியால் அவள் புகழ் பெறுகிறாள், அவளுடைய கணவனின் புகழால் அவள் பெருமை அடைவதில்லை.''

ஆண்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்கிறோம் என்று கர்வம் கொண்டிருந்த அமெரிக்கப் பெண்கள், லிட்வினுபின் பேச்சைக் கேட்டதும், திடுக்கிட்டனர். நம், நாடுகளின் ''பெண்களின் சுதந்திரமும் சமத்துவமும்'' அவர் தொட்டமாத்திரத்தில், சரிந்து விழுந்தன. ஆண் பெண் சமத்துவத்தைப் பற்றி, நாம் எவ்வளவு பேசிய போதிலும் சரி, அது வெறும் பகட்டுத்தான். நமது பெண்களின் பிரச்னைக்கு அடிப்படையாயிருப்பது ஏற்றத் தாழ்வு.

இந்த ஏற்றத்தாழ்வின் விளைவுகளை, வெகுகாலத் திற்கு முன்பே, ரஷ்ய ஜனநாயகவாதியான் சேர்னி செவ்ஸ்கி குறிப்பிட்டிருக்கிறார். அவர் சொன்னதாவது: ''எத்தகைய துருவிப் பார்க்கும் மனதை பெண் இனத்

திற்கு இயற்கை அளித்திருக்கிறது! இந்த ஆழமான மனம் சமுதாயத்திற்குப் பயன்படாமல் இருக்கிறது. ஏனெனில், சமுதாயம் அதை இகழ்கிறது, நசுக்குகிறது. பெண் மனம் இகழப்படாமலும், அமுக்கப்படாமலும் பயன்படுத்தப் பட்டால், மனித சமுதாயத்தின் முன்னேற்றம், இன்னும் பத்தமடங்கு வேகமாக நடைபெறும்."

"பெண்ணின் உறைவிடம் அடுக்களை முதல் வாசல் வரை" என பழைய ரஷ்யாவில் ஒரு பழமொழி உண்டு.

புரட்சி இதைத் தகர்த்தெறிந்தது. பெண்களின் பிரச்னையை, சோவியத் நாடு; புதிய விஞ்ஞானத்தினிடம் ஒப்படைத்தது. ஆண்களைவிட பெண்கள் கீழ்த்தரமான மனம் உள்ளவர்களா? இல்லை. அப்படியானால், சமூக வாழ்வில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் உண்டா? உண்டு என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள்.

அன்றாட வாழ்வில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள வித்தியாசத்தில் ரகசியம் ஒன்றுமில்லை. பெண்கள் பிரச்னையைப்பற்றி இதுவரை வெளிவந்த குப்பைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, சோவியத் விஞ்ஞானிகள், இவ்வித்தியாசத்தின் மூலகாரணத்தை ஆராயத் தொடங்கினர்.

ஆண், குழந்தை பெறுவதில்லை; பெண், குழந்தை பெறுகிறாள். கர்ப்பமும் பிள்ளைப்பேறும். பெண்கள் ஆண்களுடன் எதார்த்தமான சமத்துவம் அடைவதைத் தடை செய்கிறது. ஆனால், இது ஒரு தடையாயிருக்கவேண்டியதில்லை. தற்கால சமுதாயத்தில் பெண்கள் எதார்த்தமான சுதந்திரம் அடைவது சாத்தியம்."

பெண்கள் எதார்த்தமான சுதந்திரம்பெற இயலும் என்று சோவியத் விஞ்ஞானிகள் கூறுவதின் பொருள்

யாது? ஒரு பெண், தன்து கணவன் குழந்தை ஆகியவர்களு டன் வாழும் சிறந்த உரிமையும், நாட்டின் நன்மைக்காகப் பணியாற்றும் உயர்ந்த உரிமையும், ஒருங்கே பெற வாய்ப்பு இருக்கவேண்டும்.

வீட்டிலேயே வாழ்ந்து குடும்பத்தைப் பெருக்குதல் அல்லது தொழிலில் ஈடுபட்டுக் குழந்தை பெறுதிருத்தல் ஆகிய இவ்விரு நிலைமைகளில் எது வேண்டும் என்று சோவியத் பெண்களைக் கேட்கவில்லை. அவர்கள் மணம் செய்து கொண்டு, குழந்தைகளைப் பெற்று குடும்பத்தை நடத்தி, தொழிலும் செய்யலாம் என்று அறிவிக்கப்பட் டது.

கர்ப்பத்தடை சோவியத் பெண்களை விடுவிக்க வில்லை. புதிய சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டும் பணி யில் பங்கு எடுத்துக்கொள்ளும் உரிமையும், தாய்மை என் னும் உரிமையுந்தான், சோவியத் பெண்களை விடுவித்தன. இவை நிறைவேற்றப்பட்ட விதம்:

(1) எல்லாப் பெண்களுக்கும் வேலை உத்தரவாதம் செய்யப்பட்டது.

(2) ஒவ்வொரு பெண்ணுக்கும் பிரசவ வசதிகள் இலவசமாகச் செய்யப்பட்டன.

(3) பிரசவத்திற்கு முன்னும் பின்னும், வேலை செய்யாத காலத்திற்கு அவர்களுக்கு முழுச்சம்பளம் கொடுக்கப்பட்டது.

(4) தன் குடும்பத்தின் நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் வேலை செய்வது தனிப் பெருமை என்ற

உண்மை எல்லாப் பெண்களுக்கும் குறிப்பாக இளம் பெண்களுக்கும் போதிக்கப்பட்டது.

"பெண்களின் விடுதலை" சம்பந்தமான கொள்கையை சோவியத் யூனியன் வெளியிட்டதும், உலகில் கோபம் பொங்கி எழுந்தது, உங்களுக்கு நினைவிருக்கலாம். இதற்குக் காரணம் கண்டுபிடிப்பது கடினமல்ல. இனப் பகைமையை நிரந்தரமாக்க விரும்பிய அயோக்கியர்கள் தான் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற கொள்கையை ஆதரித்தனர். பாசிஸத்தின் அடிப்படை நோக்கம், மனித சமுதாயத்தின் சுதந்திரத்தை அழிப்பதே. இக்கொள்கையை நிறைவேற்றுவதில் முதல் படி, பெண்களின் சுதந்திரத்தைப் பறிப்பது. ஜெர்மனியிலும், இத்தாலியிலும் பெண்கள் மிக இழிவாக நடத்தப்பட்டார்கள். யுத்த தேவதைக்குப் பலியிடுவதற்காக மனிதர்களை உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களாகப் பெண்கள் கருதப்பட்டனர். வாலிபர்களின் ஒழுக்கம் சீர்குலைந்தது. நாஜிகளும் பாசிஸ்டுகளும், திருமணத்தின் புனிதத் தன்மையை ஏளனம் செய்தார்கள். குடும்பப் பராமரிப்பும் அன்பும் இல்லாமல், ஜெர்மன் அரசாங்கமும் இத்தாலிய அரசாங்கமும் பல குழந்தைகளை வளர்த்து வந்தன. பெண்கள், சுதந்திரத்தைப் பறிகொடுத்து நின்றனர். இம்முறையால் கொடியவர்கள் குடும்பத்தைச் சீர்குலைத்தனர். சிறுவர்களையும் பெரியவர்களையும் மிலேச்சர்களாக்கினர். வாலிபர்களைப் படைதிரட்டி மனிதப் பண்பு இல்லாதவர்களாக்கினர்.

இனி குடும்ப வாழ்க்கையைக் கவனிப்போம். சோவியத் விவாக ரத்துச் சட்டதிட்டங்களைப்பற்றிப் பல வாறுகச் சொல்லப்படுகிறது. விவாகப் பதிவு காரியாலயத்திற்குப் போய் விவாக ரத்து செய்துகொண்டால்

போதும். செலவு மிகக் குறைவு. ஒரு ஆண் அல்லது பெண் தன் மனைவி அல்லது கணவனை விலக்கிவிடலாம். கோர்ட்டுச் செலவு யாதொன்றும் இல்லை.

ஆனால், நடைமுறையில் விஷயம் அவ்வளவு எளிதன்று. முதலாவது, குழந்தைகளின் பிரச்னை. இரண்டாவது, சோவியத் ஒழுக்கம்.

ரஷ்யாவில் குழந்தைகளுக்காக என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். குழந்தையின் நலனைக் கவனித்தே, விவாகத்தையும் விவாக ரத்தையும், சோவியத் சர்க்கார் தீர்மானிக்கிறது. பொருத்தமற்ற விவாகங்கள், குழந்தைகளின் நலனைப் பாதிக்கும் என்று மனோதத்துவ நிபுணர்கள் அடிக்கடி எச்சரித்திருக்கிறார்கள். காதலற்ற பெற்றோர் பிரியாதிருந்தால், குழந்தைகளின் நிலைமை வேதனை நிறைந்ததாகி விடும்.

குழந்தைகளின் நலனை அடிப்படையாகக் கொண்டு, சோவியத் விவாகரத்துக் கொள்கை வகுக்கப் பட்டிருக்கிறது. தம்பதிகள் ஒருமனப்பட்டு வாழ முடியவில்லையானால், அவர்களுடைய விவாக ரத்தை எதுவும் தடுக்கக் கூடாது. குழந்தைகளின் வாழ்க்கை சீர்குலைந்து போகாமல், விவாகரத்து பாதுகாக்கும்.

சோவியத் ஒழுக்கம் எங்கிலியில் இருக்கிறது? சோவியத் விவாகரத்துக் கொள்கையை நிந்தித்தவர்கள், அது ஒழுக்கக் குறைவையும் கேடுகளையும் பயக்கும் என்றும் திருமணத்தின் புனிதத் தன்மையையும் குடும்பத்தையும் சீர்குலைக்கும் என்றும் பலவருஷங்களுக்கு முன்னமே கூறினர். பிரச்சாரத்தினால் அவர்கள் உண்மையை மறைத்தார்கள். ஆனால், சோவியத் விவாகரத்துக்

கொள்கை, ஒழுக்கக் குறைவையும் கேடுகளையும் தவிர்க்கும் நோக்குடன்தான் வகுக்கப்பட்டது. இதுவே உண்மை.

ஒழுக்கக் கேட்டிற்கும் விபசாரத்திற்கும் உரிய காரணங்களை விவாதிப்பது வீண். ஐயாயிரம் ஆண்டுகளாக விவாதம் நடந்துகொண்டுதான் இருக்கிறது! ஆனால் இவ்விஷயம் சோவியத் யூனியனில் விஞ்ஞானிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் அதற்குப் பரிகாரம் கண்டார்கள். பேச்சுக்குப் பதில் செயலாற்ற முயன்றார்கள். இருபது ஆண்டுகளாக நடந்த பரிசோதனைக்குப் பின், செயல்களே அவ்வுண்மைக்குச் சான்றுகின்றன.

நெடுங்காலப் பிரச்னையான விபசாரத்தையும், வெட்டை, மேகம் போன்ற கொடிய நோய்களையும், போர் நமது நாடுகளில் பரவச்செய்து விட்டது. இவை திடுக்கிடக்கூடிய அளவுக்குப் பெருகிவருகின்றன. அவற்றைத் தடுக்க நாம் என்ன செய்திருக்கிறோம்? மேகம், வெட்டை போன்ற கொடிய வியாதிகள் மிக வேகமாகப் பெருகி வருகின்றன.

சோவியத் யூனியனில் விபசாரம் இல்லை என்று அங்குள்ள நமது நிருபர்கள் அறிவிக்கிறார்கள். ஜார் காலத்தில் விபசாரத்தையே தொழிலாகக்கொண்ட பெண்கள் எண்ணற்றவர் இருந்தனர். உலகிலேயே ரஷ்ய பட்டணங்கள்தான் மிக ஒழுக்கக்கேடு உள்ளவைகளாக இருந்தன. இன்றைக்கு அந்நிலைமை மாறிவிட்டது. ஒழுக்கக் குறைக்கும் கேடுகளுக்கும் அளவு கோல் போன்ற கொடிய நோய்கள் அங்கு மிக மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

"செஞ்சேனையும், விமானப்படையும், விபசாரத்தால் வரும் நோய்களின்றி, உடல் வலிமையுடன் இருக்கின்றன. அத்தகைய நோய்களால் பாதிக்கப்படாத வேறு படை உலகில் இல்லை. நான் ஒரு டாக்டர் ஆனபடியால், அது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது," என்று தளகர்த்தர் நார்மன் கூறியதாக, அமெரிக்க நிருபர் குயின்டின் ரெயினல்ஸ் அறிவிக்கிறார்.

ஒழுக்கம் சம்பந்தமாக சோவியத் யூனியன் உலகிற்குப் புதிய கருத்தை அளித்திருக்கிறது. இப்புதிய ஒழுக்கத்தின் அடிப்படை, ஆண் பெண் சமத்துவம்.

விடுதலை பெற்ற ரஷ்யப் பெண்கள் தொழிலை எப்படி வரவேற்றனர் என்று பாருங்கள். ஏன் சோவியத் பெண்கள் இஞ்சினீயர்களாகவும், மாலுமிகளாகவும், இயந்திரத் தொழிலாளிகளாகவும் வேலை செய்கிறார்கள் என்பதை உலகமக்களால் சிறிது காலத்திற்கு முன்வரை புரிந்துகொள்ள முடியவில்லை. அவை பெண்கள் செய்யத்தகாத கடுமையான வேலையாகக் கருதப்பட்டன. ஆனால், போர்க் காலத்தில், ஆண்கள் செய்கிற சாதாரண தொழில்களில் நமது பெண்கள் ஈடுபடுவதை நாம் எதிர்ப்பதில்லை. அத்தகைய வேலை செய்வதில் பெண்களுக்கு விருப்பம் இருந்தபோதிலும், அவர்களின் நிலைமைக்காக நாம் வருந்துகிறோம்.

ரஷ்யாவில், போதிய ஆண்கள் இல்லை என்பதற்காக, பெண்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யவில்லை. எந்த வேலையையும் செய்ய சோவியத் பெண்களுக்கு உரிமை உண்டு. ஒவ்வொரு பெண்ணுக்கும் வேலை உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறது. நாட்டின் நலனுக்காக, சோவியத் பெண், எத்தகைய வேலையையும் செய்ய முன்

வருகிறாள். அதற்காக அவள் பெருமைப் படுகிறாள். அவள் வேலை செய்வதைக் கனவில்கூட இழிவாகக் கருத மாட்டாள். தன் மனைவி லாரி ஓட்டுகிறவள் என்ற காரணத்திற்காக, கணவன் வெட்கமுறுவதில்லை. தொழில் செய்வது உயர்வு. சோவியத் சமுதாயத்தில் சோம்பேறியாயிருப்பதுதான் அவமானம்!

பிறநாடுகளில் காணமுடியாத இவ்வுயரிய மனோபாவம்தான் சோவியத் பெண்களின் விடுதலைக்கு முக்கிய காரணம். காரியாலயம், ஆலை, வயல் ஆகிய இடங்களில் செய்யப்படுகின்ற வேலை அனைத்தும் பெருமை தரும் விஷயமாகக் கருதப்படுகிறது.

பெண்கள் ஒவ்வொரு துறையிலும் முன்னேறுவதற்குரிய வசதிகள் அளிப்பதற்காக எல்லாத் தடைகளும் நீக்கப்பட்டன. சோவியத் பெண்கள், கப்பல் தலைவர்களாகவும், ஆலை நிர்வாகிகளாகவும், சர்க்கார் அதிகாரிகளாகவும் அமர்ந்திருக்கிறார்கள். சோவியத் பெண்கள் ஆண்களைப் போல், சம உரிமை பெற்றிருப்பதினால், விவாகத்தையும் தாய்மையையும் புறக்கணிக்காமல், எத்தகைய உயர் நிலையையும் அடையலாம். ஏன் கூடாது? வேலை செய்ய வேண்டியதிருக்கிறது என்பதற்காக, ஆண்கள் மணம் செய்யாமல் இருக்கிறார்களா? இந்தக் கேள்வி பைத்தியக்காரத்தனமானது என மனிதன் கருதுகிறான். அவ்வாறே சோவியத் பெண்ணும் கருதுகிறாள்.

சோவியத் பெண்கள் படைக்கும், பிற நாடுகளிலுள்ள பெண்கள் படைக்கும் குறிப்பிடத் தகுந்த வித்தியாசம் உண்டு. நமது பெண்கள் படையை, மக்கள் ஏளனம் செய்கிறார்கள். செஞ்சேனையில் உயர் பதவி பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் சோவியத் பெண்கள்

அதில் சேருகிறார்கள். வாலென்டினா கோரிநெவ்ஸ்கயா என்ற பெண் டாக்டர் பிரிகேடியர் பதவி வகிக்கிறாள். அவள் செஞ்சேனை வைத்திய இலாகாவின் இன்ஸ்பெக்டராக இருக்கிறாள்.

நூற்றுக்கணக்கான பெண்கள் விமானிகளாக இருக்கிறார்கள். மேஜர் 'வாலெண்டினா கிரிசொடுபோவா' என்ற பெண் விமானி போரில் புகழ் பெற்றவள். அவள் வெடி குண்டுகளை ஏற்றிச் செல்லுகின்ற விமானங்களை ஓட்டுகிறாள். இத்தகைய வேலை பெண்களைக் கடின சித்தம் உள்ளவர்களாக ஆக்கி விடாதா? என அமெரிக்க நிருபர் ஒருவர் மேஜரைக் கேட்டார்.

"என்னுடைய பெண் விமானிகளில் ஒருத்தி ஆடவருடன் பேச நாணம் அடைகிறாள். அநேகமாக, எல்லாப் பெண்களும் விவாகம் ஆனவர்களே. அவர்களுடைய கணவர்கள் அவர்களைப்பற்றி பெருமை கொள்கிறார்கள்" என மேஜர் பதில் சொன்னாள்.

சோவியத் யூனியனில், பெண்களின் விடுதலை, திருமணத்திற்குப் புது மதிப்புத் தந்தது. அது காதலுக்குச் சுதந்திரம் கொடுத்தது. விவாகரத்தின் எண்ணிக்கையை மிகக் குறைத்தது. விபசாரத்தையும் அதன் காரணமாக உண்டாகும் நோய்களையும் அது அடியோடு ஒழித்துக் கட்டியது.

ரஷ்யாவில் பெண்களின் விடுதலை, மற்றொரு மாறுதலைக் கொண்டு வந்தது. அதனால் குழந்தைகள் விடுதலை பெற்றனர்.

14. விடுதலை பெற்ற குழந்தைகள்.

ரஷ்யக் குழந்தைகளைப் பற்றிச் சில வருஷங்களுக்கு முன், நாம் விநோதமான கட்டுக் கதைகள் கேட்பதுண்டு. மணமுறை மறைந்து வருவதாகவும், லட்சக்கணக்கான ரஷ்யக் குழந்தைகள் ஒழுங்கீனமாகப் பிறந்ததாகவும், அரசாங்கம் குடும்ப முறையை அழித்து விட்டதாகவும் "குழந்தை வளர்ப்புப் பண்ணைகளில்" பெற்றோரின் அன்பும் ஆதரவும் இல்லாமல் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார் என்றும் பறைசாற்றப்பட்டது. குழந்தைகள் சர்க்காரின் பரிபாலன நிலையங்களில் வளர்ந்து வருவதாகவும், படங்களின் மூலம் நமக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால், உண்மை நிலைமை வேறு. ஒவ்வொரு நகரிலும், பெரிய பண்ணைகளிலும், சர்க்காரால் நடத்தப்பட்ட குழந்தைகளின் பராமரிப்பு நிலையங்கள் இருந்தன, என்பது உண்மைதான். அவை இன்று இங்கிலாந்தில் இருக்கின்றன. அவற்றை விட அமெரிக்கா முழுவதும் நாம் ஆரம்பித்து வருகிறோம். எதற்காக? வேலை செய்கிற தாய்மார்களின் குழந்தைகளைக் கவனிப்பதற்காகத்தான். சிறு குழந்தைகளைக் கவனிக்கும் பொறுப்பிலிருந்து, தாய் விடுவிக்கப்படுகிறாள். இதைக்காட்டிலும் முக்கிய விஷயம்

ஒன்று உண்டு. குழந்தைகள், சிசுபரிபாலன நிலையத்தில் பயிற்சிபெற்ற நிபுணர்களின் பராமரிப்பில் இருக்கின்றன. அவர்களின் உடல் நலன் விஞ்ஞான முறைப்படி பாது காக்கப்படுகிறது. நல்ல முறையில் அவர்கள் வளர்க்கப் படுகிறார்கள். நோயினால் பாதிக்கப்பட்டால் உடன் கவ னிக்கப்படுகின்றனர். குழந்தையின் வாழ்க்கை மிகச் சிறந்த முறையில் தொடங்குகிறது.

இத்தகைய சிசுபரிபாலன நிலையங்கள், "குடும்ப வாழ்க்கையை அழித்துவிடுகின்றன" என்று சொல்லுவது அறியாமை அந்நிலையங்கள் தாய்மார்கள் வேலைசெய்கிற இடங்களில் இருப்பதால், குழந்தைகளுக்குப் பால் ஊட்ட வேண்டிய வேளைகளில் தாய்மார்கள், அங்குபோகலாம். வேலை முடிந்ததும், குழந்தைகளை எடுத்துக்கொண்டு தாய் மார்கள் வீட்டுக்குப் போகிறார்கள்.

சிசு பரிபாலன நிலையங்களில் பயிற்சிபெற்ற செவிலிகள் குழந்தைகளைக் கவனிப்பதில் "புரட்சி" ஒன்று மில்லை. நம் நாடுகளில் பணக்காரர்களின் குழந்தைகள் எப்பொழுதும் செவிலிகளிடமே இருக்கின்றன. சில குடும்பங்களில், பெற்றோர் இன்னார் என தெரியமுடியாத நிலைமையில், குழந்தைகள் செவிலிகளால் வளர்க்கப்படு கின்றன. ஆனால், தொழிலாளர் குழந்தைகளை ஒவ்வொரு நாளும் சில மணி நேரம், சோவியத் யூனியன் கவனித்து வந்ததைக் கண்டு, பிற நாடுகளிலுள்ள "பெரிய மனிதர்", "குழந்தைகளின் பண்ணை" என்ற கூக்குரலை எழுப்பினர்.

ஜெர்மன் தாக்குதல் :தொடங்கிய சிறிது காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தினால் குழந்தைகள் விஷயத்தி லும் குடும்ப விஷயத்திலும், சோவியத் கொள்கை மிகத் தெளிவாகியது. குழந்தைகளின் பாதுகாப்புக்கான கூட்டம்

ஒன்றை ரஷ்ய மக்கள் மாஸ்கோவில் கூட்டினர். நாஜிகள் செய்த கொலையினால், ஆயிரக் கணக்கில் அனாதைகளான குழந்தைகளைப் பாதுகாக்கவும்,'' மின்னல் தாக்குதலில் காயமுற்ற சிறுவர்களைக் கவனிக்கவும்தான் அக் கூட்டம் கூட்டப்பட்டது. பயங்கரக் கொடுமைகளைக் கண்டு கண்ணீர் சிந்தும் குழந்தைகளை நாட்டு மக்கள் அனைவரது அன்பினால் அணைத்து ஆதரிப்போம், என்று பெண்களின் பிரதிநிதிகள் கூறினர்.

மக்கள் அனைவரது அன்பினால் என்று சோவியத் பெண்கள் சொன்னதின் கருத்தென்ன? அனாதை விடுதிகளும் அனாதை ஆஸ்பத்திரிகளும் அமைத்து, அனாதை குழந்தைகளைக் கவனிக்கவேண்டும் என்பது அவர்களின் அபிப்பிராயமா? இல்லை. அத்தகைய திட்டங்களை அவர்கள் பலமாக எதிர்த்தனர். ஒவ்வொரு குழந்தையையும் ஒவ்வொரு குடும்பம் எடுத்து வளர்க்கவேண்டும். அதனால் பெற்றோர்களைப் பறி கொடுத்த குழந்தைகளுக்கு அன்பும் ஆறுதலும் கிடைக்கும் என்று அவர்கள் வற்புறுத்தினர்.

பெண்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் அனாதைக் குழந்தைகளை ஏற்றுக்கொள்ள முன் வந்தனர். தங்கள் சகோதர சகோதரிகளைப் போல், தங்களுடன் வாழும்படி சிறு குழந்தைகளும் கடிதம் எழுதினர். அனாதைக் குழந்தைகள் அனைவருக்கும் நல்ல உறைவிடம் கிடைத்தது சோவியத் சர்க்கார் இச்செயலை அங்கீகரித்தது. ''குழந்தைகள் பண்ணை'' என்பதே சோவியத் யூனியனில் கிடையாது. நாஜி ஜெர்மனியில்தான் முறை தவறி பிறந்த குழந்தைகளுக்கு அரசாங்கம் தந்தை ஸ்தானத்தை வகிக்கிறது.

குழந்தைகள் சம்பந்தமான சோவியத் திட்டம் விஞ்ஞானத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது. அனுதை விடுதி போன்ற குழந்தை வளர்ப்பு நிலையங்கள். விஞ்ஞானத்திற்கும் மனித இயற்கைக்கும் முரணானவை. அவை திருப்திகரமாகப் பணியாற்ற முடியாது. ஏனெனில் குழந்தையின் இன்ப வாழ்க்கைக்கு அவசியமான வீடு, அன்பு, குடும்பம் போன்ற சூழ்நிலையை அவை அளிக்க முடியாது.

ரஷ்யாவின் குடும்ப வாழ்க்கை சில விதங்களில் மிகவும் மாறுதல் அடைந்திருக்கிறது என்பது உண்மையே. புதிய விஞ்ஞானத்தின் உதவியால், சர்க்கார் அதிகாரிகள் இக்கொள்கையை வகுத்தனர். ஆயிரக்கணக்கான குழந்தைகள். தங்கள் பெற்றோர்களின் சர்வாதிகாரத்திலும், வறுமையிலும், தேசிய இன குரோதத்திலும், மத வெறியிலும், நோய் நொடியிலும் அவதியுற்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே. சோவியத் அதிகாரிகள், குடும்பத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாத்ததோடு, குழந்தைகளின் விடுதலைக்காகவும், கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள்.

விவசாயிகள், ஆலைத் தொழிலாளர், பெண்கள், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் போன்ற மக்கள் விடுதலையடைந்ததைப் போன்று குழந்தைகளும் விடுதலை பெற்றனர்.

குழந்தைகளது விடுதலை, பள்ளிக்கூடங்களில் தொடங்கியது. குழந்தைப் பருவத்தின் கனவுகளையும், பயங்களையும், ஆசைகளையும் ஆய்ந்தறிந்த மனோதத்துவ நிபுணர்கள், குழந்தைகளின் புதிய சுதந்திரத்தைப் பற்றி, ஆயிரக்கணக்கான உபாத்தியாயர்களுக்கு விரித்துரைத்தார்கள். "நீங்கள் சோவியத் யூனியனின் இளம் பிரஜை

கள். நீங்கள் விடுதலை பெற்றவர்கள். நீங்கள் எவருக்கும் அடிமையல்ல. சோவியத் குழந்தைகள் பயப்பட வேண்டியதில்லை. உங்களுடைய அற்புதமான கனவுகளை நனவாக்க நீங்கள் சுதந்திரம் பெற்றிருக்கிறீர்கள்," என உபாத்தியாயர்கள் குழந்தைகளுக்குப் போதித்தார்கள்.

இது வெற்றுரையல்ல. கிண்டர்கார்ட்டன் முதல் கலாசாலைப் படிப்பு முடிய, எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி வசதி அளிக்கப்பட்டது. சுகாதார வைத்திய வசதிகளும் இலவசமாக அளிக்கப்பட்டன. ஒவ்வொரு குழந்தையும், திறமைக்குத் தகுந்தவாறு முன்னேற வாய்ப்பு அளிக்கப்பட்டது.

திறமையுள்ள ஒரு குழந்தை வாய்ப்பு இல்லாத காரணத்தினால் தனது விருப்பத்தை நிறைவேற்ற முடியாது போனால், அதைப்போல் பரிதாபமான விஷயம் வேறொன்றும் இல்லை. இது அக்குழந்தைக்கு மட்டும் அல்ல, சமுதாயத்திற்கே நஷ்டம். எத்தனையோ குழந்தைகள், இசை மேதை பீட்ஹோவனைகவும், நுண்ணறிவு மிக்க விஞ்ஞானி ஐன்ஸ்டீனைகவும் இன்னும் ஹால்டேனைகவும், பிளாரன்ஸ் நைட்டிங்கேலாகவும் வரமுடியும்! வாய்ப்பு இன்மையால், அவர்கள் குமாஸ்தாக்களாகவும், பண்ணை வேலைக்காரர்களாகவும், தங்கள் வாழ் நாள் முழுதும் வேலை செய்ய நேரிடுகிறது.

ரஷ்யக் குழந்தை தனது கனவை நிறைவேற்ற சுதந்திரமும், வாய்ப்பும் பெற்றிருக்கிறது. சோவியத் அதிகாரிகள் திறமையுள்ள குழந்தைகளைத் தேடிப்பிடித்து, அவர்கள் முன்னேற எல்லா வசதிகளையும் செய்துகொடுத்திருக்கிறார்கள். சுரங்கத் தொழிலாளியின் குழந்தைக்கும், பேராசிரியரின் குழந்தைக்கும், விமானி, விவசாயி, டாக்

டர் ஆபியோரின் குழந்தைகளுக்கும் வாய்ப்பு அளிப்பதில் எவ்வித பட்சபாதமும் கிடையாது. குழந்தைதான் முக்கியம். எவருடைய குழந்தையாயினும் சரி.

"அறிவு, மக்களின் நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்ப, உப்பைப் போல், சிறிய அளவில் புகட்டப்பட்டால் தான் பயன்படும்; எல்லாப் பிள்ளைகளும் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வது கெடுதல் என்பது ஜார் மன்னன் முதலாவது அலெக்ஸாண்டரின், கல்வி மந்திரியின் அபிப்பிராயம்.

"அறிவாளிகள்—இவ்வார்த்தை எவ்வளவு அருவருப்பைத் தருகிறது!" என்று ஜார் அரசன் அடிக்கடி சொல்லுவது வழக்கம்.

இக்கொள்கையைப் பின்பற்றி, பழைய ரஷ்யாவைக் கல்வி வாசனையற்றதாக வைத்திருந்தார்கள். ஜார் மன்னன் ஆட்சியில் இருந்த காலத்தில், 850 பத்திரிகைகள் வெளியாயின. இன்றைக்கு 9250 பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றின் வாசகர்கள் 38,000,000. 1913–ல், ஜார் ஆட்சியில், 87,000,000 நூல்கள் அச்சாயின. தற்போது, ஒவ்வொரு வருஷமும், 600,000,000க்கும் அதிகமான புத்தகங்கள் அச்சாகின்றன.

புதிய ரஷ்யாவில் "வர்க்கங்கள்" இல்லை. ஆனால், தனிச் சலுகைபெறும் ஒரே ஒரு வர்க்கம் உண்டு. குழந்தைகள்தான் அவ்வர்க்கம்.

சோவியத் குழந்தைகளின் கல்வி முறைக்கும், முதலாளித்துவ நாடுகளின் கல்வி முறைக்கும், மிகுந்த வித்தியாசம் உண்டு. முதலாளித்துவ நாடுகளில், குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற புத்தகங்களைப் பற்றியும்

விளையாட்டுகளைப் பற்றியும் சமீப காலங்களில் எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. சிறந்த எழுத்தாளர்களும், கலைஞர்களும் குழந்தைகளுக்காக யாதொன்றும் செய்வதில்லை. ஏனென்றால், "குழந்தைகளின் சந்தை"யில் அதிக பணம் கிடைப்பதில்லை. ஒரு கதைக்கு இரண்டு அல்லது மூன்று டாலர்கள்தான் குழந்தைகளின் சஞ்சிகைகள் தருகின்றன. நான் இரண்டு நாட்களாக எழுதிய கதைக்கு முக்கால் டாலரே கிடைத்தது. ஹாலிவுட்டிலும் நாடக மேடையிலும் இதே நிலைமைதான். குழந்தைகளுக்காக நாடகங்களும் படங்களும் நம் நாட்டில் இல்லையென்றே சொல்லலாம். குழந்தைகளுக்காக நடிக்க, புகழ்பெற்ற நட்சத்திரங்கள் முன் வருவதில்லை. விஞ்ஞானத்திலும் இப்படித்தான். குழந்தைகளுக்காக எழுதுகிற பிரிட்டிஷ், அமெரிக்க, கனேடிய விஞ்ஞானி ஒருவரையாவது நீங்கள் குறிப்பிட முடியுமா?

ஆனால், சோவியத் யூனியனில், முதல்தரமான கலைஞர்களும், ஆசிரியர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும், இசை வாணர்களும், பாடகர்களும், நடிகர்களும், விஞ்ஞானிகளும் தங்கள் திறமையைக் குழந்தைகளுக்காகப் பயன் படுத்துகிறார்கள். அவர்களுக்கு நல்ல ஊதியமும் கிடைக்கிறது. ஆனால், ஊதியம் அவ்வளவு முக்கியமல்ல. குழந்தைகளை மகிழ்விப்பதும், உலகிலுள்ள கவர்ச்சி மிக்க விஷயங்களையும், கடந்த கால வெற்றிகளையும், மகோன்னதமான வருங்கால மனித சமுதாயத்தையும், அவர்களுக்குச் சொல்லி மகிழ்விப்பதுமே, பெருமையும் இன்பமும் பயக்கும் என நிபுணர்கள் கருதுகிறார்கள்.

உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் ஒருவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். காரணம், அவர் குழந்தைகளுக்காக எழுதுவதுதான். எம். ஐவின் எழுதிய

"புதிய ரஷ்யாவின் முதல் பாடப் புத்தகம்", "நூறுயிரம் கேள்விகள்" என்ற புத்தகங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பை நீங்கள் பார்த்திருக்கலாம். எஞ்சினீயர் சோலோடவ்ஸ்கி, நீரில் மூழ்குவோரைப் பற்றி ஒரு விஞ்ஞானக் கதை எழுதினர். மெர்க்குலீவா என்ற விஞ் ஞானி தொழிற்சாலையின் நுண்ணிய அளவுகளைப்பற்றி ஒரு நூல் எழுதினர். இந்நூல்கள் குழந்தைகளுக்காகத் தான். இவற்றை ரஷ்ய இளைஞர்கள் ஆர்வத்துடன் படிக் கிறார்கள். அதனால், விவசாயம், தொழில், விஞ்ஞானம், கலை, இலக்கியம் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் சிறு வயதிலேயே தெரிந்து கொள்கிறார்கள்.

சோவியத் குழந்தைகளின் பொழுது போக்கிற்காக, மிகச் சிறந்த வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. குழந் தைகளுக்கென 183 நாடகக் கொட்டகைகள் இருக்கின் றன. நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான பிற கொட்ட கைகளிலும் வாரத்தில் ஒரு நாள் குழந்தைகளுக்காக ஒதுக் கப்படுகிறது. தலைசிறந்த நடிகர்கள் அவற்றில் நடிக்கிறார் கள், இசைவாணர்கள் பாடுகிறார்கள். இவை கோடை விடுமுறையிலோ, கிறிஸ்துமஸ் பண்டிகையிலோ மட்டும் நடைபெறுவதல்ல. லட்சக்கணக்கான சோவியத் குழந் தைகள், குழந்தைகளுக்கான கலா நிகழ்ச்சிகளை ஒவ்வொரு வாரமும் கண்டு களிக்கின்றார்கள்!

சில குழந்தைகள் விளையாட்டு மைதானங்களிலும் சிங்காரவனங்களிலும் ஆடிப்பாடி ஆனந்தமாயிருக்கும் பொழுது, வேறு சில குழந்தைகள், வேலிக்கு வெளியே ஏங்கி நிற்கும் சோகக் காட்சியை சோவியத் ரஷ்யாவில் காண முடியாது. அங்கே எல்லா குழந்தைகளுக்கும் பொழுது போக்க வசதிகள் உண்டு.

எந்நாட்டிலும் குழந்தைப் பருவத்தை மீண்டும் பெற இயலாது. எனவே, எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் விளையாட்டு, எல்லோருக்கும் சுகாதாரம் என்ற உன்னதமான கொள்கையை, சோவியத் கையாளுகிறது.

வருங்காலம் மகத்தானது. குழந்தைகள், புது வாழ்வை, பரிபூரணமாக அனுபவிக்க வேண்டும். தங்கள் பெற்றோர்களின் செல்வத்தை அனுபவிக்க, அவர்கள் எப்பொழுது சாவார்கள் என்று சோவியத் குழந்தைகள் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. "எங்களுக்குச் சொந்தமான அனைத்தும், ஏன், சோவியத் யூனியனே எங்கள் குழந்தைகளுக்காகத்தான். நாங்கள் அதை இப்பொழுதே அவர்களுக்குக் கொடுக்கிறோம்" என்று ரஷ்யர்கள் சொல்லுகிறார்கள்.

குழந்தைப் பருவம் விரைவில் மறைந்து, வாலிபம் வருகிறது. போருக்கு முன்னிருந்த பயங்கரமான பொருளாதார நெருக்கடியில், நம் நாடுகளில், இளைஞர், 'ஒழிந்து போன தலைமுறை' என்றழைக்கப்பட்டார்கள். ஆனால், ரஷ்யாவிலுள்ள இளம் ஆண் பெண்களின் நிலைமை என்ன?

முக்கியமான இரண்டு விஷயங்கள். பிற நாட்டு இளைஞர்களினின்றும், சோவியத் வாலிபர்களை மாறுபட்டவர்களாகச் செய்திருக்கின்றன. முதலாவது, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பயிற்சி பெற்றதும், வேலையும் கூலியும் பெறுகிறார்கள். இரண்டாவது, திறமையுள்ள ஒவ்வொருவரும் பணத்தைப் பற்றிச் சிறிதும் கவலையின்றி, எத்துறையிலும் பயிற்சி பெறலாம்.

எல்லாக் குழந்தைகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கின்ற அதே சோவியத் கொள்கைதான், வாலிபர்களுக்கும்

வசதி அளிக்கிறது. ஆனால், ஒரு வித்தியாசம் உண்டு. ரஷ்ய வாலிபர்கள் அனைவரையும் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதில்லை. இஞ்சினீயரிங், வைத்தியம், இசை போன்ற உயர்தரக் கலாசாலைகளில், இடங்களை விலைக்கு வாங்க முடியாது. திறமையும் ஊக்கமும் இருந்தால்தான், அவற்றில் இடம் பெற முடியும்.

உல்லாசமாகப் பொழுது போக்கவோ, அல்லது கல்லூரிப் பட்டம் பெறுவது "மேல் வகுப்பு" யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் அழகு என்பதற்கோ, உயர்தரக் கலாசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில்லை. 'கீழ் வகுப்பு" அல்லது கீழ் ஜாதி என்ற காரணத்தால், தகுதியுள்ள எந்த மாணவனையும், எந்தக் கல்வி நிலையமும் தடை செய்யாது. சொந்த நலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும், திறமையுள்ள அனைவருக்கும் பயிற்சி அளிப்பதுதான் சோவியத் உயர்தரக் கல்வியின் நோக்கம்

இந்நோக்கத்தைக் கருத்தில் கொண்டே, சோவியத் யூனியன் வெகுகாலத்திற்கு முன்பே, பல்கலைக் கழக மாணவர்களுக்கும், தொழில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கும், உபகாரச் சம்பளம் கொடுக்கும் முறையைக் கையாண்டது. அம்மாணவர்கள் சமுதாயத்தின் சிறந்த அங்கத்தினர்கள் என்று சோவியத் சர்க்கார் கருதுகிறது. பொருளுதவிக்காக அவர்கள் பெற்றோர்களை எதிர்பார்க்க வேண்டியதில்லை. இளைஞர் படிக்கும் பொழுதே மணம் செய்து கொள்ளலாம். கலாசாலை விடுதிகளிலேயே குடும்பத்தை நடத்தலாம். குழந்தை பிறந்ததும், உதவித் தொகை அதிகமாக்கப்படும். இது நமக்கு விந்தையாகத் தோன்றலாம். ஆனால், அது நியாயமானது. மிகத் திறமையுள்ள மாணவர்கள் நன்கு பயிற்சி பெற, அது சாதகமாயிருக்கிறது. அதே காலத்தில் வேறு நாடுகளில் சாதாரண

மாகக் காணப்படும் மாணவர்களின் ஒழுக்கக் குறையையும் இம்முறை ஒழித்து விடுகிறது.

கோடை காலத்தில் இரண்டு மாதங்களும், குளிர் காலத்தில் இரண்டு வாரங்களும். சோவியத் மாணவர்களுக்கு விடுமுறை. ஓய்வு விடுதிகளிலாவது; சுகாதார நிலையங்களிலாவது, அவர்கள் விடுமுறையைக் கழிக்கலாம். செலவை தொழிற் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றன.

மேல்படிப்பு வசதிகள் வாலிபர்களுக்கு மட்டுமல்ல, வயது வந்தவர்களுக்கும் செய்யப்பட்டிருக்கின்றன. நடுத்தர வயதைத் தாண்டிய லட்சக்கணக்கான மக்கள் புதிய கல்வியின் பயனைப் பெற்றிருக்கிறார்கள். இம்முறையில் பயிற்சி பெற்றவர்களில் சிலர், சோவியத் தொழில் நிபுணர்களாகவும், எஞ்சினீயர்களாகவும், விவசாய நிபுணர்களாகவும், கலை வல்லுனர்களாகவும் விளங்குகிறார்கள். எவ்வளவு வயதான போதிலும், ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும், உதவிச் சம்பளமும் வேறு வசதிகளும் கொடுத்து, அரசாங்கம் ஊக்கம் அளிக்கிறது. அதனால் "படிப்புக்குப் பருவம் என்பது கிடையாது" என்ற சோவியத் பழமொழி நடைமுறையில் சாத்தியமாகி விட்டது.

குழந்தைகளைப்பற்றி இவ்வத்தியாயம் தொடங்கியது. இனி வயோதிகர்களைப்பற்றி சில வார்த்தைகளோடு முடிப்போம். வைத்திய முன்னேற்றத்தினாலும், சுகாதார பாதுகாப்பாலும் சோவியத் மக்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்கிறார்கள். பிற நாடுகளைவிட அங்கே வயோதிகர்கள் தொகை அதிகம். குழந்தைகளுக்கு அடுத்தபடி கவனிக்கப் படுகிறவர்கள் சோவியத் வயோதிகர்கள். உழைத்துக் களைத்து ஓய்வு பெற்றவர்களுக்கு எல்லா வசதிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. முதுமைப் பருவத்தில் எல்

லோருக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுவதால், வறுமை என்ற அச்சம் அவர்களுக்கு இல்லை. நோயாளி களுக்காக, ஓய்வு விடுதிகளும், சுகாதார நிலையங்களும் வனப்பு மிக்க சுற்றுப் புறங்களில் அமைக்கப் பட்டிருக் கின்றன. சோவியத் பூமியில் நிறைந்திருக்கும் வாழ்க்கை விநோதங்களை அனுபவிக்க உடல் உரமும் ஊக்கமும் உள்ள வயோதிகர்களுக்கு வேண்டிய அளவு வாழ்க்கை யும் ஓய்வும் வழங்கப்பட்டிருக்கிறது!

வாழ்க்கை வசதிகள் குழந்தைகளுக்கு இருக்கின் றன என்றால் உழைத்துக் களைத்த உழைப்பாளிகளுக்கு இல்லையா? இக்கேள்விக்கு சோவியத் யூனியனில் இடமே இல்லை. சோவியத் சமுதாயம் முழுமைக்கும் இன்ப வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

15. மத சுதந்திரம்.

போர் தொடங்கிய காலத்திலிருந்து ஆச்சரியமான சில செய்திகள், ரஷ்யாவிலிருந்து வெளிவந்தன. அவற்றில் ஒன்று, 1941-ல், கிறிஸ்துமஸ் நாளில் சோவியத் தேவாலயங்களில் பிரார்த்தனை நடந்தது என்பது. மதப் பற்று உள்ளவர்களுக்கு அது ஆச்சரியமாக இருந்தது. சோவியத் யூனியன் நாஸ்திகக் குடியரசு; அங்குள்ள கோயில்கள் அனைத்தும் மூடப்பட்டன; புரட்சியில் மதக் குருக்கள் கொலை செய்யப்பட்டார்கள், என்றெல்லாம் நாம் கேள்விப்பட்டோம் அல்லவா?

ஓர் ஆண்டு கழிந்தது. ரஷ்யாவில் மத சுதந்திரம் உண்டு என்று உலகை ஏமாற்றவே, சோவியத் சர்க்கார், சில கோயில்களைத் திறந்திருக்கிறது என, சிலர் சொன்னார்கள். 1943 ஜனவரியில், மற்றொரு அதிசயச் செய்தியை நாம் கேட்டோம். ரஷ்ய வைதிக கத்தோலிக்க தேவாலயத்தின் தலைவர் பிஷப் செர்ஜி, செஞ்சேனையின் புதிய டாங்கிப் படைக்கு நிதி திரட்டிய செய்தி, ஜனவரி 5-ல், வெளியாகியது. அவர் தன் சொந்தப் பணத்திலிருந்து, 100000 ரூபிள்கள் அந்நிதிக்காகக் கொடுத்தார். அந்த தேவாலயத்தைச் சேர்ந்த டான்ஸ்காய் என்ற ஞானியின் பெயர் அப்படைக்கு சூட்டப்பட்டது. அவ்வுதவியை

ளற்று, பாதிரிகளுக்கும் கடவுள் நம்பிக்கை உள்ளவர் களுக்கும் ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.

இச்செய்தி பலருக்கு ஆச்சரியம் விளைவித்தது. சோவியத் சர்க்கார் தேவாலயங்களை அழித்துவிட்டு, நாஸ்திகத்தைப் புகுத்திவிட்டது என்ற, பொய் வதந்திகளில் மயங்கியவர்கள் நம்பிவந்தார்கள். இவ்வாறு பழிதூற்றியவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது. தேவாலயங்கள், அரசாங்கத் தொடர்பிலிருந்து கத்தரித்துக்கொண்டு, அவை தம்மைத் தாமே ஆதரித்துக் கொள்ளும்படி மட்டும், சோவியத் சர்க்கார் கட்டளையிட்டது. நாஸ்திக பிரசாரம் செய்ய சோவியத் யூனியனில் உரிமை இருந்தது என்பது உண்மையே. ஆனல், விரோதிகள் மிகைபடுத்திச் சொன்னர்கள். ஆஸ்திக நாஸ்திக பிரசாரங்கள் பல வருஷங்களுக்கு முன்னமேயே நின்றுவிட்டன.

இன்றைய நிலை என்ன? ரஷ்யாவில் மதம் அடக்கி ஒடுக்கப் பட்டிருக்கிறதா? உண்மை யாது?

உண்மை மிகத் தெளிவானது. தங்கள் நாட்டில் மத சுதந்திரம் இருக்கிறதா, இல்லையா என்று சொல்ல, சோவியத் மக்கள்தான் தகுதி உள்ளவர்கள். ஹிட்லரின் மிலேச்சர்கள், பிற நாடுகளில் ஆத்மீகத்தையும், மதத்தையும் அழித்தது போல், ரஷ்யாவிலும் அழித்து விடாமல் பாதுகாக்க, மதப்பற்றுள்ள ரஷ்யர்கள் செஞ்சேனையையும், சோவியத் சர்க்காரையும் ஸ்டாலினையும்தான் நம்பினர்கள்.

நாஜி அரக்கர்களின் குற்றங்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அரசாங்க கமிட்டியில், கீவ் நகரின் ஆர்ச் பிஷப் நிகோலாயை சோவியத் சர்க்கார் நியமித்தது. அவர் சொன்னதாவது: "பாசிஸ வெறியர் ரஷ்ய. பாதிரி

கள் மீது விசேஷ பகைமை கொண்டிருக்கிறார்கள். ரஷ்ய மக்களுக்கும் அவர்களுடைய பொக்கிஷங்களுக்கும் அவர்களுடைய புனித ஆலயங்களுக்கும் ஜெர்மானியர்கள் செய்த தீங்குகளை நாங்கள் மறக்கமாட்டோம்" அவர் எனக்கு அனுப்பிய நீண்ட அறிக்கையில், நாஜிகள் பாதிரிகளுக்கும் கன்னியா ஸ்திரீகளுக்கும் இழைத்த தீமைகளைக் குறிப்பிட்டிருந்தார். அவற்றை அச்சிட்டால் மிக பயங்கரமாக இருக்கும். ஜெர்மன் இராணுவ அதிகாரிகள் தேவாலயங்களுக்குள் நுழைந்து, அங்கு செய்த அட்டூழியங்களுக்கு; அவர் பல உதாரணங்கள் கொடுத்திருந்தார்.

அத்தகைய நீசச் செயல்களின் முழு விபரங்களையும் அவர் சேகரித்துக் கொண்டிருக்கிறார். விசாரணை முடிந்ததும் நியாயம் கிடைக்கும் என சோவியத் சர்க்கார் வாக்குறுதி அளித்தது. சுதந்திரத்தையும் புனிதமான சொத்துக்களையும் பாதுகாக்க சோவியத் யூனியன் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் போன்று வேறெந்த அரசாங்கமும் எடுக்கவில்லை!

சோவியத் யூனியன் மத சுதந்திரத்தை அங்கீகரிப்பதுடன் நின்றுவிடவில்லை. மதாபிமானிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அது போரிடுகிறது, என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. நாஜிகள் இவ்வுண்மையை நன்கறிவர். "அழகான ரஷ்ய தேவாலயங்களை அழிப்பதில், ஹிட்லரின் கொலைகாரர் மகிழ்ச்சி அடைகிறார்கள்" என்று, லெனின்கிராடில் உள்ள ஆர்ச் பிஷப் அலெக்ஸி எழுதினார். தேவாலயங்களை கம்யூனிஸ்டுகள் அழிக்கவில்லை, கைப்பற்றவுமில்லை. பல ஆலயங்கள் அரசாங்கச் செலவில் பாதுகாக்கப்பட்டன. ஆனால், நாஜிகள் அழித்த தேவாலயங்களைப்பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம்.

"ஆயுதம் தாங்கிய வீரர்கள், உண்மைக்காகத் தொண்டாற்றுகிறார்கள் நாட்டுக்காகத் துன்பத்திற்குள்ளாகி, உயிர் துறப்பவர்கள் பரமண்டலத்தை அடைவர்;" என்று, செஞ்சேனையின் வெற்றிக்காகப் பிரார்த்தனை நடத்திய பொழுது, ஆர்ச் பிஷப் அலெக்ஸி கொன்னூர்.

இவ்வுண்மைகளைப் பற்றி, இப்போது குறிப்பிடத் தகுந்தது இதுதான். தேவாலயங்கள் செஞ்சேனைக்குப் பணம் கொடுப்பதைக் கண்டு, ரஷ்ய மக்கள் வியப்படையவில்லை. "இயேசு நாதரின் விரோதி" என்று நம் மதகுருக்களால் அழைக்கப்பட்ட ஸ்டாலின் தேவாலயங்களுக்கும் மதாபிமானிகளுக்கும் நன்றி தெரிவிப்பதில், ரஷ்ய மக்களுக்கு ஆச்சரியமில்லை. நம் நாட்டிலும் பிற நாடுகளிலும்தான்; அது வியப்பைத் தருகிறது. ஏனென்றால், சோவியத் மத உரிமையைப்பற்றி இதர நாடுகளில் அபாண்டமான பொய் பிரச்சாரம் நடத்தப்பட்டிருக்கிறது.

இக்கடிதத்தைப் பாருங்கள். 1943 ஜனவரியில், மாஸ்கோ தேவாலய பாதிரி விலாடிமிர்ஸ்டெப்பனேவ் என்பவரால் ஸ்டாலினுக்கு எழுதப்பட்டது:—

"தற்காலிகமாக நாஜிகள்கைப்பற்றியுள்ள நம்பகுதிகளில், நாஜி வெறியர்கள் நமதுசகோதர சகோதரிகளுக்கு இழைத்த கொடுமைகளைக் கேட்டு, நான் வேதனைப் படுகிறேன். ஜெர்மன் பாசிஸ்டுகளைத் தோற்கடித்து, செஞ்சேனை விரைவில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசையினால் அதற்கு உதவி அளிக்கத் தயாராக இருக்கிறேன். எனது தேவாலய வருமானத்திலிருந்து நான் சேமித்து வைத்திருக்கிற 273000 ரூபிள்களை, அரசாங்க பாங்கியில் போட்டிருக்கிறேன். அன்பார்ந்த ஜோசப் விசாரியானே

விச், நமது முன்னோர்களான நெவ்ஸ்கி, டான்ஸ்காய் என்ற இரு வீரர்களின் பெயரால் இரண்டு போர் விமானங்களைக் கட்ட அத்தொகையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மனித சமுதாயத்திற்குச் சொல்லொணாத் தீங்கிழைத்த ஹிட்லரின் கொலைகாரர்களை இவ்விமானப் படை தண்டிக்கட்டும்''

சோவியத் யூனியனிலுள்ள தேவாலயங்கள் சுதந்திரமாக இருப்பது மட்டுமல்ல, அரசாங்கத்திற்கு முழு ஆதரவும் தருகின்றன. இன்னும் அவை பணம் படைத்ததாகவும் இருக்கின்றன. மாஸ்கோ தேவாலயம், போருக்கு நிதி அளித்திருப்பதைப் போல், பிற நாடுகளில், எத்தனை தேவாலயங்கள் உதவி செய்திருக்கின்றன? ஹிட்லரின் கொடுமையிலிருந்து மனித வர்க்கத்தை விடுவிப்பதற்காக எத்தனை தேவாலயங்கள், தங்கள் சேமிப்பு அனைத்தையும் கொடுத்திருக்கின்றன?

சுருக்கமான இவ்விஷயங்களிலிருந்து ஒரு விஷயம் நன்கு தெளிவாகிறது. ''நாஸ்திகம்'' என்று சாற்றப்பட்ட நாடு, இன்று மத சுதந்திரத்தையும் தர்மத்தையும் பாதுகாக்கும் அரணாகத் திகழ்கிறது.

16. நூதனப் புது உலகம்.

இச்சிறு நூலைப் படித்த பிறகு, சோவியத் யூனியனைப் போல் நூதனமான நாடு உலகில் வேறெதுவும் இல்லை என்ற முடிவுக்கு நீங்கள் வரலாம். சோவியத் வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் அநேகமாய் நாம் கண்டும் கேட்டும் இருக்காத வியப்பாகத் தோன்றுகிறது.

மார்க்கெட் விலையைப் பற்றியோ, பொருள் தேக்கத்தைப் பற்றியோ, சோவியத் விவசாயிக்குக் கவலை இல்லை. அவன் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறான். அதே காலத்தில் விவசாயத்தின் தரத்தையும் உயர்த்துகிறான். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதற்குப் பதில் விவசாயியின் குடும்பத்தினர் உழைப்பு நேரம் குறைகிறது.

இவையெல்லாம் நமக்கு விநோதமாகப்படலாம் ஏனென்றால், நம் நாடுகளில், கோதுமை சாகுபடி ஒரேயடியாகக் குறைக்கப்படுகிறது. மித மிஞ்சிய உற்பத்தியால் பொருள் தேக்கம் என்ற பிரச்னை திடீரென்று கிளம்புகிறது. இயந்திர உதவி அதிகரித்த போதிலும், மனித உழைப்பு மட்டும் குறைவதில்லை.

இது ஒரு விந்தையா?

நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆண் பெண் குழந்தைக்கும் போதுமான சத்துள்ள உணவுப் பொருள்களை, விவசாயப் பண்ணைகள் உற்பத்தி செய்யவேண்டும் என்ற விஷயத்தைப் புரிந்துகொள்வது அவ்வளவு கடினமா? விவசாயப் பண்ணையின் திறமையால், அதிக விளைபொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு, அதன் விளைவால், விவசாயியின் வாழ்க்கை வசதிகள் பெருகி, அவனுடைய வேலை நேரம் குறைவது, விநோதமான விஷயங்களா?

நம் நாடுகளில் வாழ்நாள் முழுதும் போதிய அளவு சாப்பிட சிலரே வசதி பெற்றிருக்கிறார்கள். விலை உயர்ந்த இயந்திரங்களின் உதவியால், உழைப்பை சுலபமாக்கிக் கொள்ளும் வசதியைச் சில விவசாயிகள் பெற்றிருக்கிறார்கள். இக்நிலைமை தவறுகவோ நூதனமாகவோ நமக்குத் தென்படுவதில்லை. இவையெல்லாம் நன்மைக்குத்தான்!

சோவியத் விவசாயத்தின் நூதன அம்சம் இதுதான். சோவியத் பண்ணைகள் கோடிக்கணக்கான மக்களுக்கு ஏராளமான உணவளிக்கின்றன. எல்லா விவசாயிகளுக்கும் சுலபமான வாழ்க்கையை அவை கொடுக்கின்றன.

தங்களுக்குக் கூலி கிடைத்து வந்த நிலக்கரிச் சுரங்கங்களை மூடி, அவற்றை எரித்து, வாயுவாக மாற்ற வந்த எஞ்சினீயர்களை, சோவியத் தொழிலாளர் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். பூமிக்குள் சென்று ஆபத்துக்கு ஆளாக வேண்டியதில்லை என்பதே அவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணம்.

இச்செய்தி நமக்கு விநோதம் மட்டுமல்ல, பைத்தியக்காரத்தனமாகவும் தோன்றும். ஆயிரக்கணக்கான நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர், வேலையிலிருந்து நீக்கப்படுகின்ற காலத்திலும் அவர்கள் ஆனந்தம் அடைவதைப் பாருங்கள்!

சோவியத் தொழிலாளர் பைத்தியக்காரரா? நிலக்கரிவாயு உற்பத்தி ஆகின்ற இடங்களைச் சுற்றி எழுப்பப்படும் பிரம்மாண்டமான ரசாயனத் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கும் என்பதை அவர்கள் நன்கறிவர். சுகாதாரமுள்ள கட்டிடங்களில் தங்களுக்கு வேலை காத்துக் கொண்டிருக்கிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். பூமிக்குள் அபாயகரமான சூழ்நிலையில் வேலை செய்வது அவசியம் இல்லாமல் போய் விட்டது.

நம் நாடுகளில் சுரங்கத் தொழிலாளர் **சிலர்**, குறைந்த ஆபத்து உள்ளதும் அதிக சுகாதாரம் உள்ளதுமான வேலைகளுக்குப் போவதை, பைத்தியக்காரத்தனம் என நாம் கருதுவதில்லை. சோவியத் யூனியனில் **பதினாயிரக்கணக்கான** சுரங்கத் தொழிலாளர், காரிருள் சூழ்ந்த சுரங்கக் குழிகளில் வேலை செய்வதிலிருந்து விடுவிக்கப்பட்டு, வெளியே நல்ல வேலைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

சமாதான காலத்திலும்போர்க்காலத்திலும் சோவியத்பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக வேலை செய்வதை நாம் பார்த்தோம். அவர்கள் மணம் செய்து கொண்டு, குழந்தைகளைப் பெற்றெடுத்த பிறகும் வேலை செய்கிறார்கள். அவர்கள் வேலையை, பெருமை என மதிக்கிறார்கள்.

குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு அவசியமான பணத்தைக் கணவன் சம்பாதித்த போதிலும், மனைவி வேலை செய்வதானது நமக்கு வியப்பாகத் தோன்றலாம்.

போர்க்காலத்தில், நாட்டுக்காக, முக்கியமான தொழிற் சாலைகளில் வேலைசெய்ய, பெண்கள் முன் வந்தால் நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அப்படியானால், சமாதான காலத்திலும் சோவியத் பெண்கள் வேலை செய்வதில் வியப்பு ஏன்?

விஷயம் இதுதான்: சோவியத் யூனியனில் போர்க் காலத்திலும் சமாதான காலத்திலும், வேலை செய்கிற ஒவ்வொருவரும் நாட்டின் நலனுக்காக வேலை செய்கிறார் கள். ஏனெனில், எல்லாத் தொழில்களும் சோவியத் சர்க்காருக்குச் சொந்தம். அவை எல்லா மக்களின் நல னுக்காக நடத்தப்படுகின்றன. சோவியத் பெண்கள், தங்கள் நலனுக்காக அல்லது தங்கள் குடும்ப நலனுக்காக மட்டும் உழைப்பதில்லை. பதினெட்டுக் கோடி சோவியத் மக்களின் நன்மைக்காக உழைக்கிறார்கள்.

சோவியத் குழந்தை, எந்த இனம், எந்த நிறம், எந்த மதத்தைச் சேர்ந்ததாயினும், அதன் திறமைக்கு ஏற்ப, அது கல்விப் பயிற்சி பெறுகிறது. பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் வேலை கொடுக்கப்படுகி றது. கலாசாலை மாணவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் படுகிறது. படிக்கிற பொழுதே அவர்கள் மணமும் செய்து கொள்ளலாம்.

இது நமக்கு கற்பனை உலகில் திரித்த கட்டுக் கதையாகக் காணப்படுகிறது.

நம் நாடுகளில் சில வாலிபர் பணத்தைப் பற்றிச் சிறிதும் கவலையின்றிக் கல்வி கற்று பெரிய பட்டதாரிகள் ஆகிறார்கள் என்ற விஷயம் நாம் அறிந்ததே. அத்தகைய வாய்ப்புப் பெற்ற இளைஞர்களிடத்தில் நமக்குக் குரோதம் உண்டாவதில்லை. நாம் விரும்புவது, திறமையுள்ள வாலி

பர் எல்லோருக்கும் அத்தகைய வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்பதுதான்.

எனவே, கல்வித்துறையில் சோவியத் சர்க்கார் கையாளும் முறை இதுதான்: எவ்வித தடையும், பாகுபாடும், பணக் கஷ்டமும் இல்லாமல் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், தன் திறமைக்குத் தகுந்தபடி இலவசக் கல்வி பெற வசதிகளும் வாய்ப்புகளும் அளிப்பதேயாகும்.

சோவியத் யூனியனில் நோயுற்றவருக்கு அல்லது காயமுற்றவருக்கு சிறந்த முறையில் இலவசமாக சிகிச்சை செய்யப்படுகிறது என்பதையும் நாம் ஆராய்ந்தோம். வைத்திய சேவையை அங்கு வீலைக்கு வாங்க இயலாது.

இதை நம்மால் எளிதில் நம்ப முடிவதில்லை. ஏனெனில், நாம் பிறந்தது முதல் இறக்கும்வரை, ஆரோக்கியம், நோய், வைத்திய உதவி ஆகியவற்றை, ரூபாய் அணா பைசாவில் மதிப்பிட்டுப் பார்ப்பது நமக்குப் பழக்கமாகி விட்டது.

சோவியத் யூனியன் தனது மக்களைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணம், உண்மையில் நியாயமானதல்லவா? பணத்தைக் காட்டிலும் மனித உயிருக்குச் சிறப்பளிப்பது மூடத்தனமா? வெள்ளையனைப் போலவே கருப்பனும் கஷ்டங்களை உணர்கிறான், என்று கருதுவது தவறுமா? நாடு முழுவதையும் ஆரோக்கிய நிலைமையில் வைப்பது கூடாதா?

நம் நாடுகளில் சிலருக்கு பணச் செலவைப் பற்றிச் சிறிதும் கவலையின்றி. வாழ் நாள் முழுதும், முதல் தரமான வைத்திய வசதிகள் கிடைப்பதை, நாம் குறை கூறு

வதில்லை, வியப்படைவதும் இல்லை "பணத்தைப் பற்றிக் கவலையில்லை, எங்கள் குழந்தையைக் காப்பாற்றுங்கள்!" என்று, சில பெற்றோர்கள் டாக்டர்களிடம் சொல்வதைக் கேட்டு, நாம் ஆச்சரியப்படுவதில்லை. ஒவ்வொரு தாயும் தந்தையும் இந்த அதிர்ஷ்ட நிலைமையில் இருக்க வேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம்.

சோவியத் யூனியனில், நோயாளிகளுக்கும் காயமுற்றவர்களுக்கும் சிகிச்சை வசதிகள் மிகவும் விரிவடைந்திருக்கின்றன. லட்சக் கணக்கான மக்கள் முதல் தரமான வைத்திய உதவி பெறுகிறார்கள். அதற்கான செலவை எல்லோரும் சேர்ந்து ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இதில் புதுமை ஒன்றுமில்லை. பிறநாடுகளில் சிலருக்கு மட்டும் கிடைக்கின்ற சுகாதார வைத்திய வசதிகள், சோவியத் யூனியனில் எல்லோருக்கும் கிடைக்கின்றன.

நாம் இதுவரை ஆராய்ந்த சோவியத் வாழ்க்கையின் அம்சங்களைக் காட்டிலும் நூதன அம்சம் ஒன்றை இப்போது பார்ப்போம்.

இச்சிறிய நூலில் நாம் ஒரு விஷயத்தை வலியுறுத்தி வந்திருக்கிறோம். சோவியத் யூனியனின் **புதிய விஞ்ஞானம்**, மிகவும் பலம் பொருந்திய ஆயுதம். **அந்த ஆயுதத்தினால், மனிதன் இயற்கைச் சக்திகளைத் தன் விருப்பத்திற்கு தலை வணங்கச் செய்ய முடியும்.**

எதற்காக?

பசியைப் போக்கவும், நோயைத் தீர்க்கவும் விவசாயத்தையும் தொழிலையும் அபிவிருத்தி செய்து; அனைவருக்கும் செம்மையான வாழ்வு கிடைக்கவும், கடுமையான உழைப்பைக் குறைக்கவும், மக்கள் எல்லோருக்கும் ஓய்வும்

ஆரோக்கியமும் நல்கி, இன்ப வாழ்வு வாழவும், சோவியத் யூனியனின் பதினெட்டுக் கோடி மக்களுக்கும், புதிய விஞ்ஞானம் வழி காட்டியது.

விஞ்ஞானம் என்னும் ரகசிய ஆயுதம் சோவியத் மக்களுக்குப் புது வாழ்வை அமைத்து வருகிறது!

இப்புதிய வாழ்வு, மக்களை நடத்திச் செல்லும் வழி நமக்கு நூதனமாகத் தோன்றும். காசாக் பகுதியில் பிறந்தவரான மிக்கேல் ஷோலக்கோவ் என்னும் நாவலாசிரியரை எடுத்துக் கொள்வோம். ரஷ்யப் புரட்சியின் தொடக்கத்தில் டான் நதியின் பள்ளத்தாக்கிலுள்ள மக்களின் வாழ்க்கையைப்பற்றி, ஷோலக் கோவ் கதைகள் எழுதினர். லட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும், எழுதப் படிக்கத் தொடங்கிய காலத்தில், அவருடைய கதைகள், சோவியத் சஞ்சிகைகளில் வெளிவந்தன அவற்றை அனைவரும் ஆர்வத்துடன் படித்தார்கள். 1928–ல், அவருக்கு வயது இருபத்தி மூன்று. அப்பொழுது "டான் அமைதியாக ஓடுகிறது"[1] என்ற முதல் நவீனத்தை அவர் வெளியிட்டார். அது படித்தவர்கள் ரஸிக்கும் ரகத்தைச் சேர்ந்தது, என்று நாம் சொல்லுகிறோம் ஆனால், ரஷ்யாவில் அதை லட்சக்கணக்கான மக்கள் படித்தார்கள். காசாக்கள்பற்றி மேலும் எழுதும் படி தொழிலாளரும் விவசாயிகளும் போர் வீரரும், ஷோலக் கோவுக்கு எண்ணற்ற கடிதங்கள் எழுதினர். மற்றொரு நூல் வெளி வந்தது. அது போற்றப்பட்டது, விமர்சனம் செய்யப்பட்டது. "டான் நூல்கள்" லட்சக் கணக்கான மக்களால் படிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.

மொத்தத்தில் எட்டு நவீனங்கள் வெளிவந்தன. அவை பிற மொழிகளிலும் ஆக்கப்பட்ட பிறகு, சோவியத்

1 And Quiet Flows The Don.

யூனியனுக்கு வெளியேயுள்ள இலக்கிய விமர்சகர்கள், ஷோலக்கோவ் தலை சிறந்த நவீன நூல்களை எழுதியிருக்கிறார் என்பதை ஒப்புக்கொண்டார்கள்.

அவர் அதைவிடச் சிறந்த காரியமும் செய்திருக்கிறார். புது மாதிரியான வாசகர்கள் தோன்றுவதற்கு அவர் உதவி செய்தார். "மட்டமான" சஞ்சிகைகள் நூல்கள் என்று, நமது அறிஞர்கள் சொல்லுகிறார்களே, அவற்றிற்குப் பதிலாக, இந்த இலக்கிய நூல்களை லட்சக் கணக்கான உழைப்பாளிகள் படித்தார்கள். ஷோலக் கோவின் நவீனங்களின் அழகையும், நயத்தையும் நூட்ப மாக அனுபவிக்கக் கூடிய அளவுக்குத் தங்களுடைய வாழ்க்கையிலும் வேலையிலும் மனோபாவத்திலும், ஏதோ ஒரு மாறுதல் ஏற்பட்டிருப்பதை, பெரும்பாலான சோவியத் மக்கள் கண்டார்கள். வேறெந்த நாட்டிலும் அத்தகைய நிகழ்ச்சி நேரிட்டதில்லை.

அதே காலத்தில் மற்றொரு சோவியத் இளைஞர், இசைத் துறையில் அது போன்ற அரிய சாதனைகளைச் செய்து கொண்டிருந்தார். அவருடைய பெயர் 'டிமிட்ரி ஷோஸ்டகோவிச்' ஷோலகோவ் எழுதத் தொடங்கிய காலத்தில், ஷோஸ்டகோவிச் பாட்டு இயற்றத் தொடங்கினர். கூட்டு வாத்தியத்திற்கு ஏற்ற பல இசைகளை அவர் புனைந்தார். அவை படித்த சிறு கூட்டங்களுக்காக அல்ல "டான்" நாவல்களைப் படிக்கின்ற தொழிலாளர்கள், பெண்கள், வாலிபர்கள் ஆகியவர்களுக்காக. சோவியத் யூனியன் முழுவதிலும் பல கூட்டு வாத்திய கோஷ்டிகளால் அவை பாடப்பட்டன.

ஷோஸ்டகோவிச்சின் பாடல்களைக் கேட்கும்படி யாரும் மக்களை வற்புறுத்தவில்லை. அவர்களால் இப்பொழுது இசைக் கச்சேரிகளுக்கு டிக்கட் வாங்கமுடியும்.

டிக்கெட் வரங்க அவர்கள் 'க்யூ' வரிசையில் காத்திருந்தார்கள். ஆர்வத்துடன் இசை இன்பத்தை அனுபவித்தனர். பிறகு அவருடைய பாட்டுக்களைப் பாராட்டியும், சில குறைகளைச் சுட்டிக் காட்டியும் ஆயிரக்கணக்கானவர்கள் அவருக்குக் கடிதங்கள் எழுதினர்கள். மேலும் மேலும் இசைப் பாடல்கள் இயற்றும்படி அவரை கேட்டுக்கொண்டார்கள். வேறெந்நாட்டிலும் இம்மாதிரி சம்பவம் நிகழ்ந்ததில்லை

நான் இந்த இரண்டு உதாரணங்களையும் ஏன் சொன்னேன் என்றால், ஷோலகோவ், ஷோஸ்டகோவிச் ஆகிய இருவரையும் நம் நாடுகளிலுள்ள படித்தவர்கள் நன்கு அறிவர். புகழ்பெற்ற எழுத்தாளர்களும் இசை வாணர்களும் பலர் ரஷ்யாவில் இருக்கிறார்கள். அவர்கள் புரட்சிக்குப் பின் வளர்ச்சி அடைந்தவர்கள். லட்சக் கணக்கான மக்கள் அவர்களுடைய வளர்ச்சிக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

சிறந்ததொரு புதிய வாழ்வை அனுபவிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வாய்ப்பையும், மக்கள் ஆர்வத்துடன் பயன்படுத்திக் கொண்டார்கள். விவரிக்க முடியாத அறியாமையில் ஆழ்ந்திருந்த சோவியத் மக்கள் இருபது வருஷங்களுக்குள், பிற நாடுகளைவிட அதிகமாக கலைத்துறையிலும் பண்பாட்டிலும் வளர்ச்சி அடைந்திருக்கின்றனர், என்று சொன்னால், அது மிகையாகாது.

சில உதாரணங்கள்: புரட்சிக்குப் பிறகு, சோவியத் யூனியனில் 106 மொழிகளில் 700 கோடி புத்தகங்கள் வெளியாகி இருக்கின்றன. டால்ஸ்டாய் எழுதிய நூல்கள் ஒரு கோடியே இருபது லட்சம் விற்பனையாகி இருக்கின்றன சமீப காலத்தில் தொண்ணூறு புத்தகங்கள்

புதுப் பதிப்பில் வெளிவந்தன. புஷ்கின் என்ற கவிஞரின் நூறுவது ஆண்டு விழாவில், அவருடைய கவிகள் கதைகள் அடங்கிய நூல்கள் எண்பது லட்சம் பிரதிகள் அச்சாயின.

ஒவ்வொரு வருஷமும் நாற்பத்தையாயிரம் நூல்கள் (இரண்டு கோடி ஐம்பது லட்சம் பிரதிகள்) அச்சிடப்பட்டு, ரஷ்யாவில் வெகு விரைவில் விற்பனையாகின்றன. எனினும் லட்சக்கணக்கான பேர்கள், நூல் நிலையங்களில் புத்தகங்கள் பெற்றுப் படிக்கிறார்கள். மக்களுக்கு இலக்கிய அவா அளவு கடந்து விட்டது. அதைச் சமாளிக்கப் போதிய அளவு காகிதம் கிடைக்கவில்லை!

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி, மரணம் அடைவதற்குச் சில வருஷங்களுக்கு முன், அவருடைய தொண்டைப் பாராட்டி, நினைவு விழாக் கொண்டாடும்படி சோவியத் அரசாங்கம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. பல ஆலைகளும், தெருக்களும், நகரங்களும், பெரிய பட்டணமும், பல்கலைக் கழகமும், செஞ்சேனையின் விமானப் படை ஒன்றும் அவர் பெயரால் அழைக்கப்பட்டன. அதுவரை அவருடைய புத்தகங்கள் மூன்று கோடியே இருபது லட்சம் பிரதிகளை சோவியத் பதிப்பாளர் விற்பனை செய்திருந்தனர்.

இப்புள்ளி விவரங்கள் குறிப்பிடத் தகுந்தன. சோவியத் வாழ்வில் ஏற்பட்ட மகத்தான மாறுதலை, அவை எடுத்துக் காட்டுகின்றன. லட்சக்கணக்கான மக்கள் எல்லா விதமான கலைகளையும் ஆர்வத்துடன் நாடுகிறார்கள். விஞ்ஞான முறைப்படி விவசாயம் செய்வது, கிராம வாழ்க்கையையும் நகர வாழ்க்கையையும் ஒன்று படுத்துவதைப் போல, புதிய வாழ்க்கை முறை, பாட்டா

ளிகளுக்கும் படிப்பாளிகளுக்கும் இடையே உள்ள வேறு பாட்டைக் குறைத்து வருகிறது.

புத்தகப் படிப்பில் எல்லோருக்கும் ஆர்வம் ஏற்படுவதில்லை. புத்தகங்களைவிட, சோவியத் நாடகங்களுக்கும் சினிமாக்களுக்கும் அதிகப் பிரியம் இருக்கிறது. மாஸ்கோ 'கலா நாடக மண்டபம்" உலகப் புகழ் பெற்றது. பிற நாடுகளில் நாடக மேடைகள் இழிவான நிலையில் இருக்கின்றன, ஆனால், சோவியத் யூனியனில் மட்டும் ஆயிரக் கணக்கான நாடகக் கொட்டைகளில் தலைசிறந்த நடிகர்களும் நடிகைகளும் நடிக்கின்றனர். பல்வேறு தேசிய இனங்களின் கலா ஆர்வம் வேகமாக வளர்ந்து வருவதால், வெவ்வேறு பாஷைகளிலுள்ள நாடக சாலைகள் மட்டும் இருநூற்றைம்பதுக்கும் அதிகமாக இருக்கின்றன. அவை அறுபது மொழிகளில் நாடகங்களை நடத்துகின்றன. தரத்தில் அவை மாஸ்கோ நாடகசாலைக்குக் குறைந்ததல்ல. ஆராய்ச்சி நாடகசாலைகளும் உண்டு. பழைய, புதிய நாடகங்கள் புத்துயிர் பெற்று உலவுகின்றன. பெரிய சிறிய இசை நாடகங்களும் நன்முக ரசிக்கப்படுகின்றன.

விவசாயிகளுக்குத் தனி நாடக சபைகள் உண்டு. ஜில்லாவின் மூலை முடுக்குகளுக்குச் செல்லக்கூடிய நாடக சபை ஒன்று தங்களுக்கு வேண்டும் என 1934-ல் சில, விவசாயிகள் கேட்டனர். அப்படியே ஏற்பாடாயிற்று. மக்கள் அதை ஆர்வத்துடன் வரவேற்றார்கள். எனவே, 1939-ம் வருஷத்திற்குள் பதினாயிரம் நடிகர்கள் அடங்கிய மூந்நூறு நாடகசபைகள் விவசாயிகளுக்காகத் தோன்றின!

பட்டணங்களில் நடத்தப்படுகின்ற ஆடம்பரமான நாடகங்களை நம்மால் நம்பவே முடியாது. நமது நாடக

ளில் ஷேக்ஸ்பீயர் நாடகம் ஒன்றுகூட நடிக்கப் படாமல் சில மாதங்கள் கழிகின்றன. ஆனால், சோவியத் யூனியனில், ஒரே காலத்தில் 'ஒதெல்லோ' நாடகம் மட்டும் பதின்மூன்று பட்டணங்களில் நடைபெற்றது! ஷேக்ஸ்பியர், கார்க்கிபோன்ற சிறந்த ஆசிரியர்களின் நாடகங்கள் சுமார் ஐம்பது கொட்டகைகளில் நிரந்தரமாக நடத்தப் படுகின்றன.

சோவியத் திரைப் படங்கள் புகழ் பெற்றவை. அவை இப்போது நம் நாடுகளில் செல்வாக்கு அடைந்து வருகின்றன. ஆனால், நாம் பார்க்காத ஒருவகை சோவியத் படங்கள் உண்டு. அவை கலையை விஞ்ஞானத்துடன் பிணைக்கின்றன. உடல் உறுப்புகள் எவ்வாறு இயங்குகின்றன என்பது முதல், கெடியாரம் எப்படிச் செய்யப் படுகிறது என்பது வரை நுட்பமான விஷயங்களைத் தெளிவு படுத்தக்கூடிய ஒலிப் படங்கள் வர்ணத்தில் தயாரிக்கப் படுகின்றன. எஞ்சீனியரிங் மாணவர்கள், விமானங்களை எப்படித் தயாரிப்பது என்பதை அவற்றின் மூலம் தெரிந்து கொள்ளுகிறார்கள். கால்நடைகளை எப்படி வளர்க்கிறது என்ற நுட்பங்களைப் படக் காட்சி மூலம் விவசாயிகள் தெரிந்து கொள்ளுகிறார்கள். சிக்கலான ரண சிகிச்சை நுணுக்கங்களை, மெதுவாக இயங்கக் கூடிய படங்களின் மூலம் டாக்டர்கள் தெரிந்து கொள்ளுகிறார்கள். இத்தகைய தொழில் சம்பந்தமான சலனப் படங்களை, சோவியத் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கிறார்கள். நூற்றுக்கணக்கான விஷயங்களைக் கற்பிக்கும் படங்கள் இப்போது காட்டப்படுகின்றன. பிற நாடுகளில் கல்விப் பயிற்சி இவ்வளவு விரிந்த அளவில் கிடையாது.

சோவியத் யூனியனில் கலையும் பண்பாடும் லட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையோடு இசைந்து விட்.

டன. ஓவியம், சிற்பம், இசை எழுத்து ஆகிய கலைகளை எண்ணற்ற தொழிலாளர்கள் விவசாயிகள் கற்று வருகிறார்கள். நிபுணர்கள் கூட்டுப் பண்ணைகளுக்கும் ஆலைகளுக்கும் அடிக்கடி போய் திறமையுள்ளவர்களைத் தேடிப் பிடிக்கிறார்கள் இன்றைக்கு ரயில்வே தொழிலாளியாக இருக்கிறவன் நாளை இசைக்கழகத்தில் பயிற்சி பெறலாம். உக்ரைன் பண்ணையில் வேலை செய்கிற பெண், நாளை லெனின்கிராடு பள்ளிக்கூடத்தில் நடனப் பயிற்சி பெறலாம். தொழிலாளி கவிதை புனைகிறான்! விவசாயப் பெண் நடனம் ஆடுகிறாள்! இத்தகைய நிகழ்ச்சிகள் நமக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால், சோவியத் மக்கள் அப்படிக் கருதுவதில்லை. கலை, பண்பு இவை பற்றி அவர்களின் மனோபாவம் முற்றிலும் மாறுபட்டது.

அழகு, கவர்ச்சி, உத்சாகம் இவற்றைத் தரக்கூடிய ஒவ்வொன்றும் எல்லோருக்கும் சொந்தம், என்று சோவியத் மக்கள் நம்புகிறார்கள். கலை "மேல் தட்டில் உள்ளவர்"களின் ஏக போக உரிமை என அவர்கள் கருதுவதில்லை. எவரும் எக்கலையையும் தெரிந்துகொள்ளலாம், ரசிக்கலாம் என்பது அவர்களின் வாழ்க்கையில் கண்ட உண்மை புதிய இன்பங்களும் ஊக்கங்களும் நிறைந்த வாழ்க்கைக்கு, அவை வழிகாட்டும் என்பதையும் மனிதவர்க்கத்தின் கடந்த கால வீரபரம்பரையிலிருந்து எழுகின்ற மன வலிமையையும் லட்சியப் பிடிப்பையும் அவை வளர்க்கும் என்பதையும் அவர்கள் நன்கு அறிவர்.

சோவியத் யூனியனின் வாழ்க்கையை, போர் மிகவும் பாதித்துவிட்டது ஆனால், வாழ்க்கையின் ஒரு அம்சமாவது சிறிதும் மாறுபடவில்லை. முற்றுகையிடப்பட்ட பட்டணங்களிலும் கலா நிகழ்ச்சிகள் நடப்பதைக் கண்டு அன்னிய நிருபர்கள் மிகவும் ஆச்சரியமுற்றனர். கடுமை

யான போரின் கொடுமைகளைச் சகித்துக்கொண்டும் ரஷ்யர்கள் தங்கள் கலை ஆர்வத்தைத் திருப்தி செய்ய முனைவதிலிருந்து, அவர்கள் எத்தகைய வாழ்க்கையைப் பாதுகாக்கப் போராடினர் என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

உதாரணமாக. போர் தொடங்கியதும் பெயர் போன மாஸ்கோ மாலி நாடக கோஷ்டியார் போர் முனைக்குப் புறப்பட்டுச் சென்றனர். ஷேக்ஸ்பியர் எழுதிய "அடங்காப் பிடாரியை வசக்குதல்" [1] என்ற நாடகத்தை போர் வீரர் பார்க்க விரும்பியதால், நடிகர்கள் போர் முனைக்குச் சென்றனர். போர்க்களத்தில் பீரங்கிப் படையினரின் மத்தியில் நாடக மேடை அமைத்து நடித்தார்கள். போர் வீரர், அதை உணர்ச்சியுடன் கண்டு களித்தார்கள். அத்தகைய நாடகங்கள் போர் முனை எங்கும் நடத்தப் பட்டன.

மிகப் புகழ்பெற்ற மாஸ்கோ கலா நாடக சபையினர், போர் தொடங்கியதும் தெற்குப் போர் முனைக்குச் சென்றார்கள். இராப் பகலாக. அவர்கள் பாகு எண்ணெய் வயல் தொழிலாளருக்கும், காயமடைந்த போர் வீரருக்கும். மாலுமிகளுக்கும் நாடகம் நடத்தினர். அதைக் கண்டு களித்த போர் வீரருக்கும் தொழிலாளருக்கும் ஒரு உரிமை வழங்கப்பட்டது. தங்களுக்குப் பிடித்தமான கலா நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமைதான் அது. அவர்கள் விரும்பியது எதுவென நீங்கள் ஊகிக்க முடியாது. அவர்கள் சோபின் என்ற மேதையின் இசைக்குத் தகுந்தவாறு தயாரிக்கப்பட்ட நாடக நடனத்தைக் காண விரும்பினர். பிற நாடுகளில் பயிற்சி பெற்ற ஒரு சிலர் மட்டும் பார்த்து அனுபவிக்கக் கூடிய ஒரு உயர்தர நிகழ்ச்சியை சாதாரண கலா நிகழ்ச்சிகளுக்குப் பதில்

---

1 The Taming of the Shrew.

அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்! மிக உயர்தரமான நடனங்கள் சோவியத் எண்ணெய்த் தொழிலாளர் கூட ரஷிக்கிறார்கள்.

சோவியத் யூனியனில் சாதாரண மக்களின் இதயத்தில் கலைப் பண்பும் ஆர்வமும் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பதை கொரில்லா தலைவர் அர்சோனியைப்பற்றிய உண்மையான சம்பவம்விளக்குகிறது: ஓர் இரவு, அவருடைய ஆட்களில் ஒருவன் ஒரு படத்தைக் காண்பித்தான். ஜெர்மன் அணிவகுப்புக்குப் பின்னால் நுழைந்து, அங்கு தான் செய்ய திட்டமிட்டிருக்கும் ஓர் ஆபத்தான வேலையை அவன் அவருக்கு விளக்கிக் கூறினான், அர்சோனி அதற்கு இசைந்தார். அவ்வீரன் சென்றவுடன், தலைவர் மற்றொருவனைக் கூப்பிட்டார். அவனையும் அதே வேலைக்கு அனுப்பினர். போக வேண்டிய வழியை மட்டிலும் மாற்றிச் சொன்னார்.

இரண்டு நாட்கள் ஆயின. கொரில்லாப் படை முழுவதும் கலக்கமுற்றிருந்தது. இரு வீரரும் மிக மகிழ்வுடன் திரும்பிவந்தனர். அவர்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

"நாங்கள் வெற்றி அடைந்தோம், இருவரும் அவ்வேலையை முடித்தோம்" என அக மகிழ்ந்தனர்.

இவ்விரு கொரில்லா வீரரும் உயிரைத் துரும்பெனக் கருதி சாதித்தது என்ன?

மிக்கெலோவ்ஸ்கி என்ற கிராமத்திற்குப் போய் கவிஞன் புஷ்கினின் சமாதிக்குப் பூமாலை சூட்டியதே அவர்கள் செய்த வேலை.

இச்சம்பவத்தை அறிந்த சோவியத் இசை நிபுணர் 'முராடெலி' சொன்னதாவது: "மாபெரும் மக்களின் கவிஞரது நினைவுச் சின்னத்திற்குச் செய்யப்படும் மரியாதை, இராணுவத்தின் தீரச்செயல் ஒன்றிற்குச் சமமாகக் கருதப்பட்டது சூரிய ஒளியை நசுக்க முடியாதது போல், அவர்களது கலை ஆர்வத்தையும் அழித்துவிட முடியாது." சோவியத் நாடெங்கும், "கலைக் கோயில்கள்" காட்சி அளிக்கக் காணலாம். அத்தகைய மாளிகைகள் இதற்குமுன் கட்டப்பட்டதாக எந்த வரலாறும் சான்று கூறவில்லை. அரண்மனைகள் அரசருக்கும், கலை ஒரு சிலருக்கும்தான் எப்பொழுதும் சொந்தமாக இருந்து வந்திருக்கிறது ஆனால், சோவியத் யூனியனில், கலையும் அரண்மனைகளும் மக்கள் அனைவருக்கும் சொந்தம்.

அந்த அற்புத உலகில் ஓய்வுக்கான உல்லாச மாளிகைகளையும் காணலாம். கிரிமியாவிலும் காக்கஸஸிலும் அத்தகைய மாளிகைகள் ஐந்நூறு இருக்கின்றன. அவை சிறந்த சிற்பிகளால் வனப்பு மிக்க இடங்களில் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவை நோயாளிகளுக்கு அல்ல, தொழிலாளரின் ஓய்வுக்காக, களைப்புற்ற எவரும் நான்கு வாரங்கள் எவ்வித செலவும் இல்லாமல், அழகிய ஓய்வு மாளிகைகளில் தங்கி இன்புறலாம். லட்சக் கணக்கான மக்களுக்கு ஓய்வு மாளிகைகள் கிடைக்கின்றன.

புரட்சிக்கு முன் ரஷ்யாவில் 222 உல்லாச விடுதிகள்தான் இருந்தன. அவை பிரபுக்கள், வியாபாரிகள் ஜார் அதிகாரிகள் ஆகியோருக்கு மட்டும் உரிமையாக இருந்தன. இன்றைக்கு ஐக்ய சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளில் 95000 விடுதிகளுக்கும் அதிகமாகவே இருக்கின்றன. அவற்றில் பாதிக்கு மேல் கிராமங்களில் அமைந்துள்ளன. சோவியத் வாலிபர்கள் விளையாட்டு

மாளிகைகளைக் கட்டியிருக்கிறார்கள். இன்ப வாழ்விற்கு ஆரோக்கியமான உடல் அவசியம் என்ற உண்மையை, புராதன கிரேக்கர்களைப் போல், சோவியத் மக்களும் அறிந்திருக்கிறார்கள். வெளி வாழ்க்கையை எல்லோரும் விரும்புகிறார்கள். கால்பந்து போன்ற பந்தாட்டங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன. அவற்றைப் பார்க்க ஏராளமான மக்கள் திரண்டு வருகின்றனர். உடல் பயிற்சி நிபுணர்களைத் தோற்றுவிக்க பன்னிரண்டு பல்கலைக் கழகங்களும் இருபத்தைந்து பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. இவற்றில் பயிற்சி பெறக் கட்டணம் கிடையாது. விளையாட்டுகள் பணம் திரட்டுகின்ற ஒரு வாணிபமாக ரஷ்யாவில் கருதப்படவில்லை. தன் திற மையை விலைக்கு விற்கிற உடல் பயிற்சி நிபுணர் ஒருவரேனும் அங்கே கிடையாது. அனைவரின் மகிழ்ச்சிக்கு உரியதுதான், விளையாட்டு. மக்கள் ஒவ்வொருவருக்கும், குதிரையேற்றம், டென்னிஸ், படகோட்டுதல், போன்ற பொழுது போக்குக்கான வசதிகளை விளையாட்டு மாளிகைகள் செய்து தருகின்றன. வேட்டையாடுவதற்கும் மீன் பிடிப்பதற்கும் வனங்களில் தக்கவசதிகள் செய்யப்படுகின்றன. மலை வளங்களையும் இயற்கையின் வனப்பையும் கண்டு களிக்கின்ற வாய்ப்புகளும் உண்டு. இவ்வாறு விளையாட்டுகளும், விளையாடும் இடங்களும் லட்சக்கணக்கான மக்களுக்குச் சொந்தமாக்கப் பட்டிருக்கின்றன!

இத்தகைய நூதன புதுவாழ்வை, **விஞ்ஞானம்** என்னும் ரகசிய ஆயுதத்தினால், சோவியத் மக்கள் அடைந்து அனுபவித்து வருகிறார்கள்.

பிறநாடுகளில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்துகின்ற விஷயங்கள் சோவியத் வாழ்வில் எவ்

வாறு இருக்கின்றன என்பதை இனி கவனிப்போம். கலை, பண்பாடு, விளையாட்டு முதலியவற்றிலிருந்து சற்று கவனத்தைத் திருப்பி பொருளாதாரத்திற்கு வருவோம். அதாவது வாழ்க்கைத்தரத்தின் அடிப்படையாகிய ரூபாய் அணா பைசாவுக்கு வருவோம்.

இருபது வருஷங்களாக சோவியத் மக்கள், தங்கள் முழு உழைப்பையும் பணத்தையும் போர் முயற்சிகளில் பயன்படுத்தி வந்தார்கள். எனவே, அவர்கள் வெற்றி பெறத் தகுந்த இராணுவ பலத்துடன் போர் புரிய முடிந்தது என்று பல வெளிநாடுகளின் நிபுணர்கள், செஞ்சேனையின் மகத்தான வெற்றிக்குக் காரணம் கூறினர். இது உண்மைதானா?

இப்பச்சைப் புளுகுக்கு புள்ளி விவரம் தகுந்த விடையளிக்கும். சோவியத் தொழில்களுக்கும் விவசாயத்திற்கும், விஞ்ஞானத்தைப் பயன்படுத்தியதால், சோவியத் யூனியன் உலகிலேயே மிகப் பலம் பொருந்திய நாடாகியது. சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது அவர்களுடைய வருமானமும் அதிகரித்தது.

1928ம், வருஷத்திலிருந்து 1936ம் வருஷத்திற்குள் சோவியத் தொழிலாளியின் சராசரி கூலி, வருஷம் ஒன்றுக்கு 700 ரூபிள்களிலிருந்து 2770 ரூபிள்களாக உயர்ந்தது. *

---

* குறிப்பு:-

முதலாளித்துவ நாடுகளைப் போன்று, ஆணுக்கு அதிக சம்பளம் பெண்ணுக்கு குறைந்த சம்பளம், வயது வந்தவருக்கு அதிக சம்பளம் குழந்தைகளுக்குக் குறைந்த

1936–ல், சோவியத் தொழிலாளரின் மொத்தக் கூலி 5625 கோடி ரூபிள்கள். 1940–ல், அது 7375 கோடிக்கு உயர்ந்தது.

இந்தச் சம்பளக் கூடுதல்கள் ரொக்கப் பணம் சம்பந்தப்பட்டவை. இந்தக் கூலி உயர்வு தவிர, நாம் முன்னமே விவரித்துக் கூறிய பிரகாரம், சுகாதாரம், பொழுதுபோக்கு, கல்வி ஆகிய துறைகளிலும் அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்ந்தது.

1933–ம், வருஷத்திலிருந்து 1937–ம், வருஷம் வரை, அரசாங்கமும் தொழிற் சங்கங்களும், தொழிலாளருக்கு வாழ்க்கை வசதிகள் செய்து கொடுக்க 3250 கோடி ரூபிள்கள் செலவு செய்தன. 1938 முதல் 1942 வரை நான்கு வருஷங்களில் செலவான தொகை 4000 கோடி ரூபிள்கள்.

சம்பளம் என்ற அநீதியான சம்பள விகிதம் சோவியத் யூனியனில் இல்லை. ஒவ்வொரு வருஷமும் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களின் அளவையும் வருமானத்தையும் ஆதாரமாகக் கொண்டு, ஒவ்வொரு வருஷமும் அடிப்படைக் கூலி நிர்ணயிக்கப்படுகிறது. அடிப்படைக் கூலி நிரந்தரமானதல்ல. பொருள்களின் உற்பத்திப் பெருக்கிற்குத் தகுந்தாற்போல, நாட்டின் செல்வமும் பெருகிக் கொண்டே போகிறது. எனவே, அடிப்படைச் சம்பளமும் வருஷா வருஷம் அதிகமாகிறது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவரவர் வேலையின் தன்மைக்கும் அளவுக்கும் தகுந்தாற்போல சம்பளம் பெறுகிறார்கள். எவரும் அடிப்படைச் சம்பளத்திற்குக் குறைவாகப் பெறுவதில்லை; கூடுதலாகவே பெறுகிறார்கள். மாதம் முழுதும் நோயால் பீடிக்கப்பட்டு வேலை செய்ய இயலாதிருக்கும் தொழிலாளிகூட அடிப்படைச் சம்பளம் பெறுகிறான்.

சோவியத் யூனியனில் தொழிற் சங்கங்களுக்கு சுதந்திரம் கிடையாது; அவை பெயரளவில் இருக்கின்றன என்று, அதன் எதிரிகள் கதை கட்டுகிறார்கள்.

சோவியத் மக்களின் வளர்ச்சிக்குத் தொழிற் சங்கங்கள்தான் முக்கிய காரணம். சோவியத் தொழிற் சங்க உறுப்பினரின் எண்ணிக்கை 1917–ல், 1500000. 1940–ல், 25 500 000 ஆக உயர்ந்தது. தொழிற் சங்கங்களுக்குச் சொந்தமாக 6000 உல்லாச விடுதிகளும், 100000 கிளப்களும், 15000 நூல் நிலையங்களும், 10000 சினிமாக் கொட்டகைகளும் இருக்கின்றன. இன்னும் பத்திரிகைகளும், பதிப்பகங்களும், விளையாடும் இடங்களும் பல உண்டு. சோவியத் யூனியனில் தொழிற் சங்கங்கள் செய்கின்ற வேலை மிக அதிகம். சமாதான காலத்தில் நாட்டின் முன்னேற்றத்தின் பெருமையிலும், போரில் நாஜிகளைத் தோற்

நெசவாலைத் தொழிலாளி:

அடிப்படைச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு 240 ரூபிள்.

குறைந்த வருமானம் மாதம் ஒன்றுக்கு 500 ரூபிள்.

சராசரி வருமானம் ,, 816 ரூபிள்

திறமையுள்ள தொழிலாளரின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு 1500 முதல் 3000 ரூபிள் வரை.

உபாத்தியாயர்: மாதம் ஒன்றுக்கு 1500 ரூபிள்.

டாக்டர்: மாதம் ஒன்றுக்கு 1200 முதல் 6000 ரூபிள் வரை

நர்ஸ்: மாதம் ஒன்றுக்கு 800 ரூபிள்.

---

1 ரூபிள் மதிப்பு ரூ 1—3—0

கடித்த பெருமையிலும் பெரும் பங்கு சோவியத் தொழிற் சங்கங்களுக்கு உண்டு.

இவ்வுண்மையை அறிந்து கொள்ளுவது கடினமல்ல. நம் நாடுகளில் தொழிற் சங்கங்கள், போருக்காகத் தொழிலாளரைத் திரட்டியதை நாம் கண்டோம். சமாதானத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அதே காரியத்தை தொழிற் சங்கங்கள் செய்ய முடியும், என்பதைப் புரிந்து கொள்ளுவது கடினமா?

சோவியத் யூனியனை வெறுக்கிறவர்கள் அடிக்கடி ஒரு கேள்வி கேட்கிறார்கள். போருக்குப் பின் நாம் ரஷ்யாவை நம்பலாமா? ஐரோப்பாவை ஜெயித்து ஜனநாயக உலகில் கம்யூனிஸத்தைப் புகுத்துவதுதான் ஸ்டாலின் கொண்டுள்ள அந்தரங்க நோக்கமா? இத்தகைய கேள்விகளால் விஷ வித்துக்கள் மிக சாமர்த்தியமாக விதைக்கப் படுகின்றன.

இக்கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதின் மூலம், பகைமையைப் பரப்புகின்ற விஷப்பூண்டுகளை வேருடன் களைந்து எறிய முடியும். கடந்த இருபது வருஷங்களாக, ஸ்டாலின் பேசிய பேச்சுக்களும், அவருடைய வாக்குறுதிகளும், அறிக்கைகளும் வார்த்தைக்கு வார்த்தை மெய்யென்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. நமக்குத் தேவையான விடை அவற்றில் அடங்கி இருக்கிறது. சோவியத் யூனியனின் நோக்கத்தைப் பற்றி அவர் உலகிற்குப் பறைசாற்றியதைக் கவனிப்போம்:

"ஐரோப்பா ஆசியா போன்ற பிற நாடுகளைப் பிடிப்பது, அல்லது பிற நாட்டு மக்களை அடிமைப்படுத்துவது எங்கள் போரின் நோக்கமல்ல. ஜெர்மன் பாசிஸ ஆக்ரமிப்பிலிருந்து எங்கள் பூமியையும் எங்கள் மக்களையும்

விடுவிப்பதுதான். எங்கள் உதவியை நாடி நிற்கிற அடிமைப்பட்ட ஐரோப்பிய மக்கள் மீது எங்கள் விருப்பத்தையும் ஆட்சியையும் சுமத்துவது எங்கள் நோக்கமல்ல. அப்படி இருக்கவும் முடியாது. ஹிட்லரின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறப் போரிடுகின்ற மக்களுக்கு உதவி செய்து, அவர்களுக்கு உகந்த வாழ்வை அவர்களே சுதந்திரமாக வைத்துக் கொள்ள வழி செய்வதுதான் எங்கள் நோக்கம். பிற நாடுகளின் உள்நாட்டுக் காரியங்களில் எவ்வகையிலும் நாங்கள் தலையிடமாட்டோம்."

இந்த ஆணித்தரமான அறிக்கையை எவரும் திரித்துக் கூற இயலாது. அது ஒவ்வொருவரும் எளிதாய்ப் புரிந்து கொள்ளக்கூடியது.

நாம் சோவியத் யூனியனைப் பற்றிச் சொன்ன விஷயங்களையும், சோவியத் மக்கள் சாதித்த காரியங்களையும் சுருக்கமாக நினைவு படுத்திக் கொள்ளுவோம்:

"விநோதமான புது உலகில்" சோவியத் மக்கள் என்னதான் செய்து கொண்டிருக்கிறார்கள்?

கீழ்கண்ட நோக்கங்களுக்காக அவர்கள், இயற்கையை மனிதனின் விருப்பத்திற்குத் தலை வணங்கச் செய்கிறார்கள்:

விஞ்ஞானத்தின் உதவியால் ஆண், பெண், குழந்தை அனைவருக்கும் ஏராளமான பொருள்கள் கிடைக்க வேண்டும்; ஒவ்வொருவருக்கும் நல்ல ஆரோக்கியம் கிட்ட வேண்டும்; விஞ்ஞானப் புதுப் புனைவுகளால் உழைப்பு குறைந்து, அனைவரும் வேண்டிய அளவு ஓய்வு பெற வேண்டும்; மனிதனின் கலைப் பண்பின் பரம்பரை அனைவ

ருக்கும் சொந்தமாகி, மனித வர்க்கத்தைக் கனிவுடன் அழைக்கிற புதிய மகத்தான வாழ்வை அவர்கள் பார்க்க வேண்டும்.

தொழிலிலும் பண்பிலும் மிகப் பின் தங்கி இருந்த சோவியத் யூனியன், இருபது வருஷங்களில் தலைசிறந்த நாடாக விளங்குகிறது. இப்புதிய நூதன நாடு உலகைப் பிரமிக்கச் செய்துவிட்டது.

புதிய விஞ்ஞானம் சோவியத் யூனியனுக்குப் பிரம்மாண்டமான இராணுவ பலத்தைத் தந்தது. அதனால், ஹிட்லரின் மிலேச்சத்தனமான தாக்குதலை அது முறியடித்தது. சிர்குலைந்திருந்த ரஷ்யா, இருபத்தைந்து வருஷங்களில் மாபெரும் இராணுவ பலம் படைத்த சோவியத் நாடாகத் திகழ்கிறது!

17. மனித சமுதாயத்திற்கு ஏற்ற வாழ்வு.

"பயத்தினால்தான் உலகை ஆட்சி செய்ய முடியும்; கொடுமையினாலும் பலாத்காரத்தினாலும்தான் மதிப்புப் பெற இயலும்; நமது இனத்தைப் பாதுகாக்க உதவும் ஒவ்வொன்றும் ஒழுக்கம் உடையது; இதற்கு மாறான ஒவ்வொன்றும் ஒழுக்கம் கெட்டது. கீழ் இன மக்களை அழிக்கும் நமது உரிமையை யாரே தடுக்க வல்லார்? நம் எதிரிகளைத் தோற்கடிப்பது மட்டும் அல்ல, அவர்களை நிர்மூலம் ஆக்க வேண்டும் என்று இயற்கை நம்மைத் தூண்டுகிறது."

இதைச் சொன்னவன் எவன்? பித்தனா கொலை ஞனா?

இவ்வறிக்கையை விடுத்தவன் டாரி. அவன் ஹிட்லரின் அந்தரங்க மந்திரிகளில் ஒருவன். நாஜித் தலைவன். உலகம் இதற்கு முன் கண்டிராத கொலைகளுக்கும் கொடுமைகளுக்கும் காரணமான பயங்கரப் போரில் உலகை ஆழ்த்திய பாதகர்களுடைய நோக்கங்களை அந்த மனித மிருகம் எவ்வளவு தெளிவாகப் பறை சாற்றியது!

பல நூறு வருஷங்களாக போர்களின் காரணமாக மக்கள் சின்னபின்னம் ஆக்கப்பட்டார்கள். சமாதான மாக வாழ்ந்து வந்த நாடுகளை மிலேச்சர்கள் கொலைக் களமாக மாற்றினர். பெரிய பட்டணங்கள் தரை மட்டம் ஆக்கப்பட்டன. ஒரு நாடு முழுதும் வாளுக்கு இரையானதும் உண்டு.

ஆனல், மண்ணுசை கொண்ட வெறியர்கள் மனித வர்க்கம் முழுவதையும் அழித்து, உலகில் மிருக ஆட்சியை நிலைநாட்ட முனைந்தது உலக வரலாற்றில் இதுதான் முதல் தடவை. கொலையையே ஒழுக்கமாகக் கொண்ட சீரழிந்த மிருகக் கூட்டத்தை நாம் நாஜி ஜெர்மனியில் தான் கண்டோம்.

பத்து வருஷங்களுக்கு முன் மிகவும் முற்போக் கான நாடுகளில் ஒன்று என்று கருதப்பட்ட ஜெர்மனி, கனவில் கூட கற்பனை செய்ய முடியாத கொலைகாரரிடம் சிக்கியது. ஜெர்மன் நாகரீகத்தை அழிக்க அக்கொலைகா ரர் முற்பட்டார்கள். ஜெர்மன் மக்களை மாக்களாகக் கருதி, அவர்களை உணர்ச்சியும் மனச்சாட்சியும் இல்லாத மிருகங்கள் ஆக்கினர். முன்னேற்ற வரலாற்றில் ஜெர் மானியர் இடம் பெற்றதற்குக் காரணமான ஒவ்வொன் றையும் நாஜிகள் புறக்கணித்தார்கள்.

குடும்ப வாழ்க்கையை அவர்கள் சீரழித்தனர். புனிதமான திருமணத்திற்குப் பதில், விபசாரத்தைப் புகுத்தினர். "கீழ் இன மக்களை" மலடாக்கினர். கல்வி யில் வெறுப்பு உண்டாக்கி பள்ளிக்கூடங்களை ஒழித்த னர். அறிவை அவமதித்தனர். மிருக உணர்ச்சியைப் போற்றினர். மனித சுதந்திரத்தை நசுக்கினர். தலை வணங்க மறுத்தவர்களைக் கொன்று குவித்தனர்.

மதத்தை நிந்தித்தனர். இரத்தம் சிந்துவது புனிதம் எனப் போதித்தனர்.

இவற்றை எல்லாம் நாஜி மிருகங்கள் பயங்கர இயக்கங்களால் செய்து முடித்தன. லட்சக் கணக்கான மக்களை மிருகங்களாக்கினர், நாஜிகள். இம் மனித மிருகங்கள், காட்டில் வாழுகின்ற கொடிய விலங்கினங்களை விட மிகப் பயங்கரமானவை. ஏனெனில், அவர்கள் மிருகத் தன்மை பெற்றிருந்ததுடன் பயங்கரமான போர்க் கருவிகளிலும் பயிற்சி பெற்றிருந்தார்கள். அநேகமாக ஆண் இனம் முழுமையும் ஸ்வஸ்திகா மூத்திரையிடப் பட்ட 'ரோபோ' என்னும் இயந்திர மனிதர்களாக மாற்றப் பட்டார்கள். அவர்கள் மண்டைகளில் மூளைக்குப் பதில், மனித இரத்தத்தைச் சிந்த வேண்டும் என்ற வெறி தான் நிறைந்திருந்தது.

இந்த மாறுதல் நடந்தேறிய பொழுது, நாகரிக உலகம் பார்த்துக்கொண்டு வாளா இருந்தது. நாஜியின் பயங்கரச் செயல்களில் குற்றம் காணுமல் வாய்மூடி மௌனியாக இருந்த பலரை, இன்று அவர்களின் மனச் சாட்சி வாள் போல் அவர்களின் உள்ளத்தை அறுக்கிறது. இது மறக்க முடியாத அவமானம். இது மாத்திரமா? ஜெர்மனியை மிருகத்தனமான நிலைமைக்கு மாற்றுவதற்கு, வெளி உலகிலுள்ள பல சக்தி வாய்ந்த மனிதர்கள், தங்கள் வாக்காலும் பணத்தாலும் உதவி அளித்தார்கள். மேலிடங்களில் ஹிட்லருக்கு நண்பர்களும் கூட்டாளிகளும் கிடைத்தார்கள்.

நாஜிகள் ஏராளமான போர்க் கருவிகளைச் செய்து குவிக்கும் வரை, உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் கிளம்பிய எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. இறுதியில் காரியம் மிஞ்சி விட்டது.

தான் பன்முறை பறைசாற்றிய விஷயத்தை நிறை வேற்ற, அழிவுச் சக்திகளையும் பகைமை உணர்ச்சிகளை யும் மனித சமுதாயத்தின் மீது ஹிட்லர் கட்டவிழ்த்து விட்டான்.

திடீர் தாக்குதலினால், ஐரோப்பிய நாடுகள் ஒன் றன் பின் ஒன்றாக வீழ்ச்சியுற்றன. தோல்வி அடைந்த நாடுகள், கொள்ளை அடிக்கப்பட்டு சீரழிக்கப்பட்டன, தங்கள் இனத்தைத் தவிர பிற மக்களை அழித்து அல்லது அடிமைப்படுத்தி உலகம் முழுவதையும் அடிமை முகா மாக மாற்ற நாஜி மிலேச்சர்கள் முனைந்தார்கள்.

இக் கொடிய நோக்கங்களை மறைப்பதற்காக, ஹிட்லரும் அவனுடைய "ஆரிய" இனத்தைச் சேர்ந்த ஜப்பானியரும் பொய்யையும் புளுகையும் அள்ளி வீசினர். ஹிட்லர் படையெடுத்து இரத்தம் சிந்திய ஒவ்வொரு நாடும் ஜெர்மனியைத் தாக்கச் சதி செய்ததாக அவன் குற்றம் சாட்டினான் நாஜிகள் அவதார புருஷர்கள் அவர்கள் தொழிலாளரையும் விவசாயிகளையும் முதலாளி களின் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பதற்காக அவ தரித்த சோஷலிஸ்டுகள் என்று ஹிட்லர் பிதற்றினான். ஜெர்மன் பாங்கர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் இரத்தம் தோய்ந்த செல்வத்தைத் திரட்டிக் கொடுப்பதற்காக. ஐரோப்பா முழுவதையும் அடிமைப்படுத்தினான் என்பதை ஹிட்லர் பச்சைப் பொய்யினால் மறைக்க முயன்றான்; இறுதியில், ஹிட்லரது இரும்புக் கால்கள், அறிஞர்கள் பாதிரிகள் மந்திரிகள் ஆகியோரின் சமாதிகளை மிதித்தன. அவர்களுடைய வாய், தாங்கள் மதத்தையும் கலையையும் காக்கப் பிறந்தவர்கள் என்று புளுகியது.

இவ்வாறு நாஜிகள் மனித சமுதாயத்தின் மீது தங்களுக்குள்ள அருவருப்பைக் காட்டினர். பொய்யாலும்

கொடுமையாலும், மனித வர்க்கம் முழுவதையும் அடிமைப் படுத்த எண்ணினர். தாங்கள் உண்மையிலேயே, மிருகங்கள் என்பதை நன்கு உணர்ந்த அம்மிலேச்சர்கள், மனித சமுதாயத்தை அடக்கு முறையால், தங்களின் இழி நிலைக்குக் கொண்டுவர முடியும் என்றும் அச்சத்தினால் மனிதப் பண்பாட்டைச் சிதைக்க முடியும் என்றும் கருதினர்.

ஆனால் அவர்களது எண்ணம் தோல்வியுற்றது. மனித உணர்ச்சியைத் தங்கள் இதயத்திலிருந்து அறவே சிதைக்கவல்ல இம்மிருகங்களால், மனிதன் தனது உயிரினும் இனியதாகக் கருதிக் காத்து வருகிற சுதந்திர ஆர்வத்தை நசுக்க முடியவில்லை. அவ்வெறியர்களுக்கு செக்கோஸ்லோவேகிய மக்கள் பணியவில்லை. சித்திரவதை செய்தும் போலிஷ் மக்கள் அடங்கவில்லை. கிரீசும் யுகோஸ்லேவியாவும் எதிரிகளைப் பழிவாங்கின ஹாலந்து. பெல்ஜியம், பிரான்சு, நார்வே முதலிய நாட்டு மக்கள், நம்பிக்கை என்னும் சுடர் அணைந்துவிடாமல் காப்பதற்காக வீரப் போரிட்ட தியாகிகளைப் போற்றுகிறார்கள்.

அடிபணிய மறுத்த பிரிட்டன் மீது, ஹிட்லர் இராப் பகலாக, பல வாரங்கள் குண்டுகளை வீசினான். பலன் இல்லை.

ஜப்பான் கோழைத் தனமாய்த் திடீரென்று தாக்கியதும், வேக் தீவிலிருந்த ஒரு சில அமெரிக்க கடற்படையினர், அடி பணியாமல் போரிட்டு மாண்டனர். பிலிப்பைன் தீவிலும், அமெரிக்க பிலிப்பைன் துருப்புகள் வீரப் போரிட்டன.

நாஜிகளின் கடுமையான தாக்குதலைக் கண்டு, இங்கிலாந்தோ அல்லது அமெரிக்காவோ கலக்கமுறவில்லை.

ஐரோப்பா முழுவதிலும் உள்ள தொழிற்சாலைகளையும் இராணுவ பலத்தையும் தன் வசப்படுத்திக் கொண்டு ஹிட்லர் சோவியத் யூனியன் மீது தொடுத்த பிரம்மாண்டமான தாக்குதலோடு ஒப்பிட்டுப் பார்த்தால். இங்கிலாந்தும் அமெரிக்காவும் அனுபவித்த இன்னல்கள் கடுமையானதல்ல என்றுதான் சொல்லவேண்டும், சோவியத் யூனியன் மீது ஏவி விடப்பட்ட இராணுவ தாக்குதலைப் போல் சரித்திரத்தில் காண முடியாது. இரண்டாயிரம் மைல் நீளமுள்ள போர் முனை எங்கும், அந்நாடு தாக்கப்பட்டதைப் போல், இதுவரை நிகழ்ந்ததில்லை. 'மங்கோலியர்' 'ஹன்ஸ்' போன்ற காட்டுமிராண்டிகளின் காலத்தில்கூட, ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் சென்றவர்கள், மிருகங்களும் வெட்கித் தலைகுனியும்படி, அத்தனை கொடுமைகளை இழைக்கவில்லை.

ஹிட்லரின் கொடியவர்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் சுடுகாடாக்கினர். பெண்களைக் கற்பழித்தார்கள். குழந்தைகளை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தார்கள். ஆயிரக்கணக்கான மக்களைச் சவக்குழி தோண்டச் செய்து, பிறகு அவர்களைச் சுட்டுத் தள்ளினர். எத்தனையோ பேர்களை உயிருடன் புதைத்தார்கள். நூற்றுக்கணக்கான குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் அடைத்து, கட்டிடங்களில் தீ வைத்தார்கள். ஆயிரக்கணக்கான வயோதிகர்களைப் பனிப் புயலில் அடித்துத் துரத்தி மடியச் செய்தார்கள். மனித உருத்தாங்கிய இவ்விலங்குகள் துப்பாக்கிகளாலும் குண்டுகளாலும் சோவியத் மக்களை அழித்துவிட முயன்றார்கள். ஆனால், அவர்கள் படுதோல்வியுற்றனர்.

உலகம் பிரமிக்கும்படி சோவியத் மக்கள் கிளர்ந்தெழுந்து எதிரிகளை எதிர்த்து நின்றவுடன், மனித சமுதாயத்தை அடிமைப்படுத்த நாஜி மிருகம் கண்ட கனவு

நொறுங்கி வீழ்ந்தது. தடுத்து நிறுத்த முடியாது என்று கருதப்பட்ட போர் இயந்திரம் மாஸ்கோ லெனின்கிராடு வாசல்களின் முன்னால், நகர முடியாமல் நின்றது. கெய்சர் முதலாவது உலகப் போரில் நான்கு வருஷங்களில் பறிகொடுத்த போர் வீரர்களை ஹிட்லர் ஒன்பது மாதங்களில் பலியிட்டான். இந்த ஒன்பது மாதங்களில் ஹிட்லர் சோவியத் யூனியன் மீது ஏவின பிரமாண்டமான இயந்திரப் படைகளும், மழைபோல் பொழியப்பட்ட குண்டுகளும் விளைவித்த கொடுமைகளை சீர்தூக்கிப் பார்த்தால், இதற்கு முன் நடந்த மின்னல் போர்கள் எல்லாம் வெறும் குழந்தை விளையாட்டுத்தான். சோவியத் போர் வீரர்களும்,விமானிகளும் கொரில்லாக்களும்,பெண்களும், வாலிபர்களும் குழந்தைகளும் லட்சக் கணக்கில் மடிந்தார்கள். சில சோவியத் குடியரசுகள் அடியோடு அழிக்கப்பட்டன செஞ்சேனை பின் வாங்கியது. ஆனால், சோவியத் யூனியன் நசுக்கப்படவில்லை. அதன் சேனைகள் அழிக்கப்படவில்லை. செஞ்சேனையின் அணிவகுப்பு ஒரு முறையாவது சீர்குலையவில்லை.

1943–ம், வருஷம் குளிர்காலத்தில் மகத்தான ஸ்டாலின்கிராடு வெற்றிக்குப் பிறகு, செஞ்சேனை எதிர்த்தாக்குதலைத் தொடங்கியது. போரின் கடைசி கட்டத்தில் எதிரியைக் காட்டிலும் அதிக பலம் உள்ளதாக இருக்க வேண்டும் என்று இராணுவ நிபுணரான ஷாப்போஸ்நிக்கோவ் வகுத்த திட்டம் வெளியாகிறது புதிய போர்க் கருவிகளை; செஞ்சேனை கொண்டுவந்து குவித்ததும் உலகம் பிரமித்தது. ஹிட்லரின் கொலைபாதகர்கள் திகிலடைந்தனர். நாஜிகள் ஸ்டாலின்கிராடில் படுதோல்வி அடைந்த பின், தொடர்ந்து காக்கஸஸ், ராஸ்டோவ்.

கார்கோவ், கர்ஸ்க் ஆகிய இடங்களிலும் அவர்கள் முறியடிக்கப்பட்டனர். இராணுவ வரலாற்றில் இது ஒரு புதுமை. 1943-ல், செஞ்சேனை அடைந்த வெற்றி, சரித்திரம் கண்டறியாத நிகழ்ச்சி.

இம்மாபெரும் போராட்டத்தைச் சமாளிக்க சோவியத் யூனியன் எவ்வாறு தயார் செய்து வந்தது என்பதையும், எதிர் பார்த்த பாசிஸ தாக்குதலை எதிர்க்க பத்து வருஷங்களாக விஞ்ஞானம் என்னும் ஆயுதம் எப்படி தயாரிக்கப்பட்டது என்பதையும், ஐரோப்பாவின் தொழில் பலம் முழுவதையும் கொண்டு பாஸிஸம் எங்ஙனம் தாக்கியது என்பதையும், நாம் பார்த்தோம். அந்த ஆயுதம் தனது பெருமையை நிருபித்து விட்டது.

அந்த ஆயுதத்தைக் கையாண்ட மக்கள் எப்படிப் பட்டவர்கள்? சோவியத் யூனியனை அழித்துவிடப் போவதாக ஹிட்லர் மார்தட்டிப் பேசிய ஜம்பத்தை, வெறும் கேலிக் கூத்தாக்குவதற்கு உரிய பலத்தையும் சகிப்புத் தன்மையையும் சோவியத் மக்களுக்குக் கொடுத்தது எது? போர் வீரர்களை படை படையாகத் தோற்றுவித்த மனோ வலிமை எத்தகையது?

சோவியத் மக்கள் குருட்டுத்தனமாய் போர் புரியவில்லை. தங்கள் தாய் நாட்டைப் பாதுகாக்கிறோம் என்ற காரணத்தினால் தாக்குப் பிடித்து நிற்கவில்லை. சர்வாதிகாரம் என்னும் சவுக்கடியால், அவர்கள் போர் புரியும்படி வற்புறுத்தப்படவில்லை.

நிராயுதபாணிகளாக ஜாரின் பயங்கர ஆட்சியைத் தூக்கி எறிந்த பதினெட்டுக் கோடி மக்கள், தாங்கள்

எதற்காகப் போரிடுகிறோம் என்பதை நன்குணர்ந்து போரிட்டார்கள். மகத்தான புது வாழ்வை அளித்த சுதந்திரத்தை — எல்லையற்ற முன்னேற்றப் பாதையை சுட்டிக்காட்டிய சுதந்திரத்தை—தங்கள் கனவை நனவாக்கிய சுதந்திரத்தை–பாதுகாக்கவே அவர்கள் போரிட்டார்கள்!

சோவியத் மக்கள் அனைவரும் மாபெரும் சேனையாகத் திரண்டு ஏன் வீரப் போரிட்டார்கள்? ஹிட்லர் அடிமைப்படுத்திய பிறநாட்டு மக்களிலிருந்து சோவியத் மக்களை வேறுபடுத்திக் காட்டியது எது? இவற்றின் காரணங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

ஹிட்லரை எதிர்த்துப் போரிடுவதினால், ஒரு ஆலையோ, சுரங்கமோ, பண்டகசாலையோ லாபம் திரட்ட வில்லை என்பதை சோவியத் போர் வீரரும் மக்களும் நன்கு அறிவர். பங்குத் தொகைகளுக்கு ஆதாய ஈவு யாதொன்றும் சோவியத் யூனியன் பிரித்துக் கொடுக்க வில்லை. இரத்தக்கரை படிந்த போர் முனைகளிலிருந்து எவரும் செல்வம் திரட்டவில்லை.

பொருள் உற்பத்தியைக் குறைப்பது துரோகம் என்று சோவியத் தொழிலாளர் கருதினர். ஏனெனில், போர் முடிந்ததும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமே என்ற பயம் அவர்களுக்கு இல்லை. விரைவில் போரை முடிக்கத்தான் அவர்கள் விரும்பினர்கள். போருக்கு முன் அவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் வேலை உத்தரவாதம் செய்யப்பட்டிருப்பதைப் போல், போருக்குப் பிறகும் நிச்சயமாக வேலை கொடுக்கப் படும் என்பதில் அவர்களுக்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

சோவியத் போர் வீரரும் விமானிகளும் மாலுமிகளும் போரிடும்போது தங்கள் சம்பளத்தைப் பற்றி சிந்தித்ததே கிடையாது. வாழ்க்கைக்குப் போதுமான பணம் வேண்டுமே என்ற பிரச்னை அவர்கள் மனதில் எழுந்ததில்லை. தாங்கள் முடமாகி விட்டால் அல்லது இறந்து போனால், தங்கள் மனைவி மக்கள் பிழைப்புக்கு வழியின்றித் தவிக்க நேரிடும் என்ற பயமின்றி அவர்கள் போரிட்டனர்.

சோவியத் பெண்களும் தாய்மார்களும், தங்களுடைய காதலர்களுடனும் கணவர்களுடனும் நின்று, விரோதியை எதிர்த்துப் போரிட்டார்கள். ஏனெனில், அவர்களுக்கு வாழ்க்கையில் சம அந்தஸ்தைத் தந்த சோவியத் முறையை பாதுகாக்க அவர்கள் வீரப்போர் புரிந்தார்கள். திருமணத்தை சமமான ஆண் பெண் இருவரின் கூட்டுறவாக்கி குடும்பத்தை புதிய கௌரவமான அந்தஸ்துக்கு உயர்த்திய ஒரு வாழ்க்கை முறையைப் பாதுகாக்க அவர்கள் போரிட்டார்கள்.

சோவியத் கூட்டுப் பண்ணைகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும், ஏராளமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து குவித்தார்கள். விரோதி முன்னேறிச் சென்ற இடங்களில் தானியம் ஒரு மணி கூட அவனுக்குக் கிடைக்காதபடி மனப்பூர்வமாக அழித்தார்கள். நாஜிகள் தங்க இடமின்றித் தவிக்கும் பொருட்டு, வீடுகளையும் கட்டடங்களையும் அவர்கள் தரைமட்டம் ஆக்கினர். ஏன் இந்த ஒப்பற்ற தியாகம்? அந்நாட்டில் விவசாய நெருக்கடி என்ற அச்சமே விவசாயிக்குக் கிடையாது. அவனுடைய கஷ்ட நஷ்டங்களினால் எவரும் பணக்காரர் ஆகமுடியாது. விவசாயம் நாட்டின் நலனைக் கருதுவது. நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதில், விவசாயி பிற மக்களுடன் பங்கு

எடுத்துக் கொள்ளுகிறான். சோவியத் விவசாயி உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தான். அவசியம் ஏற்பட்ட பொழுது அவற்றை அழித்தான். தான் பெற்ற செல்வங்களையும் உரிமைகளையும் நல்வாழ்வையும் பாதுகாக்க கொரில்லா வீரருடன் சேர்ந்து போர் புரிந்தான்.

போர் முடிந்து சமாதானம் ஏற்பட்டதும், நாட்டின் வருமானம் முழுவதும், புனர் நிர்மாணத்திற்காக செலவு செய்யப்படும் என்ற முழு நம்பிக்கையுடன் சோவியத் மக்கள் போரிட்டார்கள். வெற்றிக்காகப் போரிடாத எவருக்கும் கால் காசு கூடக் கிடையாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

வெற்றிக்குப் பிறகு, தங்கள் நாட்டில் யாசகர் கூட்டம் நடமாடாது என்பதை சோவியத் மக்கள் அறிவர். கஞ்சித் தொட்டிகளுக்குப் பதில் கலைக் கோயில்களையும் விளையாட்டு மாளிகைகளையும் கட்டுகின்ற ரகசியமும் அவர்களுக்குத் தெரியும்!

ஒருவன் தனது திறமையால் மட்டுமே வாழ்க்கையில் முன்னேற முடியும் என்ற நிலைமையை, சோவியத் மக்கள் உண்டாக்கி விட்டார்கள் எனவே பணத்தின் மதிப்பும் பலமும் ஒழிக்கப்பட்டு, உழைப்பு ஊக்கம் திறமை இவற்றால் வாழ்க்கையில் வெற்றியும் பெருமையும் பெறக்கூடிய உலகில், தங்கள் குழந்தைகள் வாழ்வதற்காக அவர்கள் போரிட்டார்கள்.

நிறவேற்றுமை "கேவலமான அன்னியர்" என்ற வெறுப்பு, ஆபாசமான சேரிகள், கவனிக்கப்படாத நோயாளிகள், கொலை, கொள்ளை, விபசாரம், வேலையின்மை, ஓயா உழைப்பு, வறுமை, மனம் தளர்ந்த வயோதிகம் ஆகிய கொடுமைகள் அங்கு இல்லை. சோவியத்

மக்கள் இக்கொடுமைகள் அனைத்தையும் ஒழித்துக்கட்டி விட்டனர். எனவே, கடந்த காலக் கொள்கை நோய்க ளைப் புதிய ரஷ்யாவில் பரப்ப முயற்சித்த நாஜிக் கிருமி களை எதிர்த்து, சோவியத் மக்கள் உறுதியுடன் போராடி னார்கள்.

அவர்களுடைய புதிய வாழ்வு இக்காரியங்களைச் சாதித்திருக்கிறது; இக்கனவுகளை நனவாக்கி இருக்கிறது; இவ்வுரிமைகளை அவர்களுக்கு அளித்திருக்கிறது. இத் தகைய புது வாழ்வைக் காக்க, சோவியத் மக்கள் போரா டினார்கள். விஞ்ஞானம் என்னும் ஆயுதம் தாங்கி, சோவி யத் மக்கள், தங்களது சமூக அமைப்பின் நியாயத்தில், தங்களுக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையால் ஆவே சம் கொண்டு, நிகழ்த்திய வீரச் செயல்களும் தியாகங்க ளும் மனித சமுதாயத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக் களால் பொறிக்கப்படும்!

அவர்களைப் போன்ற ஒரு குறிக்கோள் நமக்கும் வேண்டும். அத்தகைய குறிக்கோளை நாம் கண்டுபிடித்து, அதை நோக்கி முன்னேறுவது நிச்சயம். மிருக உள்ளம் படைத்தவர்களிடமிருந்து நம் வாழ்க்கையைப் பாதுகாக்க நடத்துகின்ற போராட்டத்தில், சுதந்திரம், பாதுகாப்பு, முன்னேற்றம் என்ற வார்த்தைகளின் உண்மைப் பொருளை உணருவோம். சோவியத் மக்கள் தங்கள் குடியரசுகளில் அடக்குமுறையைக் களைந்து எறிந்தது போல், நாமும், நம் நாட்டுக்கும், அன்பப்படுகிற பிற நாடு களுக்கும் உண்மையான விடுதலை அளிக்க வேண்டும். ஹிட்லரையும் அவன் கூட்டாளிகளையும் பூண்டோடு களைந்தெறிய வேண்டும். அத்தகைய மிருகங்கள் இனி ஒருபோதும் தலையெடுக்க வழியின்றிச் செய்ய வேண்டும்.

நாகரிகத்தின் விரோதியைத் தோற்கடித்து இறுதி வெற்றிக்காக நடைபெறுகின்ற புனிதப் போரில், சோவியத் நாட்டிலுள்ள ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் தங்களையே தியாகம் செய்து விட்டார்கள். விதவைகளையும் அனாதைக் குழந்தைகளையும் லட்சம் லட்சமாகக் கணக்கிடலாம்.

சோவியத் மக்களின் ஒப்பற்ற தியாகமும் துன்பமும் நம்மை அவர்களுடன் பிணைக்கிறது!

நம் தோழர்கள் என்ற உரிமையுடன் அவர்களை நாம் அழைக்கிறோம். அவர்களுக்கு நமது நன்றி. இரத்த வெள்ளமும் கண்ணீர் பெருக்கும், நம்மை அவர்களோடு பிணைத்து இணைபிரியாத நண்பர்களாக்கி விட்டன.

கிழக்குப் போர் முனையில் உயிர் நீத்த லட்சக்கணக்கான மக்கள், நமக்காக உயிர் நீத்தார்கள் என்று, இப்போது நமக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்காகக் கண்ணீர் சிந்த வேண்டாம். அவர்களை வெல்ல முடியாது, அவர்கள் சாவிலும் வீரர்! அவர்கள் என்றும் வாழ்கிறார்கள்! அவர்கள் சிந்திய இரத்தம் வருங்காலத்தின் நாளங்களில் ஓடுகிறது!

முடிவுரை.

"உயர்த்து நீ கையை உயர்த்து நீ கையை
உறுதி யுடன் நீ உயர்த்துன் வலக்கை
வீரத் தியாகிகள் கல்லறை மீதே
கொடுமை தகர்க்க உயர்ந்த கை கோடி
கொடுமை யாளரைக் குவலயத் திருந்து
ஒழிக்கும் வரைக்கும் உயர்ந்த கை அவையே
மக்கள் தம்மூடை மா பெரும் சக்தி
எல்லையின் சின்னமா எடுத்த கை அவையே
விடுதலை இன்பம் விளங்கு நல் அமைதி
மானிட சாதி மகிழ்ந்திட வென்று
வையத்து மனிதன் வாழ்வாங்கு வாழ
வைத்திடுகை அவை வலக்கை உயர்த்து நீ."

23-6-86